ஜகன் மோகினி

விக்ருதி சித்திரை. 1—5—'50. அணா நான்கு

3

27-வது ஆண்டு

இவ்விதழில்

- ஒரு முழு நவீனம் — புது வருடப் பரிசு : “கானகலா”-வை.மு.கோ. 89-வது நாவல்
- வழக்கம்போல் "வீராங்கனை" தொடர்ச்சியும் இதர முக்கிய அம்சங்களும்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
9 JUL 1950
MADRAS

இவ்விதழில் ஒரு முழு நாவல்!

MV11 N22JM
A150·27·5

ஆசிரியை: வை.மு.கோதைநாயகி அம்மாள்

ப்ரதிபாவின்

ஸ்ரீ லக்ஷ்மம்மா

கதை

அஞ்சலி தேவி, நாகேஸ்வர ராவ்,
சிவராவ், பிரபாகர்
ஆகியோர் நடித்தது.

ஆந்திராவில்

9-வது வாரம்

தமிழ் நாட்டில்

முக்கிய நகரங்களில் நடைபெற்று வருகிறது. உங்களூர் தியேட்டரில் விரைவில் எதிர் பாருங்கள்.

டைரக்ஷன் & தயாரிப்பு:

ஜி. பலராமய்யா

ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும்
பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு.
— திருவள்ளுவர்

ஜகன்மோகினி யென்னுஞ்
சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி!
மனத்தைச் சார்ந்து.
— வீரராகவ கவி

Vol. 27 விக்ருதி ஹு May.
No. 5. சித்திரை மீ 1950

மங்களகரமாய்ப் பிறந்திருக்கும் விக்ருதி புத்தாண்டு நம் மனேவருக்கும் சகல நன்மைகளேயும் விளேவிக்குமாக!

நம் வாசகர்களுக்குப் புத்தாண்டுப் பரிசளிக்கத் தீர்மானித்து இவ்விதழில் வை. மு. கோ 89-வது நாவல் ''கானகலா'' பூர்த்தியாக வெளியிட்டுள்ளோம். தனிப்பதிப்பில் 8 அணு விலேயுள்ள இந்நாவல் இப்போது மோகினி வாசகர்களுக்கு முற்றிலும் இனுமாகவே கிடைக்கிறது. வழக்கம்போல் ''வீராங்கனே'' தொடர்ச்சியும், சுத்தானந்தபாரதி, பி. ஸ்ரீ., சகோதரி சுபலக்ஷ்மி, வசுமதிராமஸ்வாமி முதலியோரின் விஷயதானங்களும் உண்டு.

புத்தாண்டு வீரர் வருக!

சொல்லும் செயலும் ஒன்று பட்ட
தூய வீரர் வருக
வெல்லும் சக்திக்கலே வளர்த்து
வியன் செயல்கள் புரிக

மனமும் ஒன்றி இனமும் ஒன்றி
வலிமை பெற்று வாழ்வோம்
ஜனகணமனச் சாட்சி யான
சட்ட மொன்றைப் பணிவோம்

உள்ளும் புறமும் கள்ளமின்றி
உண்மையறிவு பொலிய
பிள்ளே போல வஞ்ச மின்றிப்
பேசிப்பழகிக் கலப்போம்...

வடக்கு கிழக்கு தெற்கு மேற்கு
மனவிகாரம் இன்றி
அடக்குமுறையும்அகந்தைப்பேயும்
ஆசைவெறியும் இன்றி

பயிர் செழிக்கப் பால் செழிக்கப்
பண்டமாற்றுச் செழிக்க
உயிர்செழிக்க மனேசெழிக்க
உலகு செழிக்க உழைப்போம்.

ஆதிபகவன் அளித்த உலகில்
ஆண்பெண் ஆடும்வாழ்வில்
சாதிசமய பேதமின்றிச்
சரிநிகராய் வாழ்வோம்.

சுத்தானந்த பாரதி

வானர மகாநாடு

(குர்குர் நிருபர் குறிப்பிலிருந்து)

'தமிழ்ப் புது வருஷத்தை முன்னிட்டு, நாமும் இப்புத்தாண்டில் ஒரு புதிய சுதந்திரயுகத்தை ஏன் தோற்றுவிக்கலாகாது? பரிபூர்ண சுதந்திர வானர ஜனநாயகக் குடியரசுப் பிரகடனம் செய்துவிட்டால் என்ன?' என்று வானர மகா ஜனங்களெல்லாம் ஒரு மகாநாடு கூடி ஆலோசனை செய்தார்கள்.

ஆரம்ப விழா

மகாநாடு தமிழ்ப் புதுவருஷப் பிறப்புநாளில் விமரிசையாகத் தொடங்கியது. நம தமிழகத்திலே, பிழைக்க வழித்தேடிப் பலரும் பட்டணம் போய்விட்டதால் பாழடைந்த ஒரு கிராமத்திற்கருகே, மனித ஜன நடமாட்டம் அற்றுப்போயிருந்த காட்டுத்தோப்பிலே நடைபெற்றது.

மழைக்கும் உணவுக்கும், பொது அறிவுக்கும்கூட நாடெங்கும் பஞ்சம் ஏற்பட்டிருந்தபோதிலும், தாம்பிரபருணியாற்றங்கரையிலுள்ள அந்தக் காட்டுத்தோப்பிலே மண்ணரசி—பூமித்தாய்—'நான் இன்றும் கட்டழகி' என்று தெரிவிப்பதுபோல் ஆனந்த நடனம் ஆடிக்கொண்டிருந்தாள்.

தோப்பிலுள்ள தென்னை மரங்கள், மாமரங்கள் எல்லாம் காற்றிலே தலையும் கிளையும் ஆட்டிக்கொண்டிருந்தன. இது, வானரவாசாலகர்களுக்கு 'சபாஷ், சபாஷ்' என்று சிரக்கம்பம் கரகம்பம் செய்வதுபோல் தோன்றியது. பூஞ்செடிகளும் கொடிகளும் தங்கள் மலர்ச்சிரிப்பால் மகாநாட்டினரைக் 'குஷி'ப்படுத்தின.

குயில்கள் கானம்பாட, மயில்கள் நாட்டியக்கச்சேரி செய்ய ஆரம்பமாகிவிட்ட மகாநாடு திருவாலர் பெருங் கருங்குரங்கைத் தலைமைப் பதவியில் அமரச்செய்தது.

வரவேற்புரை

வரவேற்புக் கழகத் தலைவரான திருவாலர் செங்குரங்கனுர் தமது வரவேற்புரையினிடையே, 'வானர உலகத்திலும் ஒரு காலத்தில் வெள்ளை வானரங்களின் ஆதிக்கம்தான் இருந்தது' என்று ஓர் ஆராய்ச்சி தொடங்கினர், 'வெட்கம், வெட்கம்' என்ற கூச்சல்களுக்கிடையே. 'வானரர்களுக்குப் பெருமைகொடுக்கும் இதிகாசமாகிய ஸ்ரீமத் ராமாயணம்கூட, சுவேத (வெள்ளை) வானரங்களுக்குத்தான் அப்பெருமையை ஏகபோகமாக வழங்கியிருக்கிறது' என்று பிரலாபித்தார்.

'சுவேத வானரங்கள் வெள்ளைக்காரர்களின் முன்னோர்களே!' என்று சித்தாந்தம் செய்தார். 'கருங்குரங்கு செங்குரங்குகளே திராவிட ஆரிய வகுப்பினர்களான இந்தியா வாசிகளின் மூதாதையர்களென்று முழக்கினர். 'நம்முடைய ராமாயணத்தில்கூட நம்முடைய பெருமை வெளிப்படவில்லையே! ஆஞ்சநேய ஸ்வாமி கூட—ஐயோ!—சுவேத வானரம்தானே!' என்று மகாஜன வானரங்கள், உள்ளழுந்த கண்களிலே நீர் வடித்தன.

183(6)
600 008

தலைமைப் பேருரை

தலைவரான திரு. பெருங்குரங்கனார் தமது பேருரையைப் போருரையாக்கிவிட்டார். 'வானரங்கள் மனிதர்களின் முன்னோர்' என்ற கொள்கையையே ஆவேசமாக அடித்துப்பேசத் தொடங்கினார். மனித விஞ்ஞானிகளின் ஆராய்ச்சிகளை அப்படியே நம்புவது மூடநம்பிக்கை என்றார். 'டார்வின் முதலான விஞ்ஞானப் பண்டிதர்களின் சித்தாந்தத்தை வானரவிஞ்ஞானப் பேராசிரியர்களும் வானளாவப்புகழ்வது சரியன்று; அதை ஜாக்கிரதையாகச் சோதித்துப் பார்க்கவேண்டும்' என்றார்.

வாதப் பிரதிவாதங்கள்

இந்தப் பெரும்பிரச்சினை குறித்துச் சபையில் விவாதங்களும் எதிர்வாதங்களும் எழுந்தன.

மனிதர்களுக்கு உண்மையாகவே வானர பரம்பரை இல்லாவிட்டால், அவர்கள் ஏன் நம்மை முன்னோர் என்று சொல்லிக் கொள்ளவேண்டும்? பிராம்மணர்கள் "நாங்கள் பிரம்மகுலம், ரிஷி பரம்பரை" என்றெல்லாம் பெருமையடித்துக்கொள்வதுபோல, நாகரிக ஏணியின் உச்சியில் ஏறித் தலைகால்புரியாமல் நிற்பவர்கள் நம்மோடு உறவு கொண்டாடுவானேன்? கொஞ்சிக்குலாவுவானேன்! "வானரகுல கோத்திரம்" பேசுவானேன்? இனிமேல் ரிஷிகோத்திரத்திற்குப் பதில் 'வானரகோத்திரம்" சொல்லித்தான் நவநாகரிக பிராம்மணர்களின் சந்தியாவந்தனம் முதலான கர்மானுஷ்டானங்களும் நடைபெறும் என்று என் புத்தியில் படுகிறது. நாமோ உறவுபிடித்தாலும் விடமாட்டோம்—ஒரே குரங்குப்பிடிதான்!' என்று வாய்வீச்சுவீசினார் ஒருவானர வாசாலக பிரகஸ்பதி.

இவரோடு எதிர்வாதம் செய்ய முன்வந்த வேறொரு வாசாலகர் வாய்வீச்சும் வால்வீச்சுமாய், 'அக்கொள்கையை நான் ஒட்டிப் பேச எழுந்தேனல்லேன். வெட்டிப்பேச விரைகின்றேன்' என்று ஒருகிளையிலிருந்து வேறொரு கிளைக்கு விரைந்தார்.

'வால் இல்லாத நரர்கள் வால்—நரர்களுடன் உறவு கொண்டாடுவது கண்டு யான் நாணித் தலைகுனிகின்றேன்' என்றார். 'நம்முடைய இனம் ஆரிய திராவிட இனங்கள் தோன்றுவதற்கு எவ்வளவோ காலத்திற்கு முன்பு தோன்றியது. தொன்மைமட்டுமா நமது மாட்சி? நமது நாகரீகம் எங்கே, மனித நாகரிகம் எங்கே? நமது வானரப் பண்பாடு எங்கே, மனிதப் பண்பாடு எங்கே?' என்று சொல்லிக்கொண்டே, ஒரு வாழைமீது தாவிப் பழக்குலையை ருசி பார்க்கப் போய்விட்டார்.

என்றாலும், எதிர்வாதம்தொடர்ந்து நடந்தது, வேறு சில வாசாலகர்மூலமாக. ஒரு குரங்கர் மரக்கிளையொன்றில் தலை கீழாகத் தொங்கி ஊஞ்சலாடியவண்ணம், 'அந்தக்குரங்கு—விஞ்ஞானி தன் இனத்தையே ஒழித்துவிட அணுக்குண்டு ஜலவாயுக்குண்டுகள் கண்டுபிடித்திருக்கிறார்? துப்பாக்கி, கத்தி கொண்டுதான் நாம் சண்டைபோடுகிறோமா? அந்த நாகரீகம், அந்தப் பண்பாடு, நமக்கு வேண்டாமப்பா!' என்றார்.

ஒரு குரங்கர் வேறொரு குரங்கருக்குப் பேன்பார்த்தவண்ணம், "மனிதன் யுத்தகாலத்தில்தானு பேயாட்டமாடுகிறான்? சமாதான காலத்தில் வாழ்க்கைநடத்தும் அழகுதான்என்னே,என்னே! ஒரு தினப்பத்திரிகையை எடுத்துப்பார்த்தேன். எத்தனை விவாகரத்துகள்! அடடா! அப்படி மனைவியைக் கைவிட்டுக் குழந்தைகளையும் தவிக்கவிட்டுக் கொல்லாமல் கொல்லும் ஹிம்ஸை-நெறியில் நமது வானர ஜாதி நடப்பதில்லையே!' என்று பிரசங்கித்தார்.

ஒரு தீர்மானம் நிறைவேறுகிறது

இந்த வாதப் பிரதிவாதங்களின் பயனுக, 'வானர ஜாதிக்கும் மனித ஜாதிக்கும் சம்பந்தம் இல்லை. இருந்தால் அது வானர ஜாதிக்கும் அவமதிப்பே யாகும். ஆனல், வானர விஞ்ஞான பண்டிதர்களும் டார்வின் பண்டிதரின் பரிணாம வாதத்தை ஒப்புக்கொண்டு "மனிதர்களும் நம்முடைய உறவினரே" என்று ருசுப்படுத்திவிட்டால், என்செய்வது? எப்படியும், நம்முடைய போக் குழந்தைகளாக மனிதர்களை மதிக்கமாட்டோம். தாயாதிகளாகப் பகைத்துத் தாயாதிச் சண்டைகள் போடுவோம். அவர்கள் நம்முடைய உறவை விடமுடியாதென்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டால், அத்தான்–அம்மாஞ்சி உறவைமட்டும் வைத்துக்கொண்டு "அட அம்மாஞ்சி மனிதா!" என்று வாய்குளிர அழைப்போம்' என்று ஒரு நீண்ட தீர்மானம் மகாநாட்டில் நிறைவேறியது.

பொதுவுடைமைத் தீர்மானம்

'ஜனநாயகக்குடியரசு போதுமா நமக்கு? ஒரு பொதுவுடைமைக் குடியரசையே பிரகடனப்படுத்திவிட்டால் என்ன?" என்பது குறித்துக் காரசாரமான விவாதங்கள் நடைபெற்றன.

கடைசியாக ஒரு வானர அரசியல் ஞானி ஒரே தாவாகத் தாவிப் பிரசங்கமேடைக்கு வந்து, 'பொதுவுடைமையை நாம் இனிமேல்தானு பிரகடனம் செய்யவேண்டும்? ஏற்கெனவேதான் அது அமுலில் இருக்கிறதே! ஸ்டாலின் துரைக்கும் லெனின்துரைக்கும் மகரிஷி மார்க்ஸுக்கும் முன்பே—நீண்டகாலத்திற்குமுன்பே—நாம் பொதுவுடைமை வாதிகள்!' என்றார்.

'அதெப்படி? ருசுப்படுத்தவேண்டும்' என்று பல குரல்கள் கிளம்ப, இந்த வாசாலகர் ஒரு குரங்குச் சிரிப்புச் சிரித்துவிட்டு, 'சகோதர சகோதரிகளே! அதோ அந்தத் தென்னைமரத்தில் இளநீர் சாப்பிட்டுக்கொண்டிருக்கிறாரே நமது தோழர் திருவாலர் செம்முகக்கருமேனியர்,—அவரையே கேட்டுப்பாருங்கள்' என்றார்.

பிறகு தென்னைமரக்குரங்கர் பேசினர். 'இந்தத் தென்னைமரத்தில் நான் இளநீர் மட்டுமல்ல தேங்காயும் சாப்பிடுகிறேன், அக்கிராசனஸ்வாமீ! எவ்வளவோ காலமாக இந்த அனுபவ பாத்தியதை எனக்கு உண்டு. என்றாலும், இந்த மரத்தைச் சுற்றி நான் வேலிபோட்டிருக்கிறேனு? ஒரு வேலியாவது போட்டு, "இது என்னுடைய சொத்து" என்று ஏகபோக உரிமை கொண்டாடுகிறேனு? "தேங்காய்கள் வீணுய்ப்போனுலும் போகட்டும். நான் அமிதமாகத் தின்று அஜீர்ணத்தால் கஷ்டப்பட்டு செத்தாலும்

பாதகம் இல்லை. ஏழைக் குரங்குகள் பட்டினி கிடந்து சாக வேண்டியதுதான்!" என்று எப்போதாவது இரக்கமில்லா அரக்கர் போல்—ஏன், மனிதர்போல்—நான் பயமுறுத்தியிருக்கிறேனா?"

'இல்லை, இல்லை. நீர் அப்படிச் சொன்னாலும் நாங்கள் கேட்கவாபோகிறோம்? பசியுள்ள குரங்கு பறித்துத் தின்றுவிடுமே' என்று பூஞ்செடிகளைப் பிய்த்து ஏதோ ஆராய்ச்சி நடத்திக்கொண்டிருந்த ஒரு விஞ்ஞானக் குரங்கனார் குறுக்கிட்டார்.

தோழர் தென்னைமரக் குரங்கர் மீண்டும் பேசினார்: 'பசியுள்ளவன் பறித்துத் தின்பதை மனிதர்கள் "திருட்டு" என்கிறார்கள். தண்டனை விதிக்கிறார்கள். இதற்குச் "சட்டம்" என்றும், "நீதி" என்றும் பெயராம். நம்முடைய வானர மகா ராஜ்யத்திலோ இந்த விநோத விபரீதங்களெல்லாம் இல்லை. நமக்குத் தென்னை மரங்களும் மாமரங்களும் பூஞ்செடிகளும் பொதுவுடைமைதான். மனிதர் ஏமாந்து நின்றால், அவர்களுடைய உணவுகளும் அவர்களோடு நமக்கும் பொதுஉடைமைதான்! நாமெல்லாம் பொதுவுடைமைத் தத்துவத்தை எவ்வளவு நன்றாக உணர்ந்திருக்கிறோம்!'

இத்தகைய வாதங்களின் பயனாக ஏற்கெனவே ஒரு பரிபூர்ண சுதந்திரப் பொதுவுடைமைக் குடியரசுதான் நமது வானர மகா ராஜ்யமெல்லாம்!' என்ற தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

இது இனி இந்தியாவைப்போல் மதச்சார்பற்ற அரசாங்கமாக இருக்கவேண்டுமா? பாக்கிஸ்தானைப்போல் மதமாத்ஸர்ய மகாராஜ்யமாகத்தான் விளங்கவேண்டுமா? அல்லது ரஷ்யாவைப் போல் கடவுளையும் சக்ரவர்த்தியோடு மகுடபங்கம்செய்துவிட்டு, அவர் திருவடிகளில் இவரைச்சேர்த்துவிட்டு, மதம் இல்லாத மகா ராஜ்யமாக நடத்தவேண்டுமா? இந்த விவகாரங்களில் வானர மகா ஜனங்களால் இந்தப் புத்தாண்டுப் புதுநாளில் ஏகமனதாக ஒரு முடிவுக்கும் வரமுடியவில்லை. ஆகவே இவை அடுத்த தமிழ்ப் புத்தாண்டு மாநாட்டுக்கு ஒத்திவைக்கப்பட்டன.

* * *

சரி, குரங்குக் கவிராயர்கள் தலைவருக்கு வரவேற்பு அளிக்கவில்லையா? ஏன் அளிக்கவில்லை? குரங்குகளில் ஒரு கவிராயரா, இரு கவிராயரா? குரங்குகளெல்லாம் கவிராயர்களேதான். புவிராயர் போற்றும் கவிராயரான காளமேகமே இதை ஒப்புக்கொண்டிருக்கிறார்.

எனவே, வரவேற்புப் பத்திரம் தலைவருக்குப் பாட்டுமயமாகவேயிருந்தது. பிராசம் பிசகாமல் மோனை முறியாமல் பாடுவதும், சிலேடை போடுவதும், குரங்குக் கவிராயர்களுக்குக் குட்டிக்கரணம் போடுவதுபோலவும், மரக்கிளைகளில் ஊஞ்சலாடுவது போலவும் அவ்வளவு சுலபமான, உல்லாசமான காரியம்தான்.

வருக! வருக! வருக! எம் அண்ணல்!
குணக்கடல் வருக! குலச்சுடர் வருக!

ஸ்ரீமதி வஸுமதி ராமஸ்வாமி

அன்றும் இன்றும்

"வா, வா கமலா! வருஷப்பிறப்புப் பண்டிகை ஆச்சா? இரண்டுமாதங்களாக வரவேயில்லையே!"

"கலா வீட்டிற்குப் பக்கத்தில் கீதை உபந்யாஸத்திற்குப் போய்க்கொண்டிருந்தோம். நேற்றுதான் முடிந்தது."

"ஆமாம். கலா சொன்னாள். என்னால் வரமுடியவில்லை. உபந்யாஸம் நன்றாயிருந்ததென்று கேட்டவர்கள் சொன்னார்கள். சாராப்சமாகச் சொல்லு!"

"அதோ கலா, பர்வதம் எல்லோரும் வருகிறார்கள். கலாவே சாராப்சத்தைச் சொல்லட்டும்... வா, கலா! நாம் கேட்ட கீதா உபந்யாஸத்தை சுருக்கமாக மாமிக்குச் சொல்லு."

"ஒரே போடு போட்டாயே! கீதை மஹத்தானது. அதன் சுருக்கம் அவ்வளவு எளிதில் என்னால் சொல்லமுடியுமா? உபந்யாஸம் செய்பவர் ஆங்காங்கு மேற்கோள்கள், உபமானம், உபமேயம், தற்கால நடை எல்லாம் கலந்து ரசமாகச் சொன்னார்."

"அன்று, பெண்கள் காயத்திரீ மந்திரம் சொல்லுவதற்கென்ன? ஆண்கள்தான் அதைப் புறக்கணிக்கிறார்கள். பெண்கள் விடாமல் செய்யக்கூடியவர்கள் என்றால்லவா?"

"அதுதான் பாக்கி இருக்கிறது! வரவர பெண்கள் குடும்ப காரியம் வெளிவேலை இரண்டிலும் ஈடுபட்டுக்கொண்டு தாங்களாகவே சிக்கலிலும், சிரமத்திலும் மாட்டிக்கொண்டுவிட்டார்கள். மாதர்கள் முன்னேற்றமடைந்திருக்கிறார்கள்; அவர்களுக்கு சுதந்திரம் பூரணமாக கொடுக்கப்பட்டிருக்கிறதென்றெல்லாம் நாம் நினைக்கிறோம்—இப்பொழுதுதான் நமக்குப் பொறுப்பும் கஷ்டமும் அசாத்யமாக இருக்கிறது."

"என்ன கலா இப்படி சொல்லுகிறாய்! பழையகாலத்துப் பெண்கள் கிணற்றுத்தவளைகளாக இருந்து எவ்வளவு கஷ்டப்பட்டார்கள். தற்காலத்தில் பெண்கள் சமஉரிமை அடைந்து சௌகரிய

நீடு நீடு நீடு நிலவி
வாழி வாழி வாழியர் நன்றே!

என்றெல்லாம் பாடிக்குவித்துவிட்டனர் வானரக் கவி மணிகள். வால்நீண்ட தலைவரும் பாட்டுக்கு உருகி அந்த நீண்டவாலை முத்தமிட்டுக்கொண்டார்.

* * *

'சரி, சரி! என்ன கதைக்கிறீர் ஐயா? நடந்த கதையா, கற்பனைக் கதையா? நடந்திருக்க முடியுமா? கற்பனையானால் படிப்பினை என்ன? அடிப்படையான தத்துவம் ஏதாவது வேதாந்தப் புதையல், சித்தாந்தப் புதையல் புதைந்து கிடக்கிறதா?'

எனக்கும் தெரியாதையா! இந்தக் குறிப்புக்கள் எழுதிய திருபரையோ, வானர வாசாலகர்களையோ, மீண்டும் அடுத்த மகாநாட்டில் சந்திக்க நேர்ந்தால் கேட்டுப் பார்க்கிறேன்.

மாக அல்லவா வாழ்கிறார்கள். தாம்பத்திய அன்பு அக்காலத்தில் இப்படி உண்டா!''

''அப்படி சொல்வதற்கில்லை கமலா! பொதுவாக ஆண்கள், பெண்கள் இருவருக்குமே வரவர மனச்சாந்தி மிகவும் குறைந்து விட்டது. அந்தக்காலத்தில் தாம்பத்திய அன்பு இல்லை யென்று சொல்லமுடியாது. நீறு பூத்த நெருப்புமாதிரி அன்பை வெளிக்குக் காட்டாமல் இருந்தார்கள். பெரியவர்களுக்குக் கட்டுப்பட்டு இருப்பார்கள். பெரியவர்களும் அடிக்கடி பிரித்து அன்பை வளர்ப்பார்கள். குடும்ப கௌரவம் குன்றாமல் தாம்பத்தியம் நடக்கும். தவிரவும் நம் சாஸ்திரத்தில் கணவன் மனைவியைக் காக்கவேண்டியவன், அவள் மென்மையைப் போற்ற வேண்டியவன்; ஒரு ஸ்திரீயை மற்ற வனையோர்கள் சகோதரியாகவும், மாதாவாகவும் பாவிக்கவேணும் என்றெல்லாம் நியதிகள் இருந்தன. இயற்கையில் மாதர்கள் மென்மையானவர்கள். பெண்களுக்கு பொறுப்பேற்கும் வயது வர வெகு காலமாகும். பெரியோர்கள் எல்லாவற்றையும் ஏற்று நடத்துவார்கள். கணவனும் அவளைப் போற்றி அன்புடன் காத்துவருவான். அநாவச்ய அலட்டலும், அலைச்சலுமின்றி பெண்கள் திட ஆரோக்கியத்துடன் இருப்பார்கள். இந்த காலத்தின் போக்கே வேறாக இருக்கிறதே!''

''கலா! வெண்ணெயாகப்பேசுகிறாயே! பெண்களை ஆண் வர்க்கம் எவ்வளவு அடிமையாக நடத்தி, துன்பங்களை அனுபவிக்கச் செய்தது? அந்தக்காலம் கொஞ்சங்கொஞ்சமாக மறைந்து பெண் கல்வியும், சமத்துவமும் ஏற்பட்டு விடுதலையை அடைந்திருக்கிறது. நீ சொல்வது வேறுவிதமாக இருக்கிறதே. கலா! உன் மூளையின் வேலைப்பாடே தனி போ!''

''அப்படி இல்லைபர்வதம்! ஒருபக்கம்முன்னேற்றம், சமத்துவம், சுதந்திரம் எல்லாம் அடைந்திருக்கிறோம். அதே சமயம் ஆதரவு, ஆழ்ந்த அன்பு இவைகளை இழந்துதானிருக்கிறோம். தற்சமயம் நாம் கொண்டிருக்கும் வாழ்வு சிக்கல் நிறைந்தது. திரிசங்கு சொர்க்கம்தான். மற்றநாடுகளைப்போன்ற முன்னேற்றமுமில்லை. நம் பாரதநாட்டு பெருமைப்படி கவலையற்ற பழைய நிலையுமில்லை.''

''ஆதிகாலத்தில் பெண் தெய்வமாக கொண்டாடப்பட்டாள். நடுவாந்திர காலத்தில் பெண்கள் பாடும் அந்தரமாய் விட்டது. ஆண்கள் பெண்களை அடிமையாகவும் தாழ்ந்தவளாகவும் கருத முற்பட்டனர். மகாத்மாஜி புருஷனுக்கு உவமை சொல்லவேணுமானால் ராமரையும், மனைவிக்கு உதாரணம் சீதையையும்தான் எடுத்துக் காட்டி உபதேசிப்பார். அதுபோல் சீதை ராமருக்கு அடிமையாகவோ, தாழ்ந்தவளாகவோ நடத்தப்படவில்லை. வனவாஸத்தின்போது கணவனுக்கு தாயைப்போலவும், இன்னும் இதர பாவனையிலும் மட்டுமின்றி தோழமையுடன் சரிசமாகவே ஸீதை இருந்திருக்கிறாள். ஒருவருக்கொருவர் அன்பில் கட்டுப்பட்டார்களே யன்றி அதிகாரத்தில் கட்டுப்படவில்லை. பெண்கள் அடிமை

யாகயிருந்த வேகம் தலைகீழாய் பொறுப்பின்றி நாகரீக ஏணியில் நின்றாலும் அதன் பலனை அவளும் அவள் மக்களும் தான் அனுபவிக்கணும். தற்காலத்தில் ஆண்களைப்போல் படித்துப் பட்டம் பெறுவதுடன் ஆண்களின் வேலையையும் மேற்கொள்வது வேண்டாத வேலை. அறிவு ஆற்றல் நிறைய வேண்டியதுதான். ஆனால் எல்லாவித பொறுப்பையும் இவர்களும் ஏற்கக்கூடாது—ஆண்களும் கட்டக்கூடாது. பரஸ்பரம் அன்பும் ஆதரவும் நிறைந்து இருப்பதுதான் உத்தம வாழ்க்கை."

"எல்லாம் சொல்வது எளிது கலா! நூல் பிடித்தாப் போலிருக்கிறீர்களா! என் பெண் கல்யாணத்திற்கு மாப்பிள்ளை பார்த்தது முதல், மேளம், பந்தல், சாப்பாடு, எல்லாமே நானே கவனித்துக் கொண்டேன். என் கணவர் அவர்தான் புது மாப்பிள்ளை மாதிரி சொகுசாய் சந்தனம் புஷ்பத்துடனிருந்தார்!"

"அதுவே தேவலை. கமலா! கோமதியின் புருஷன் அவர்கள் பெண் கல்யாணத்தில் எப்படிப் பாடுபட்டார் தெரியுமா? சமையலைக் கவனித்து, பெண்ணுக்கும், என் கோமதிக்குக் கூட வேளைக்குத்தகுந்த டிரஸ் எடுத்துக்கொடுத்து மடித்து வைத்து எல்லாமே செய்தார். கோமதி அலங்கார பூஷிதையாக மினுக்கினாள்! அது இன்னும் மோசமல்லவா? எல்லாரும் சிரித்தார்கள். சம்பந்தி அம்மாள் தன் நாட்டுப்பெண் இப்படி இருப்பாளோவென்று கலகத்தைக் கிளப்பினாள்"

"பொதுவாக பெண்களுக்குத்தான் நாலாவித வேலை அதிகரித்திருக்கிறது. என் உபநயனம் செய்துகொண்டு இன்னும் காயத்ரீ மந்திரம் நாமே ஜபிக்கவேண்டியதுதான். உலகம் பலவிதம். வருகிறோம் மாமி"

"இருங்கள் தாம்பூலம் பெற்றுக்கொள்ளவேண்டாமா!"

வை. மு. கோ. நாவல்கள். (தற்போது கைவசமுள்ளவை)

ரூ. 4-8
வைதேகி (2 பாகம்)

ரூ. 2-8
உணர்ச்சி வெள்ளம்
அமுதமொழி (கிளேஸ்)
மலர்ந்த இதழ்

ரூ. 2-4
தயாநிதி
ஞானதீபம்
வாழ்க்கைத் தோட்டம்

ரூ. 2.
வானக்குயில்
ஆத்ம சக்தி
சந்தோஷ மலர்
கருணாலயம்
வாத்ஸல்யம்
மதுர கீதம்
அமுதமொழி (சாதா)
ஆசைப்ரவாகம்
வெளுத்த வானம்
தெய்விக ஒளி
மனத்தாமரை
அமரத்யாகி
ஜீவநாடி

ரூ. 1-12
அனாதைப்பெண்
புகழ்மாலை
இதய ஒலி
சிலாசாசனம்

ரூ. 1-8
பிரதிபலன்
பவித்திரப்பதுமை
ஓவியப் பரிசு
இசைப்புயல்
காலக்கண்ணாடி
ஜயபேரிகை

ரூ. 1-4
கோபாலரத்னம்
மகிழ்ச்சி உதயம்
புதுமைக்கோயில்

ரூ. 1-2
படகோட்டி
அபராதி

ரூ. 1.
வீரவஸந்தா
நளினசேகரன்
மாலதி
வத்ஸகுமார்
பிரதிக்ஞை
ப்ரார்த்தனை
பெண் தர்மம்
உண்மைச் சித்திரம்
தபால் விநோதம்
இனிய முரசு
ஆண்டவனின் அருள்

அணா. 12.
பக்ஷமாலிகா
சுடர்விளக்கு

அணா. 6
உருத்த இதயம்

சாதன ரகசியம்

4. இரண்டு வழிகள்

அன்ப,

கர்மம் ஞானம் என்ற இரண்டு வழிகள் உண்டு. கர்மம் ப்ரவிருத்தி மார்க்கம்; ஞானம் நிவிருத்தி மார்க்கம் என்பர். நிவிருத்தி என்றால் உலகை ஒழித்துக் காட்டுக்கு ஓடிப்போவதில்லை. என் சம்பந்தப்பட்டமட்டில் காட்டில் எப்படி நிம்மதியோ, அப்படி வீட்டிலும் உண்டு. கர்மத்திற்கும் ஞானத்திற்கும் ஓர் இணைப்பு உண்டு. அது தான் பக்தி. அன்புணர்வை மாசற்ற பக்தியாக்கினால் அறிவில் ஊன்றிக்கொண்டே தொழிலைச் செய்து உலகிற்கு உபகாரமாக வாழலாம். இந்த இணைப்பை மறந்துதான் உலகில் இல்லறக் கடலில் தத்தளிக்கும் பெரும்பாலாரும், துறவறத்திலும் அமைதி காணாது, உண்டுறங்கிப் பொழுதைப் போக்கும் சோம்பேறி மடங்களும் பெருகின. பந்தமும் துறவும் அற்ற சம நிலையே நிலை. பக்தி பரவசத்தால் அகம்பாவ வடுவே யில்லாமல் எல்லாம் இறைவனுக்கே நிவேதன மாக்கிவிடு. உனக்கென எதையும் வைத்துக்கொள்ளாதே. உன் உடல், பொருள், ஆவி எல்லாம் இறைவனுக்கே அருளுடைமை யாக்கு. அவன் மயமே உலகெனக்காண். அது தான் சிறந்த ஞானம். இந்த ஞான உணர்ச்சியால் உனக்கு இயன்ற துறையில் பாராலய ஊழியம் செய்; பற்றுறமாட்டாய். என் சம்பந்தபட்ட வரையில் 'உலகம் கோயில்; உயிர்த் தொகுதி இறைவன்; செய்வ தெல்லாம் அவன் வழிபாடு' என்ற உணர்ச்சியே வாழ்வு. செய்வதெல்லாம் அவன் பணி; நினைப்பெல்லாம் அவன்; நீ, நான், அவன், அது எல்லாம் ஒரு மயமே. இந்த நிலை வந்த பிறகுதான் எனக்குத் துறவும் நிறைவானது. அன்பா! உள்ளபடி உணர்; உணர்ந்தபடி உலகாலயப் பணி செய்; இன்புறுவாய். மங்களம் பொங்குக.

5. மந்திர ஜபம்

சாதகனே!

அன்பு, மந்திர ஜபம் சாதனங்களிற் சிறந்தது. மனதை அடக்கியாளவும் சித்தச் சுழலினை நிறுத்திச் சித்த விருத்திகளை அடக்கவும், அந்தக்கரண சுத்தி பெறவும் மந்திர ஜபம் அவசியமாகும். "ஓம் சுத்த சக்தி" என்ற மந்திரத்தை நான் எட்டு வயது முதல் இன்று வரையில் ஒவ்வொரு மூச்சுடனும் ஜபித்து வருகிறேன். எனக்கு சாதி—மத—மூர்த்தி பேதம் கிடையாது. ஆதலால் நான் எதைச்செய்ய விரும்பினாலும் எந்தத் தீர்க்கதரிசியின் உள்ளத்தை அறிய விரும்பினாலும், மூலமந்திரத்துடன் அதன் பெயரையும் சேர்த்து ஜபிப்பதுண்டு. உதாரணமாக பசுமலையில், பைபிள் படித்து ஏசுநாதர் சரிதை எழுதியபோது, "ஏசுநாத சுத்த

சக்தி ஓம்" என்று மந்திரம் ஜபித்தேன். அதனால் ஏசுநாதரின் உண்மையுள்ளமும், உருவும் திருவும் எனக்குப் புலப்பட்டன. இஸ்லாமியப் பயிற்சி செய்த நாளில் "பிஸ்மில்லா சுத்த சக்தி ஓம்" என்று ஜபித்தேன். குரானின் உள்ளம் எனக்கு விளங்கியது. காஞ்சிபுரத்தில் வைஷ்ணவ சாதனம் செய்த நாட்களில் துளசி மாலையில் எப்போதும் 'ஓம் சுத்த சக்தி ராம்!' என்று ஜபித்து வந்தேன். ஆஞ்சனேயராக என்னை நினைத்துக்கொண்டு தாஸபாவ பக்தி செய்தேன். அப்போது எந்த பக்தரையும் பாகவதரையும் 'ஓம் ராம்!' என்று வணங்குவதுண்டு. ஜைனசாதனம் செய்யும் போது பஞ்சநமஸ்காரத்துடன் 'சுத்தசக்தி ஓம்' என்பதையும் சேர்த்து ஜபித்தேன்.

அரசியல் சூறாவளியில் ஈடுபட்ட நாட்களில் "ஓம் சுத்த கர்ம சக்தி ஓம்" என்று ஜபித்தேன். அரசியல் உண்மைகள் நன்றாக விளங்கியதுடன், எனக்கு எவ்விதமான ஆபத்தும் நேராமல் என் தவமும் ஒழுங்காக நடந்தது. என்னைப் பின்தொடர்ந்த இரண்டு ஒற்றர்கள்கூட மிகவும் அன்பாகவும், நான் கேட்ட கேள்விகளுக்குச் சாதகமான பதில் சொல்லியும் வந்தனர். வெளியுலகின் இடர்கள் வரும்போதெல்லாம் "ஓம் ஜய சுத்த சக்தி ஓம்" என்ற மந்திரத்தை ஜபிப்பது உண்டு. ஒரு வாரம் தியான ஜபத்தில் ஆழ்ந்திருப்பேன். உடனே கவலை விலகிப்போகும். என் வாழ்வில் திடீரென்று வரும் மாறுதல்களால் நான் கலங்காமல் இருப்பது ஜப சாதனத்தினாலேதான். ஆனால் நான் யாருக்கும் ஜபசாதனத்தால் தீங்கு செய்ததில்லை.

கண்ணைக் கெடுத்தல், மரபை ஒழித்தல், பிணி தருதல் முதலிய தீங்குகள் செய்வது கொடியர் வேலை. பொல்லாங்கு செய்பவரும் திருந்தி அருள் வழி சேரவே ஜபசாதனத்தை உபயோகிக்கவேண்டும். ஏனெனில் நீ யாரோ அவரே பிறர். உள்ளிருப்பதே உலகிலும் உள்ளது. நீ பிறரைக் கெடுத்தால், அந்தப் பாபம் உன்னைக் கெடுக்கும். வினைவிடாது; வினைப் பயனே வாழ்க்கைநயம்.

ஜபசாதனத்திற்கு ஆசார நியமம் அவசியம். ஆகார சுத்தி அத்தியாவசியம். ஜபத்தை வாய்விட்டுச் சொல்லக்கூடாது. மனதிலேயே ஒலியடங்கும்படி ஜபிக்கவேண்டும். ஜபம் மனத்தில் நல்ல சித்த விருத்திகளை உண்டாக்கும்.

காலை மாலை குளித்து மடியுடுத்தி நிம்மதியாகச் சூரியன் முன் அமர்ந்து ஜபம் செய். முதலில் ஜபமாலை வைத்துக்கொள். யானை கையில் ஒரு சங்கிலியைத் தந்தால் அது, அதை உருட்டிக் கொண்டே வேறு சேட்டை செய்யாதிருக்கும். அதுபோல் ஜபமாலை சதா உன் கையில் உருவேற்றிக்கொண்டேயிருந்தால் மனச் சேட்டை யடங்கும். சூரியன் முன் பதினைந்து நிமிஷமாவது ஜபம் செய். ஆறாண்டுகள் ஜபமாலையுடன் ஜபம் செய்து பழகினால் பிறகு மாலையில்லாமலே ஜபம் நடக்கும். பன்னிரண்டாண்டுகள் இடைவிடாமல் ஜபம் செய்தால் அனாஹத சக்கரம் திறக்கும்; ஓமொலி

கேட்கும். பிறகு ஜபம் தேவையில்லை. "ஓம்" என்று தானே அந்தராத்ம ஜபம் நடந்துகொண்டிருக்கும்.

ஓம், ஓம் சுத்த சக்தி, ஓம் நமச்சிவாய ஓம், ஓம் சக்தி, சுத்தோஹம், ஓம் ராம்,ஹரே ராம ஹரே க்ருஷ்ண க்ருஷ்ணக்ருஷ்ண ஹரே ஹரே, ஸ்ரீ ராம் ஜய ராம் ஜயஜய ராம், ஓம் சிவஷண்முகாய நம:; ஓம் முருகா முதலிய பல ஜப மந்திரங்கள் உண்டு. எதைச் செய்தாலும் ஒருமை, தூய்மை இரண்டும் வேண்டும்.

அன்ப, நீ காயத்திரி மகாமந்திரத்துடன் "ஓம் சுத்த சக்தி" ஜபம் செய். உனக்கு வெற்றிமேல் வெற்றி கிடைக்கும். 'இதய பரமாத்மனை அடைய வேண்டும்' என்ற கருத்துடன் ஜபம் செய். இதயக் கதவு திறக்கும். எந்த இடர் வந்தாலும் கலங்காதே. செய் ஜபம். ஜயம். ஓம் ஜய சுத்த சக்தி ஓம். ஓம், ஓம், ஓம்!

ஆத்மசோதனை

கவியோகியின் அனுபவச்சோலை.சுத்தானந்தர் ஆஜன்ம யோகி; அறிவுச் சுரங்கம்; வைராக்ய வீரர், ஆத்மதீரர். அவர் வாழ்க்கையில் அளவற்ற சாதன ரகசியங்களும், கலைப்பண்பாடுகளும், வாழ்க்கையின் ரசானுபவங்களும் நிரம்பிக்கிடக்கின்றன. அவற்றையெல்லாம் இந்த மாபெரும் நூலாக அவர் ஆக்கி உலகுக்குப் பரமோபகாரம் செய்திருக்கிறார். இருபது பாகங்களாகத் தொகுக்கப்பட்ட இந்நூலை ஜீவரகசியக் களஞ்சியம் என்னலாம்.

இந்நூலை சுத்தானந்த ஜயந்தி யன்று (11—5—50) சுத்த நிலயத்தார் சுவாமிக்கு அன்பாக அளிக்கிறார்கள். ஆண் பெண் அடங்கலும் இதைப்படித்துப் பயன் பெற வேண்டும். விலை ரு. ஐந்து.

கிடைக்குமிடம்:—சுத்த நிலையம்., வான்கார்டு பில்டிங்
2nd Line Beach, Madras.
புதுயுக நிலயம், புதுவை

யோகி சுத்தானந்த பாரதியார்
இயற்றிய
காந்தி கீர்த்தனம்

350 பக்கங்கள். ரு. 3–8–0.
உயரிய கிளேஸ் பதிப்பு.

இதைப் படித்தால் வாழ்க்கை புனிதமுறும்; சக்திபெறும்.
டி பதிப்பின் லாபம் மகாத்மாஜி சேவா சங்க
இலவசச் சம்பள நிதிக்கே!

என் சுய சரிதை

சகோதரி R. S. சுபலக்ஷ்மி அம்மாள்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

1920 ஜூலை

கோடை விடுமுறைக்குப்பிறகு ஜூலை 5-ந் தேதி பாடசாலை திறக்கப்பட்டது. விவாகமாகாத சிறு பெண்கள் 5 பேரும் கைம் பெண்கள் 8 பேரும் ஆசிரமத்தில் வந்து சேர்ந்தனர். அநேகமாய் எல்லாரும் ஆசிரமத்திலேயே நடக்கும் ஆபத்த வகுப்பில் சேர்ந்தார்கள்.

காலம் செல்லச்செல்ல, பல காரணங்களால், முக்யமாய் எழ்மை, வரதட்சிணைமிகுதி காரணமாக விவாகவயது பிராம்மண ஜாதியினருக்குள்ளும்கூட, அதிகமாகிக்கொண்டேவந்தபடியால் ஆரம்பத்தில்போல இன்றி, சிறுவயது விதவைகளின் எண்ணிக்கை குறைய ஆரம்பித்தது. மேலும், ஆசிரமத்தில் பொதுஜனங்களுக்கு நம்பிக்கையேற்பட்டு, வயதான விதவைகள், 20 வயதுக்கு மேற்பட்டவர்களும்கூட, படித்து ஏதேனும் தொழில்செய்து சம்பாதிக்கவேண்டும் என்னும் விருப்பத்துடன் வர ஆரம்பித்தனர்.

நர்ஸிங்கு வகுப்புகள்

இந்த வருஷ ஆரம்பத்திலிருந்தே டாக்டர் C. B. ராம ராவ் என்பவர் அடிக்கடி என்னிடம் வந்து, தான் சில பெண்களைச் சேர்த்து நர்ஸுக்குப் பழக்க விரும்புவதாகவும் அதற்கு அதிகப் படிப்பு வேண்டியதில்லையென்றும் என்னிடம் வரும் சில வயதான பெண்களைத் தன்னிடம் அனுப்பும்படியும் கேட்டுக்கொண்டேயிருந்தார். ஜூலை மாதத்தில் 18 வயதுக்குமேல் 30 வயதுக்குட்பட்டவர்கள் யோகாம்பாள், ஸரஸ்வதி, ஞானம்பாள், காமகிரி, சாரதாம்பாள், பார்வதி, லட்சுமி, அம்ருதம் என்று 8 பெண்களை (அஷ்ட லட்சுமிகள்) டாக்டர் C. B. ராமராவிடம் அனுப்பினேன். அவருடைய 'நர்ஸிங் ஹோம்' ஒன்றில் இந்தப் பெண்களுக்கு 6 மாதம் தாதிப்பயிற்சி கொடுத்துப் பழக்கினார். ஆனால், சென்னையிலேயே இருந்து இந்த வேலையை நீடித்து நடத்தாமல் பங்களூருக்குப் போய் விட்டபடியால் அவர் பயிற்சி கொடுத்த இந்தப் பெண்கள் மாத்திரம் சென்னையில் ஆங்காங்கு தங்கி உயர்ந்த ஜாதி ஹிந்துக் குடும்பங்களில் நர்ஸுத் தொழில் செய்துகொண்டு செல்வாக்குடனும் மதிப்புடனும் இருந்தார்கள். யோகாம்பாளின் ஒரே பெண் பார்வதி என்பவள் 10 வயதிலேயே புருஷனை இழந்து ஏற்கனவே ஐஸ்ஹௌஸில் படித்துக்கொண்டிருந்தாள். யோகாம்பாள் விதந்துவாகி வெள்ளைப்புடவை கட்டிக்கொண்டவள். நர்ஸாயிருந்து நன்றாக சம்பாதித்து அவள் பெண்ணை பி. ஏ. வரைக்கும் படிக்கவைத்தாள். பார்வதி இப்போது ஒரு கவர்மெண்ட் ஹைஸ்கூல் தலைவியாக இருக்கிறாள்.

இதே வருஷம் செப்டம்பர் மாதத்தில் கல்கத்தாவில் இருந்த ஸ்ரீமான் N. R. அய்யர் (N. ராதாகிருஷ்ண அய்யர்) என்பவர் உயர்ந்த ஜாதி ஹிந்துப் பெண்கள், "பிளாரென்ஸ் நைட்டிங்கேல்" என்பவரைப்போல நர்ஸுகளாகி நோயாளிகளுக்கு உதவிசெய்ய முன்வரவேண்டுமென்று விரும்பினுர். அந்தக்காலத்தில் ஆங்கிலோ இந்தியப்பெண்கள், கிறிஸ்தவப்பெண்கள் சிலர்தான் நர்ஸுகளாக இருந்தார்கள். லேடி டாக்டர்கள் மிகமிகக் குறைவு. ஹிந்துக்களில் ஒருவருமே கிடையாது. நர்ஸுத்தொழில் மிகவும் அஸங்கியமானது, இழிவானது என்னும் எண்ணம். என்னிடம் படித்து முதன்முதல் டில்லிக்குசென்றுபடித்த பாலம், லட்சுமி தேவி, அகிலா, கமலா, அலங்காரம், கே. லட்சுமி இவர்கள்தான் லேடி டாக்டர்களாக முன்வந்தது. இவர்களில் இருவர் இங்கிலாந்துக்குப் போய் இன்னும் சில பெரிய டாக்டர் பரிஷைகளில் தேர்ச்சிபெற்று வந்தார்கள். அந்தக்காலத்தில் பத்மாபாய் என்பவளை 3 வருஷ நர்ஸுக்குப்படிக்க டில்லிக்கு அனுப்பினேம். அவள் நோயாளிகளின் குப்பைவேலைகளைச்செய்ய அருவருக்கின்றுள் என்றும், அந்த மாதிரி வேலைகளை லச்சிகள்தான்செய்யவேண்டுமென்று வாதாடுகிறுள் என்றும், அவளுக்கு புத்திமதி கூறி எழுதும்படியும், அவள் இன்னும் பொறுமையுடனும், கௌரவத்தை கொண்டாடாமலும் வேலை செய்யாவிட்டால் அவளை அனுப்பிவிடுவதாயும், இனி பிராமணப் பெண்களையே இந்தப் பயிற்சிக்கு அனுப்பவேண்டாம் என்றும், மிஸஸ் டிரைஸ்டேனுக்கும் எனக்கும் கடிதம் எழுதினர். நிற்க,

ஸ்ரீமான் N. R. அய்யர் அவர்கள் சென்னைக்கு வந்து ஸ்ரீமான் ஸர். சிவஸ்வாமி அய்யர், மிஸஸ் டிரைஸ்டேல் முதலான எங்களுடன் கலந்துயோசித்து, தான் 25,000 ரூபாய் கொடுப்பதாயும், கவர்மெண்டிலிருந்து 25,000 உதவிபெற்று இந்த 50,000 ரூபாயை செலவு செய்து வருஷத்துக்கு 10 நர்ஸுகள் வீதம் 3 வருஷத்துக்கு 30 பேர் ஹிந்துப் பெண்களை பயிற்சி (Staff Nurse) செய்ய வேண்டியதென்று திர்மானிக்கப்பட்டது.

செப்டம்பர் 15-ந் தேதி அக்பர்ஸாஹிப் தெருவில் 80 ரூபாய் வாடகைக்கு ஒரு வீடு எடுத்து, கே. அம்மணி, C. G. அம்மணி, A. அலமேலு, D. ஜானகி என்னும் 4 பெண்களை ஆரம்பத்தில் அங்கு குடியேற்றி கும்பகோணத்து ஸ்ரீமான் கோபாலராவ் என்பவரின் பெண் மங்களாபாய் என்பவளை ஹாஸ்டல் மேட்ரனுகவும் அமர்த்தினேம். மிஸ் ஷண்முகம் என்பவர் தலைவியாக சில மாதங்கள் இருந்தார். தர்மாம்பாள் முதலான இன்னும் சில பெண்களையும் அனுப்பினேம். வெளிப்பேரும் சிலர் வந்து சேர்ந்தார்கள். சில மாதங்களுக்குப்பிறகு வாடகை வீட்டை விட்டுவிட்டு, கோஷா ஆஸ்பத்திரியிலேயே நர்ஸுகள் தங்குமிடம் அமைத்து ஆஸ்பத்திரியில் தலைவியின் பராமரிப்பிலேயே இவர்களும் இருக்கும்படி ஏற்பாடான பிறகு, எங்கள் பொறுப்பு முடிந்துவிட்டது. இந்த 3 வருஷங்களிலுமாக மொத்தம் ஐஸ் ஹவுஸிலிருந்து நர்ஸு தொழிலுக்குப்போய்

பயிற்சிபெற்றவர்கள் சுமார் 15 பேர்தான். அவர்கள் ஆங்காங்கு இப்பொழுது வேலை செய்துகொண்டிருக்கின்றனர்.

மொத்தத்தில் நர்ஸ் தொழில் அவ்வளவாக மாணவிகளுக்கு விருப்பமில்லை. பாதிப்பேர் என்னுடைய நிர்ப்பந்தத்தினாலேயே போனார்கள். உபாத்திமைத்தொழிலேத்தான் அதிகம் பேர் விரும்பினார்கள்.

சேலத்திலிருந்துவந்து நாலைந்துவருஷங்களாகப் படித்து பெரிய வகுப்பிலிருந்த நாமகிரி என்பவளுக்கு எலும்பு நோய் உண்டாகி 6 மாதம் கஷ்டப்பட்டாள். டாக்டர் கேசவபாய், டாக்டர் முத்து லக்ஷ்மி இவர்கள் ஆரம்பத்தில் வைத்தியம் செய்தார்கள். பிறகு நவம்பரில் கோஷா ஆஸ்பத்திரியில் டாக்டர் ஸ்காட் என்பவர் மயக்க மருந்து கொடுத்து ஆப்ரேஷன்செய்தார். அந்த வருஷம் முழு வதும் படிப்புஇல்லை. மறுவருஷம் உடம்பு சௌக்கியமாகி படிக்க ஆரம்பித்து B. A. முடித்தாள்.

சோகக்கடலில் ஆழ்த்திய சம்பவம்

1920 ஜுலைமாதம் எங்கள் குடும்பத்தில் தாங்கமுடியாத மகத்தான துக்க சம்பவம் ஏற்பட்டது. உலக மகாயுத்தத்தில் 4-வருஷங்கள் ஸேவை செய்து எத்தனையோ குண்டுகளுக்கும் ஆபத்துக்களுக்கும் தப்பிப் பிழைத்து வந்து, சந்தோஷமாக பங்க ளூரில் வேலைசெய்துகொண்டிருந்த என் அருமை சகோதரி சாவித்திரியின் கணவர் காப்டன் துரைசாமி, (குடும்பத்தில் அழைக்கும் பெயர் ராதா கிருஷ்ணன்) யுத்தத்தில் வேளாவேளைக்கு ஆகாரமில்லாமலும், வழக்கமில்லாத ஆகாரங்களை வேண்டா வெறுப்புடன் உட்கொண்டதாலும் ஏற்பட்ட கோளாறு உடம்பி லேயே ரத்தத்தில் கலந்து வெளிக்குத் தெரியாமலிருந்து கடைசியில் திடீரென்று ஒரே வாரம் ஜுரமடித்து, 24-ந் தேதி அன்பான மனை வியையும் ஆசையான குழந்தைகளையும் ஏங்கவிட்டு, என் வயதான பெற்றோர்களையும் மற்ற கிட்டின பந்துக்களையும் சோகக்கடலில் ஆழ்த்திவிட்டு அவர் பரமனடி சேர்ந்தார். இந்த கஷ்டமான சம்ப வத்தை விவரித்து எழுதவே கை நடுங்குகிறது. என் பெற்றோர் களும், சித்தியும் பங்களூருக்குப்போய் அங்கிருந்த என் தகப்பனு டைய தம்பியின் உதவியுடன் செய்யவேண்டியவற்றையெல்லாம் செய்து, உயர்ந்த அந்தஸ்தில் ஆடம்பரமாக ஆரம்பித்து ஏறத்தாழ ஒரே ஒரு வருஷம் நடத்தின குடும்பத்தைக் கலைத்துக்கொண்டு ஒன்றுக்குப் பாதியாக சில பெரிய சாமான்களையெல்லாம் விற்ப தற்கு ஏற்பாடு செய்துவிட்டு சாவித்திரியையும் கண்ணான குழந்தை களையும் அழைத்துக்கொண்டு, செயலற்று, என் பெற்றோர்கள் 30-ந் தேதி ஒரே துக்க வடிவமாக வந்து சேர்ந்தார்கள். எங்கள் சகோதரிகளில் மிகவும் பொறுமையும் சாந்தமும் நிறைந்தவள் சாவித்திரி. அப்படிப்பட்டவளுக்கு கடவுளின் சோதனை ஏனோ இத்தனை? அந்த சமயம் அவள் 1 மாதம் கர்ப்பம். இத்தனைத் துக்கத்துக்கும் ஆறுதலாக 3 பெண்களுக்குப் பிறகு ஒரு ஆண் குழந்தை பிறக்கவேண்டுமென்று என் தாயார் முதலான எல்லா

ரும் ஆவலாயிருந்தோம். அதுவும் பூர்த்தியாகாமல் 1921 மார்ச்சு 12-ந் தேதி டாக்டர் ஸ்காட்டின் உதவியுடன் எங்கள் கண்மணி ராதா (தகப்பனுர் பெயர் ராதாகிருஷ்ணனுடைய பாதி) பிறந்தாள். அவளுக்கு ஒருகுறைவுமில்லை. அருமைபெருமையுடன் வளர்ந்தாள்.

பண்டித கிருஷ்ணவேணி அம்மாள்

ஸெப்டம்பர் முதல்தேதி ஸ்ரீமதி கிருஷ்ணவேணியம்மாள் ஹிந்து ஹாஸ்டலுக்குத் தலைவியாக வந்தாள். சிறுவயதிலேயே வைதவ்யம் அடைந்து பெற்றோர்களால் அருமையாக கல்விகற்பிக்கப்பட்டு (வீட்டிலேயே) ஜார்ஜ்டவுனில் அவர்கள் இல்லத்திலேயே ஒரு மாதர் சங்கம் ஆரம்பித்து அதற்கு என்னை வந்து அழைத்தார். அப்போது அவரை முதலில் சந்தித்தேன். நமது சாரதா ஐக்கிய சங்கம் பிரதி சனிக்கிழமையும் திருவல்லிக்கேணியில் நடக்கும். அதற்கு அவர் வருவார். ஆக, அவருடன் பழக்கமாகி, அவர் பாடசாலையில் படிக்காவிட்டாலும் வீட்டுப் படிப்பிலேயே, உயர் வகுப்புக்களுக்குத் தமிழ் கற்பிக்கும் திறமையிருந்தமையால் அவர் பாடசாலையில் தமிழ் உபாத்தினியாகவும், ஹிந்து ஹாஸ்டல் தலைவியாகவும் என்னுடைய முயற்சியிலும் சிபார்சிலும் நியமிக்கப்பட்டார். அந்தக்காலத்தில் உபாத்தினிகள் கிடைப்பது சிரமம். இந்தக்காலத்தில் தகுதியான பரீக்ஷைகளில் தேர்ச்சி பெற்றிருந்தால்தான் வேலை கிடைக்கும். அந்தக்காலத்தில் அபூர்வமாக வேலைக்கு வர இஷ்டப்படுபவர்களை பரீக்ஷித்து ஸர்டிபிகேட்டு கொடுக்கும்படி என்னிடத்தில் அனுப்புவர் தலைமை அதிகாரிகள். சங்கீதம் ஸம்ஸ்க்ருதம் தமிழ் தையல் இவற்றில் நான் பரீக்ஷித்து ஸர்டிபிகேட்டு கொடுத்து கவர்மெண்ட் பாடசாலைகளில் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டவர்கள் சிலர் இன்னமும், வேறு ஒருவித பரீக்ஷைக்கும்போய் தேர்ச்சி பெருமலே வேலையில் இருக்கின்ருர்கள்! அது அந்தக் காலம். தூத்துக்குடியில் ஒரு தமிழ்ச் சங்கக் கூட்டத்தில் பேசும்படி என்னை அழைத்திருந்தார்கள். நான் போகமுடியாமல் கிருஷ்ணவேணியம்மாளை எனக்குப் பிரதியாக அனுப்பினேன். அவர்களது சொற்பொழிவையும் தமிழ் பாஷையில் அவர்களுக்கிருந்த அறிவு ஆற்றலையும் மெச்சி அவர்களுக்கு "பண்டிதை" என்னும் பட்டம் வழங்கினர்கள். ஆக, பண்டிதை கிருஷ்ணவேணியம்மாள் ஏறத்தாழ 30 வருஷங்கள் பாடசாலையில் தலைமைத் தமிழ் உபாத்தினியாயும் ஹிந்து ஹாஸ்டல் தலைவியாயுமிருந்து நூற்றுக்கணக்கான பெண்களுக்கு நல்ல உத்தமமான வழிகாட்டியாக இருந்து தற்போது ஓய்வெடுத்துக்கொண்டு நூலாராய்ச்சிகள் செய்துகொண்டிருக்கிருர்.

"கைஸர் ஹிந்த்" பதக்கம்

நவம்பர் 24-ந் தேதி யன்று கவர்மெண்ட் ஹௌஸில் அரசாது பிறந்தநாள்-பட்டம் பெற்றவர்களுக்கு அவைகள் வழங்கப்பட்டன. "கைஸர் ஹிந்த்" வெள்ளிப்பதக்கம் எனக்கு அளிக்கப்பட்டது. அதைப்பற்றி என் மனதில் ஒருவித குதூகலமும் ஏற

படவில்லை. நான் செய்யும் ஸேவைக்காக யாரோ சிலர் சிபார்சு செய்து எனக்கு அளிக்கப்பட்டதாம். அதைப்பற்றி விருப்பு வெறுப்பு இரண்டும் இல்லை.

ஸ்ரீ விலாஸ்

மயிலாப்பூர் எட்வர்ட் எலியட் ரோடில் ஸ்ரீ விலாஸ் என்னும் பங்களா ஒன்று விலைக்கு வந்தது. சாவித்திரியின் கணவர் ஆரம்பித்திருந்த இன்ஷ்யூர் தொகை ஒன்றைக்கொண்டு அந்த பங்களாவை சாவித்திரி பேரால் வாங்கினேம்.

பாலத்தின் கணவர் காப்டன் சுந்தரேசன் இந்தியாவிலேயே யுத்த சம்பந்தமாய் புனு கராச்சி முதலான இடங்களில் வேலையாயிருந்தார். வருஷக்கடைசியில் 3 மாதம் லீவு எடுத்துக்கொண்டு பாலத்துடன் வந்திருந்து, பிறகு 1921 ஜனவரியில் தஞ்சாவூர் கவர்மெண்ட் ஆஸ்பத்திரியில் R. M. O. ஆக வேலையாகி அங்குபோய்த் தங்கினர். அவர்கள் குழந்தைகளும் சாவித்திரி குழந்தைகளும் என் பெற்றோர்களிடம் இருந்துகொண்டு படித்துவந்தார்கள்.

வழக்கம் போல் ஐஸ்ஹௌஸைப் பார்க்க பெரிய மனிதர்கள் அவ்வப்பொழுது வந்தார்கள். டிஸம்பர் மாதம் பங்களூரிலிருந்து ஜஸ்டிஸ் சந்திரசேகரய்யர் மனைவி ஆசிரமத்தை வந்துபார்த்து மாணவிகளுக்கு ஒரு உபந்நியாசம்செய்தார். இப்படியாக 1920-ம் வருஷம் பூர்த்தியடைந்தது.



சிலேடை

கம்பருக்கு
இராமத்யானம்
இராமத்யானம்தான்
பொழுதுபோக்கு.

[இரா மத்யானம்=
இரவு பகல் எல்லா
வேளையிலும் ;

இராம த்யானம்=
ராம சரித நினைவே.]

—குஞ்சரன்

வை.மு.கோ. 89-வது நாவல்



1

வாணியின் அருளும் வம்பியின் மருளும்

உலகத்தின் போக்கே ஒரு விசித்ரமான மாயையல்லவா? தீயதைக் கண்டால் பரிகஸித்து ஏசிப்பேசுவது போல் நல்லதைக் கண்டால் போற்றிப் புகழ்ந்து வானளாவப்

பேசுவதற்குச் சளைக்கமாட்டார்கள். பாரதியின் கைகள் கலாவாணியின் சாக்ஷாத் அம்சமாகிய வீணையின்மீது தன்னை மறந்து தாண்டவம் செய்யும்போது அதைப்பார்த்து வியக்காதவர்களே இல்லை. "அடாடா! என்ன லாகவம்! என்ன அனுயாஸமாய் அஸகாய சூரமாய் ஸாதகம் செய்திருக்கிருள்? ஸர்க்கஸ்காரன், கம்பிமேல்நடப்பதும், ஆகாயமளாவ ஊஞ்சலாடுவதும் போன்ற ப்ரமிக்கும் செய்கைகளைப் புரிவது போலல்லவா பாரதியின் கைகள் அந்த வீணையரங்கத்தில் அபூர்வத் தாண்டவம்செய்து ஜீவ ஒலியை எழுப்பி உலகையே மயக்குகின்றன" என்று அபரிமிதமான வியப்புடன் போற்ருதாரே கிடையாது.

பாரதியின் விரல்கள் வீணைக்கம்பியில் எப்படி ஆனந்த நடனம் செய்கின்றனவோ அதற்கு நேர்மாருக அவளுடைய முகத்தில் கவலை ஏக்கம் துக்கம் ஏமாற்றம் ஆகிய நான்கும் மாறிமாறி நிர்த்தனம் செய்வதையும் பொதுமக்கள் அறியாமலில்லை. அதன் பரமரகஸ்யத்தைமட்டும் அவளுடைய அந்தராத்மா ஒன்றுதான் அறியுமேயன்றி பிறர் அறிவதற்கு இடமே கொடுக்கவில்லை.

பாரதியின் திறமை பூராவும் அவளது கைவிரல்களில் மட்டுமின்றி வீணுநாதமே குரலிலும் அழுத்தத்துடன் தோய்ந்து ஜங்காரத்வனியுடன் இழைந்து வசீகரத்தை வாரி இறைப்பதைக் கேட்டுப் பூரிக்காத மக்களில்லை. ஆனல், அவளுடைய பிம்பத்தைமட்டும் தனிமையில் பார்க்கிறவர்கள், "இவளா இத்தனை மேதையாய் கலைவாணியின் அருள்பெற்ற கானஸரஸ்வதியாய் விளங்குகிருள்.!"......என்று வியப்பும் திகைப்பும் கொண்டு நின்றுவிடுவார்கள்.

அவளுக்கு வயது உள்ளது உள்ளபடி யாராலும் மதிப்பிட்டுச் சொல்லவேமுடியாது. தலை நரைத்துக் கன்னங்கள் குழிவிழுந்து கண்களில் சோபை இழந்து உடல் மெலிந்து சதைகள் சுருங்கி, விகாரப் பதுமையாய்க் காணப்படுவதைக் கண்டு பிறர் வெறுக்காமலில்லை. அவள் குரலில்மட்டும் இத்தனை இளமையின் துடிதுடிப்பும் அபூர்வ ஜீவனும்தேன்போல் சொட்டுகிறது!...உருவத்தைப்பார்த்தால் கிழப்பிணம்போல் தோன்றுகிறதே என்றும் வியப்புறுவார்கள்.

அவள் வசிப்பது பெரிய பங்களா இல்லை. சாதாரண பெட்டி' போன்ற ஒரு சிறியவீடு. மாடியில் பின்பக்கத்து சிறிய ஹாலில் விசாலமான இடம் நல்லவெளிச்சமாயும் காற்ருேட்டமாயும் இருக்கும். அந்த ஹாலில் லக்ஷ்மி ஸரஸ்வதி, கிருஷ்ணன், பார்வதி, பரமசிவன் ஆகியவர்களின் படங்கள்மட்டும் அலங்காரமாக மாட்டப்பட்டிருக்கின்றன. தரைக்கு அழகான ரத்னக்கம்பளம் விரிக்கப்பட்டிருந்தது. ஸரஸ்வதி படத்தின்கீழே ஒரு சிறிய பெஞ்சிப் பலகையில் வீணையை வைத்திருந்தது. மற்றப்படி வேறு

அலங்காரமே கிடையாது. அவ்வீட்டு வாசலில் ராஜபாளயத்துப் பெரியநாய்கள் இரண்டு எப்போதும் பாராக்காரர்கள் போல் கம்பீரமாய் ஜம்மென்று வீற்றிருக்கும்.

உள்ளே ஒரு கிழவிமட்டும் காணப்படுவாள். அக்கம் பக்கம் இருப்பவர்கள்கூட இவளைப்பற்றித் தெரிந்துகொள்ளவேமுடியாது. யார் இந்தவீட்டிற்குவந்தாலும்நாய்களின்உத்திரவைமீறி உள்ளேபோகமுடியாது. நாய்களின் எச்சரிப்பை அறிந்து கிழவியோ, பாரதியோ வந்துதான் முக்யமானவர்களாயின் பதில் சொல்லிவிட்டுச் செல்வார்கள். அவ்வீட்டு வாசலில் **கானகலா** என்கிற பெயர்பதித்த போர்டு ஒன்று ப்ரகாசமாக மின்னிக்கொண்டிருந்தது. அதே பலகையில் எழுத்துக்குப்பின்னணியில் வீணையின் உருவமும் தீட்டப்பட்டிருந்ததால் ''இவ்வீட்டில் வீணைவகுப்பு நடக்கிறதோ! அன்றி வீணைவாத்தியாரம்மா இருக்கிறுளோ!'' என்கிற சந்தேகத்தையே கொடுத்தது.

பாரதியின் எதிர்வீட்டிற்குப் புதிதாகக் குடிவந்துள்ள **குமுத**வல்லியம்மாளுக்குக் குடிவந்த அன்றே எதிர்வீடும் அவ்வீட்டில் தொங்கும் விளம்பரப்பலகையும்தான் கண்ணில் பட்டன. அவள் பெரிய சம்ஸாரி. பெருந்தன்மையான ஞானமும் அனுபவ அறிவும் பரோபகார சிந்தையும் உண்டு.

அவைகளுக்கெல்லாம் நேர்எதிரான ஒருசிறிய துர்க்குணமும் உண்டு. அதுதான் தனக்குச் சம்மந்தம் இல்லாத விஷயத்தில் எல்லாம் தலையிட்டுக்கொண்டு தானே,முந்திச்சென்று பேச்சை ஆரம்பிப்பதும் அதில் சற்றுத்ருப்தியடைவதும் வழக்கம். அதேபோல் இந்த வீட்டிற்குக் குடிவந்ததும் தன்னுடைய முதல் வேலையாக எண்ணி அன்று பகலே பாரதியின் வீட்டிற்குத் தானுகவே வந்தாள் பாவம்.

வாசலில் காவலிருக்கும் வேட்டை நாய்களின் விஷயம் மட்டும்தெரியாது. படிஏறினதுதான் தாமதம். இரண்டு நாய்களும் விபரீதமாகக் குரைத்துக்கொண்டு மேலே பாயவந்ததும் குமுதவல்லி திக்குமுக்காடி இப்படியும் வரமுடியாமல் அப்படியும் போகமுடியாமல் தத்தளித்துத்திணறுகையில் கிழவி உள்ளிருந்து வந்து நாய்களை அடக்கிவிட்டு''யாரம்மா? எங்கு வந்தீர்கள்?'' என்றுள்.

குமுத:—(சற்று ஆச்வாசப் படுத்திக்கொண்டு.) ''ஐயோ ராம! இதென்னபுலிபோல் பாய்ந்து புடவையைக் கிழித்து விட்டதே. ஏதோ! வாசலில் வீணையும், **கானகலா** என்ற எழுத்தும் தெரிந்ததால் இது என்ன இடம் என்று விசாரிக்கலாமென்று வந்தேன். என்னுயிரையே வாங்கிவிடும் போலல்லவா இந்த நாய்கள் செய்துவிட்டன. நல்ல நாய்கள் தான்...என்று நீட்டிமடக்கித் தெரிவித்தவாறு உள்ளே வருவதற்கு ப்ரயத்தனம் செய்தாள்.

கிழவி:—இந்த உலகத்தில் நாய்களைப்போன்ற ஜனங்கள் நுழைவதால் நாய்களை ஏற்பாடு செய்திருக்கிறோம். நீங்கள் எதற்காக வந்தீர்கள்? வந்தகாரியத்தைச் சொல்லுங்கள்

குமுத:—அதென்ன அப்படிப்பேசுகிறீர்களே? நான் வெறும் அரட்டையடிக்கும் சாதாரண மனுஷியல்ல. வெல்லப் பட்டி ராமநாத சாஸ்த்ரிகள் என்றால் அவரை அறியாதார் கிடையாது. அவருடைய சிறியதகப்பனாரின் மைத்துனருக்கு அத்தையின் நாத்தனார் நாகம்மாள் இருந்தாளே, அவளுடைய மூத்தார் பெண்ணுடைய ஓர்ப்படியின் மாமாவுக்கு சாக்ஷாத் மைத்துனியின் மகள் நான்......

கிழவிக்குச் சிரிப்பு தாங்கமுடியாது வந்துவிட்டதால் கடகடவென்று சிரித்துவிட்டாள்.

இதைக்கண்ட குமுதம்மாள்''என்இப்படிச்சிரிக்கிறீர்கள்? எங்கள் பரம்பரை தெரிந்தால் நீங்கள் என்னை ஏதோ இளப்பமாகப் பேசமாட்டீர்களல்லவா? பாட்டு என்றால் எனக்குப் பரமப்ரீதி, இந்த வாசலில் வீணையின் படமும் கானகலா என்றஎழுத்தும் பார்த்ததும் என்வேலையை எல்லாம் போட்டுவிட்டு ஓடிவந்தேன். இங்கு யார் வீணைவாசிக்கிறார்கள்? இந்த விவரம் தெரிந்துகொண்டு ஒழிந்தவேளையில் இங்கேயே இருந்துகொண்டு ஆனந்தமாகப்பொழுதைப் போக்கலாமே என்றுதான் வந்தேன். உங்கபெண்ணு, பேத்தியாவீணைவாசிப்பவர்கள்?''...என்றாள்.

கிழவி:—என்பெண்ணும் வாசிப்பாள். பேத்தியும் வாசிப்பாள். இங்கு பசங்களுக்குக் வீணைசொல்லிக்கொடுக்கும் வகுப்புதான்நடக்கிறது.

குமுதம்:—எம்மா! இப்படி சின்ளுன்னுபேசுகிறீர்கள்? பள்ளிக்கூடம்நடக்கிறது என்றுசொல்லுங்கள்.யார்சொல்லித் தருகிறார்கள்?...சம்ஸாரியா...தாசியா?......

கிழ:—நாங்கள் எல்லாம் தாசிதான் பாட்டியம்மா...போய் வாருங்கள்.—என்று கூறியபடி நாய்களை ஏவிவிட்டாள்.

அவை ப்ரமாதமாய்க்குலைத்துப் பழையபடிபோல் மேலே பாய ஆரம்பித்தன.குமுதம்மாள் அலறிப்புடைத்துக்கொண்டு கிழவியைத்திட்டியவாறு ஓட்டம்பிடித்தாள். கிழவி சிரித்துக் கொண்டே கதவைத்தாளிட்டுக்கொண்டு உள்ளேசென்றாள். குமுதம்மாளின் வசவுக்குரல் நாயின் குலைப்பையும்மீறி எதிர் வீட்டில்கேட்டது.

2

உலக மாயையும், உலக மரியாதையும்

கிழவியைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே வந்த பாரதி ''பாட்டீ! நான் அந்தக் கிழவியைப் பார்த்தவுடனே என்ன சொன்னேன்? அவர்கள் வீண்வம்புக்காக அலையும் சுபாவம்

உள்ளவர்கள்போல் முகத்தைப் பார்த்த உடனேயே தெரிகிறது என்று சொல்லியதுசரியாகிவிட்டதா பாவம்! வீடுவிட்டு வீடுமாற்றும் ச்ரமத்தைக்கூட மறந்துஎத்தனை கர்மச்ரத்தையாய் விசாரிக்க வந்துவிட்டார்கள் பாருங்கள். இனிமேல் இந்தம்மாளின் தொந்தரவு அடிக்கடி உண்டாகிவிடும்போலிருக்கிறது. இதை எப்படியாவது நாம் தடுத்துக்கொள்ள வேண்டும்'' என்று சொல்லும்போது எதிர்வீட்டுக் குமுதம்மாள் வாசலில் வந்துநின்று இந்த வீட்டையே கவனித்துக் கொண்டிருப்பதைக் கண்ட பாரதி மீண்டும் சிரித்துக்கொண்டே ''பாட்டீ! இப்பொழுது இன்னொரு வேடிக்கை நடக்கப் போகிறது பாருங்கள். மணி மூன்றடிக்கப்போகிறது. வீணை வாசிக்க வரப்போகும் பெண்களை எல்லாம் வழிமறித்தான் சாமியைப்போல் மடக்கிப் புலன் விசாரிக்கப்போகிறார்கள் பாருங்கள். ஏனோ! பிறத்தியார் விஷயத்தில் அனாவச்யமான கர்மச்ரத்தை? இத்தகைய அல்ப புத்தியுள்ளவர்கள், குடும்பத்திலும் இம்மாதிரிதானே நடந்துகொள்வார்கள். அதில்மட்டும் அமைதியும் ஐக்யமும் எப்படி உண்டாகும் பாட்டீ!''என்றாள்.

''இத்தகைய சில அல்பர்களினால்தான் சண்டை சச்சரவு குடும்பத்தில் பிளவுகள் உண்டாகின்றன. பிறர் வீட்டில் என்ன நடக்கிறது, யார்யார் இவர்கள் வீட்டிற்கு வருகிறார்கள், எந்த வீட்டிற்கு இவர்கள் போகிறார்கள், என்ன பேசுகிறார்கள்...என்பதுபோன்ற வம்புவிஷயத்தில் அபாரமானருசியிருக்கும்வரையில்அவர்களுடையமனத்தில்தெய்வபக்திக்கோ சமுதாய க்ஷேமத்திற்கோ குடும்பத்தில் சதா சந்தோஷத்தையே நிலவி ஐக்யப்படுத்துவதற்கோ இடமே இருக்காது. இனி நமக்குச் சரியான பொழுதுபோக்குத்தான்.'' என்று சொல்லிக்கொண்டிருக்கையில் வீணைவகுப்புக்கு சுமார் 16, 17 வயதுடைய அழகிய வசீகரம் பொருந்திய முகத்துடன் கூடிய இரண்டு பெண்கள் வெகு சாந்தத்துடன் நிதானமாக வந்தார்கள்.

அவர்கள் இந்த வீட்டு வாசற்படி ஏறுவதற்குள் எதிர்த்த வீட்டுக் குமுதம்மாள் எழுந்து ஓடிவந்து இவர்களை வழிமடக்கி ''ஏண்டியம்மா...உங்களை எங்கேயோ பார்த்தமாதிரி இருக்கிறதே...அந்த டிப்டிகலெக்டர்......ஸீதாராமனுடைய பெண்களாடியம்மா நீங்கள்...அவன் தாயார் தர்மாம்பாளின் சாயலாக இருக்கிறதே.. இங்கு எதற்குப் போகிறீர்கள்? என்ன நடக்கிறது?'' என்று வெகு அக்கரையுடன் கேட்டாள்.

இதைக்கேட்ட இருபெண்களும் சிரித்துவிட்டார்கள். ''பாட்டீ!நீங்கள்யாரைச்சொல்கிறீர்களோ எங்களுக்குப்புரியவில்லை. எங்கப்பா டிப்டி கலெக்டர்இல்லை. போலீஸ்டிப்டி சூப்ரெண்டுதான். இவள் என் தங்கையில்லை. இவளுக்கும் எங்களுக்கும் ஜாதிகூடவேறு......

குமுதம்:—அடாராமா...டெப்டிசூப்ரெண்டுன்னு சொல்ல றத்துக்குப் பதிலா டிப்டி கலெக்டர்னு சொல்லிப்புட்டேன். வயசாயிடுத்தோன்னோ! எதோ? திரளுமிரளாக இருக்கிறது. ஏண்டியம்மா! இங்கே என்ன சொல்லித்தரா?...

பெண்:—வீணை வகுப்பு நடக்கிறது பாட்டீ...அதில்தான் நாங்கள் சுமார் 25 பேர்கள் கற்றுக்கொள்கிறோம்....

குமுத:—ஏண்டியம்மா...அந்த நாள்ளே நான் வீணை அபாரமாய் வாசிப்பேன். தானங்களும் ஆலாபனைகளும் என் விரல் கொடுத்த பிச்சைதான் மற்றவாளுக்கு என்று பெரிய வித்வான்கள் சொல்வார்கள். அதுகிடக்கட்டும். இந்த வீட்டில் யார் யார் இருக்கிறார்கள்...அவர்கள் சம்ஸாரிகளா... அல்லது தாசிகளா...என்றதைக்கேட்டதும் அந்தப்பெண் களுக்கு வெறுப்பும், வீண்வம்புக்காக வாயைக்கிளறுகிறாள் என்ற எரிச்சலும் உண்டாகியதால் ''பாட்டீ! இந்த வம்புக் கெல்லாம் நாங்கள் பதில் சொல்லத்தயாராக இல்லை. யார் ஸம்ஸாரி, யார் தாசி? எல்லோரும் ஸம்ஸாரிகள்தான். எல் லோரும் அவரவர்களுடைய தெய்வத்திற்கும் ஆசாரியனுக் கும் தாசிகள்தான்! தெரிந்ததா? நாங்கள்கூட அந்த குரு வின் தாஸ்யைகள்தான்'' என்று கூறிக்கொண்டே விறு விறு என்று படி ஏறினார்கள்.

வகுப்புக்கு தினம் வரும் மாணவிகள் பழக்கப்பட்டிருப்ப தால் நாய்கள் வாலைக்குழைத்து அவர்களுக்கு மரியாதை செய்து வரவேற்றன. இதையே ஒரு சாக்காக வைத்துக் கொண்டு குமுதம்மாளும் கூடவே உள்ளே நுழைந்தாள். அவ்வளவுதான். இரண்டு நாய்களும் சற்று முன்பு எப்படிக் குலைத்து மேலே பாயவந்ததுகளோ அதேபோல் குலைத்துக் கொண்டு கிழவியின்மீது பாயவந்ததும் குய்யோ! முறையோ! என்று கத்தியவாறு ஒரே ஓட்டமாகக் கிழவி 'செத்தேன் பிழைத்தேன்' என்று ஓடினாள். இதைக்கண்ட அந்தச் சிறுமி களும் மற்றயோரும் சிரித்ததானது குமுதம்மாளுக்கு மகத் தான அவமானமாயும் கோபமாயும் தோன்றி விழித்துப் பார்க்கச்செய்தது. நாயை அமர்த்திவிட்டு எல்லோரும் உள்ளே சென்றார்கள்.

விரைக்க விரைக்கப் பார்த்துக்கொண்டு நிற்கும் குமுதம் மாளுக்குக்கோபம்பின்னும் அதிகமானதால்வெகுஆக்ரோஷத் துடன் நிற்பதைக் கண்ட குமுதத்தின் கணவரான கோபாலன் சிரித்தபடியே ''வேணும் உனக்கு நன்றாக வேணும். ஊர் வம்புக்காக அலையும் குணத்தை விட்டுவிடு என்றால் அது உன் ஜென்மத்துடன்தான் விடும்போலிருக்கிறது. வீட்டில் காலை வைக்க இடமில்லாது சாமான்கள் தாறுமாறுமாகக் கிடப்ப தைச் சரிவர வைக்க இன்னும் ஒய்வு உண்டாகவில்லை. எதிர்த்த வீட்டிற்கும் பக்கத்துவீட்டிற்கும் நுழைந்து புறப் பட்டு நிறைய சன்மானம் பெற்றுக்கொண்டு வருவதுதானே

உன்தொழில்...சீச்சீ உள்ளேபோ! யார் இருந்தால் உனக்கென்ன? நீ புதிதாக வந்திருக்கிறாயே! உன்னை யாராவது வந்து எதாவது விசாரித்தார்களா! உன்னைப்போல் முக்கிரிக்கோட்டையாய் முந்திக்கொண்டார்களா?...அவர்களைப் பார்த்துக்கூட ஏன் இத்தகைய நல்லபுத்தி வரக்கூடாது? என்று அதட்டுப்போட்டு உள்ளே அழைத்துச்சென்றார்.

குமுதம்மாளின் வாழ்க்கையில் இதுபோன்ற சம்பவங்கள் ஒன்றிரண்டல்ல. நக்ஷத்திரங்களைக்கூட எண்ணிவிடலாம். இந்த அத்புதப் பிறவியின் சரிதைகளை எண்ணமுடியாது. காய்காய்த்துப் புளித்துப்போனதால் இத்தகைய நிகழ்ச்சிகளில் அந்தம்மாளுக்கு எத்தகைய ரோஷமுமின்றி மறத்துப் போய்விட்டது என்றால் மிகையாகாது.

இம்மாதிரியான அல்ப சுபாவமுள்ள மனிதர்களை பாரதி இதுவரையில் பார்த்ததே இல்லையாகையால், வாசற்பக்கத்து ஜன்னல் வழியாக இங்கு நடந்த சகலமான விஷயங்களையும் பார்த்து வியப்புடன் நின்றாள். இதற்குள் இன்னும் வரவேண்டிய பெண்கள் எல்லோரும் வந்துவிட்டார்கள். அவர்களைப் பார்த்தபிறகே சற்று தெளிவுண்டாயிற்று; அவர்களை அழைத்துக்கொண்டு மேலே சென்றாள்.

“தாம்பத்ய அன்பில் எத்தனை விதமான விசித்திரங்கள் காணப்படுகிறன. இந்தம்மாளின் வயதைப் பார்த்தால் 50-க்கு மேலிருக்குமேயன்றி குறையாது. இந்த வயதில்கூட தம்பதிகளிடையே அபிப்ராய பேதமும் கணவன் சிள்ளென்று சீறி விழும்படியான முறையில் நடப்பதும் பார்த்தால் ஆதியில் இந்தம்மாளால் அவருக்கு என்ன சுகமும் மனநிம்மதியும் இருந்திருக்கும்! தாம்பத்ய வாழ்க்கையின் தத்துவம் தேனும் பாலும்போலும், பூவும் மணமும்போலும் மணியும் ஒலியும்போலும், வைரமும் ஒளியும்போலும் இருக்கவேண்டும் என்று பெரியார்கள் வர்ணிக்கின்றார்களே. உலகத்திலுள்ள கோடாநுகோடி மக்கள் ஜோடிஜோடியாய் தம்பதிகளாகவே இருப்பதில் குறைவில்லை; எத்தனைபேர்களிடம் இம்மாதிரியான ஒற்றுமையும் ஐக்யபாவமும் காணப்படுகின்றன... அடாடா! உலகமாயையை...எண்ணற்ற விசித்திர சுபாவங்களை...எண்ணிப்பார்த்தால் வியப்புறாமல் எப்படி இருக்க முடியும்?” என்று அதே எண்ணத்தில் தாக்கப்பட்டிருந்ததால் வழக்கம்போல் மாணவிகளிடம் நடப்பது தவறியது.

மாணவிகள் வழக்கம்போல் ஸரஸ்வதி பீடத்திற்கும் வீணைக்கும் நமஸ்காரஞ்செய்துவிட்டு பாரதியையும் வணங்கிப் பின் தம்தம் வீணைகளை ச்ருதிசேர்க்க ஆரம்பித்த வீணா நாதத்தைக்கேட்டபிறகுதான் பாரதி சட்டென்று அந்த எண்ணமாகிய சுழலினின்றும்விடுபட்டு எழுந்து தன்வீணையை எடுத்து ச்ருதிசெய்யவாரம்பித்தாள். ஏககாலத்தில் ஒரே ச்ருதியில் ஜம்மென்றுபல வீணைகளின் நாதம் எழுந்தவுடனே

பாரதியின் இதயத்தில் இதுவரையில் அனுவச்யமாய்க் குழப்பிய எண்ணங்கள் மறைந்துபோய் ப்ரம்மானந்தமான ஒரு தனி இன்பம் தோன்றி புதியசக்தியொன்று ஊக்கியது.

உடனேஸரஸ்வதியின்படத்தைப்பார்த்துப் பொங்கிவரும் ஆனந்தத்துடன் ஒருதரம் நமஸ்கரித்தபின் மாணவிகளை அன்புடன் பார்த்தாள். மாணவிகள் சரியானபடி ச்ருதியைச் சேர்த்துக்கொண்டு உபாத்தியாயினியின் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

பாரதிக்கு தான் ஏதோ அசட்டுத்தனமாக எண்ணி இருந்ததை நினைத்து சற்று அவமானமாகவே இருந்தது. சிரித்துக்கொண்டே...''குழந்தைகளே, நேற்று எந்த ராகத்தின் சஞ்சாரம் நடந்தது ? இன்று அதையே வாசியுங்கள்... ஏன் கல்யாணி வரக்காணவில்லையே, வரும்போது யாராவது பார்த்துக்கொண்டுவந்தீர்களா !'' என்றாள்

மாலதி:—நான் பார்த்துக்கொண்டு வந்தேன் அம்மா ! அவளைப் பார்ப்பதற்கு இன்று கல்கத்தாவிலிருந்து யாரோ வருகிறார்களாம். அவர்கள் வீட்டில் தடபுடலாக இருக்கிறது. கல்யாணி கல்யாணப்பெண்போலவே அலங்காரத்துடன் காட்சியளிக்கிறாள். நாளை வருவதாகச் சொல்லச்சொன்னாள்.

மற்ற பெண்கள்:—கல்யாணிக்குக் கல்யாணமா?'... ஆனால் இனிமேல் அவள் கானகலாவுக்கு வரமாட்டாளா...?

பாரதி:—ஏன் இப்படி அவசரப்படுகிறீர்கள் ? பதட்டமில்லாது பேசினால்தான் உங்கள் காரியம் சகலமும் பதட்டமில்லாது நிதானமாகவும் பிறர் போற்றும் வகையிலும் நடக்கும். முதலில் அதைக்கற்றுக்கொள்ளுங்கள். கல்யாணம் ஆனபிறகு எல்லோரும் அவரவர் கணவனுடன்கூடச்செல்ல வேண்டியதுதானே கடமை; அதுபோல் அவளும் போகத்தானே வேண்டும்.

மால:—அம்மா!...அவள் கணவனுக்கு ஏராளமாய் சொத்திருக்கிறதாம். ஆனால், அவனுக்கு சங்கீதம் என்பதே பிடிக்காதாம். அதனால் கல்யாணியின் அழகான வீணைகானமும் மதுரமானவாய்ப்பாட்டும் வீணாகிவிடுமோ என்னமோ என்று அவ அம்மா கவலைப்படுகிறார்களாம். பையன் சகல அம்சத்திலும் யோக்யதை உடைய உத்யோகஸ்தனாயிருப்பதால் அவனுக்கே கட்டாயம்கொடுத்துத்தானாகவேண்டும் என்று அவ அப்பா தீர்மானம் செய்துவிட்டாராம்.

பாரதி:—(சிரித்துக்கொண்டே) மாலதி! ஏதேது, ஒரு க்ஷணம் நீ அவளைக்கூப்பிடச்சென்ற சமயத்தில் இத்தனை விஷயங்களை எப்படியம்மா அறிந்துவந்தாய் ? நீ கூடிய சீக்கிரத்தில் எதித்தாத்துப் பாட்டியைப்போல் ப்ரசார இலாகாவின் ப்ரதிநிதியாகிவிடுவாய்போலிருக்கிறதே!.....என்றதும் எல்லாப்பெண்களும் கடகடவென்று சிரித்தார்கள்.

கோமதி:—டீச்சர்! எப்போதுமே மாலதிக்குப் பிற வீட்டு விவகாரங்களை அறிவதிலோ, அதைப்பற்றி வேறுமனிதர்களிடம் பேசுவதிலோ நிரம்ப ஆசை. எங்கள் பள்ளிக்கூடத்தில் கூட உபாத்தியாயினி அடிக்கடி மாலதியை இப்படித்தான் திட்டுவதோடு, ''பிறர் விஷயத்தில் தலையிடக்கூடாது. உன் காரியம் உண்டு நீ உண்டு என்று இருக்கவேண்டும். பிறர் விஷயத்தில் நீ தலையிட்டால் உன் விஷயத்தில் பிறர் தலையிடுவார்கள். அம்மாதிரி பிறர் ப்ரவேசிக்கும்போது வீணான கற்பனைகளைக்கூடச் சிலசமயம் செய்து, வீண்அபவாதத்திற்கோ வம்புக்கோ, சண்டைக்கோ கொண்டுவிட்டு விடும்படிக்குச் செய்வார்கள். அதன்மூலம் பிறகு கலங்கிப் பயனில்லை. பிறர் வீட்டில் யார் வந்தால் உனக்கென்ன? எது எப்படிப்போனால் உனக்கென்ன? அதை அறிவதிலேயே நீ உன் அருமையான நேரத்தை ஏன் கழிக்கிறாய்? அந்தநேரத்தில் நீ படித்தால், பாடினால், வீட்டுவேலைகளைச்செய்தால்எத்தனை உயர்வாக இருக்கும்?'' என்று புத்திமதிகளையும்கூறிக் கண்டிப்பார். ஆனால், மாலதிதான் அதைக்கேட்கவே மாட்டாள். அவளுக்கு......

பாரதி:—போதும்மா! நிறுத்து. தெரியாது செய்துவிட்டாள். இனிமேல் பாருங்கள். அந்தமாதிரி விஷயத்திற்கே போகமாட்டாள். சரி...வாசியுங்கள்'' என்றாள்.

உடனே ஜம்மென்று எல்லா வீணைகளும் ஏககாலத்தில் இனிய நாதமழையைப் பொழியவாரம்பித்தன. அவர்களில் சிலர் வாய்ப்பாட்டும் சேர்த்துபாடும்போது அத்புத ஆனந்தத்திற்கு எல்லைவைத்தே கூறமுடியாது. சாக்ஷாத் வாணியே இந்த அமரகானத்தைக்கேட்டு மயங்கிவிடுவாள் என்றால் மற்றவர்களைப் பற்றிக் கூறவேண்டுமா? சுவரில் மாட்டப்பட்டிருக்கும் கலைவாணியின்படமும் ஆனந்தப் பூரிப்படைந்து சிரக்கம்பம் செய்வதுபோல் பாரதியின் அகக்கண்களுக்குத் தோன்றியது.

அச்சமயம் அவளுடைய சிந்தனை அலைகள் பலவருஷங்களுக்குப்பின்னோக்கிஇழுத்துச்சென்றதால் தான் பல மாணவிகளின் மத்தியில் வீற்றிருக்கும் உபாத்தியாயினி என்கிற நினைவுகூட மறந்துவிட்டது.

3

புயல்காற்றும் பூகம்பமும்.

சுமார் 15 வருஷங்களுக்குமுன்பு இதே பாரதி இதே வீணையில் இதே ஷண்முகப்ரியா ராகத்தை இதே வேளையில் வாசித்தபோது எதிரில் வீற்றிருந்த அத்தனை பேர்களும் சிரக்கம்பம் செய்து ''ஆஹாஹா! என்று ஆர்ப்பரித்ததும் அக்கூட்டத்திற்குள் ஒருவனாக வீற்றிருந்த சந்திரசேகரன் அப்

படியே உள்ளம் உருகிப்பூரித்து ஆனந்தப்பரவசமடைந்து விட்டதும் நினைவிற்கு வந்தது.

ஏற்கெனவே பாரதியின் பள்ளித்தோழனும், பக்கத்து வீட்டில்குடியிருப்பவனுமான அவன் பேரன்பு செலுத்திப்பழகியவனுகையால் பாரதியின்உள்ளம் அக்கூட்டத்தில்அத்தனை பேர்கள் ஆரவாரம் செய்து வியப்புற்றுக் கூறுவதொன்றும் இதயத்தில் படாமல் சந்திரசேகரனின் ஆனந்தமே இவள் உள்ளத்தை உருக்கியது.

நாளடைவில் இவர்களுடைய நட்பு மிக்க உறம்பெற்ற ப்ரேமையாக மாறியது. சேகரனும் பாரதியும் அடிக்கடி சந்திப்பதும், பேசுவதும், வழக்கப்படிபள்ளிக்கூடம்ஒன்ருகச் செல்வதும் சிலவருஷத்திற்குள் கட்டுப்பட்டுவிட்டது. பாரதி தனித்துப்பேசவும்பார்க்கவும் முடியாது தடைஉண்டாகியது. எனினும் இருவரது வீட்டிலும் இவர்களுக்கு விவாகத்தைச் செய்துவிடவேண்டும் என்ற வார்த்தைகள்மட்டும் தடைபடவில்லை.

பாரதியின் தாய்மாமன் வீடு மிகவும் பட்டிக்காடு. அவளை அருமையாக மாமன் இரண்டு மாதலீவில் கொண்டு வைத்திருந்தார். அந்த சமயம் க்ராமத்து வெயிலும் அந்த நீர்நிலையும் தாங்காமல் பாரதிக்கு சரீரம் பூராவும் விபரீதமான சிறங்குவெடித்துவிட்டது. எத்தனை மூலிகைகள், பச்சிலைகள் முதலிய மருந்துகளை க்ராமத்தில் கொடுத்தும் இந்த சிறங்கு குணப்படாமல் மாதக்கணக்காகிவிட்டது.

சிறங்கின் பாதையினுல் பள்ளிக்கூடமும் இன்னிசையைப் பொழியும் வீணுகானமும் தடைபட்டுவிட்டன. பட்டினத்தில் பல டாக்டர்கள் பார்த்துப் பலவிதமான சிகிச்சைகள் செய்தும் குணப்படவில்லை. பாரதியின் பாதையொருபுறம்; தனது வித்தைகளுக்கு இந்த வ்யாதி பெரிய தடையாகிவிட்டதே என்கிற துக்கம் ஒருபுறம் பாதித்தது. இந்த நிலைமையில் ஒரு வருஷகாலம் உருண்டோடிவிட்டது.

சில சிறங்குகள் குணமாவதுபோல் ஆவதும் திரும்பவும் கிளேப்பதுமாக வெகு உபத்திரவப்படுத்தியதோடு முகம் முதல் கால்நகம்வரையில் விகாரமான வடுக்களையும் தழும்புகளையும் உண்டாக்கி அழகிய முகத்தின் சோபையைக் குலைத்துவிட்டது. இதைக்கண்ட பாரதியின் பெற்றோர்கள் மிகவும் துக்கத்தையடைந்து ஏங்கிவிட்டார்கள்.

பாரதியின் நிலையைக் கேட்கவேண்டுமா! உரித்தகோழி போல் உருமாறிய அவள் பிறர் எதிரில் வருவதற்கு வெட்கியும் வருந்தியும் உள்ளேயே அடைப்பட்டுக் கிடக்கத் தொடங்கினுள். இந்த சிறங்கை சிலர் சிறுபாம்புக்கடி என்றும், சொறி சிறங்கு என்றும், துர்நீர் வ்யாதி என்றும் கெட்டதான பெரியவ்யாதிசம்பந்தம் என்றும், அக்னி அம்மையின் காரணம் என்றும், விஷப்பூச்சிக்கடி என்றும் பலபேர் பலமாதிரி

யாகப்பேசியது ஊர் பூராவும் ப்ரசாரமாகிவிட்டதோடு சேகரன்வீட்டாரின் மனத்தை அடியோடு மாற்றிவிட்டது.

"இத்தகைய துர்வ்யாதிப் பெண்ணைப்பற்றி இனிநினைக்கவே கூடாது" என்று தீர்மானித்து மகன் மனத்தையும் மாற்றிவிட்டார்கள். இவர்களுக்கு அனுகூலமாக, வேறு பேட்டையில் சொந்த வீட்டைக்கட்டிக்கொண்டு குடித்தனமே போய்விட்டதால் இருதாரத்தாரிடையே இதுபரியந்தம் உலாவிய நட்பும் விச்வாசமும் மாறிப்போய்முற்றிலும் அன்னியர்கள்போன்ற பாவனையும் அதற்கேற்ற சகல அம்சங்களும் தானாக ஏற்பட்டுவிட்டன.

தங்கள் மகளுடைய நிலைமையைக்கண்டு மிகவும் துக்கமடைந்திருப்பதால் சேகரன்வீட்டாரிடம் உறுத்திச்சொல்லவும்கட்டாயப்படுத்தவும் பயந்தார்கள். இதேநிலைமையில் பின்னும் சில வருஷங்கள் ஓடிமறைந்தன. கைகளிலும் தலையிலும் சிறங்குகள் சற்று ஆறிவரத்துடங்கின. அதனால் பாரதி மறுபடியும் வீணையை வாசித்து வ்ருத்திசெய்யவாரம்பித்தாள். தலையில் ஒருமயிர்கூட இல்லாததால் பிறர் கண்ணுக்கே அகப்படாது, உள்ளோடு உள்ளாக அடைபட்டுக் கிடந்தாள்.

சேகரனுக்கு விவாகம் செய்ய அவன் பெற்றோர்கள் வேட்டையாடத் தொடங்கினார்கள். பாரதிக்கும் சேகரனுக்குந்தான் விவாகமாகப்போகிறது என்பது ஜகப்ரஸித்தமாக உலாவிய வார்த்தையாதலால் பலபேர்கள் அதைப்பற்றிக் கேள்விகள் சேகரனையும் அவன் வீட்டாரையும் கேட்காமலில்லை. பாரதிக்குக் கொடியவ்யாதி வந்துவிட்டதால் அவளை மணக்கவில்லை என்று பகிரங்கமாகக் கூறிவிட்டார்கள்.

எத்தகையோருக்கும் அதிர்ஷ்டதேவதையின் அனுக்ரகம் வந்தாலும் சரி, தரித்திர தேவதையின் தாண்டவம் வந்தாலும் சரி, விதியின் வேகமே காரணமாகநின்று வந்துசேருகிறதேயன்றி முன்பின் அறிந்து வருவதில்லை என்பது உலகமறிந்த ப்ரத்யக்ஷ உண்மையாகும். அந்தந்த வேளைகளில் அதனை அனுபவிக்கும்போது இதுவே சாச்வதம் என்று இன்புற்றிருப்பதும் துன்புற்றலைவதும் சகஜமாகிவிட்டது.

பாரதியின் இந்த துர்ப்பாக்ய தசையின் விபரீதத்தினால் சரீரத்தின்மெருகு குன்றி அழகு அழிந்து விகாரமாகிவிட்டதேயன்றி இதயத்தில் மாசு மருவற்று சேகரனின்மீது வைத்த ப்ரேமையின் ஜோதி வளர்ந்து சிறந்தமுறையில் ப்ரகாசித்து வந்ததை யார் அறியமுடியும்? அவளைப் படைத்த கடவுளே அவள் இதயக்கோயிலில் சேகரனை வீற்றிருக்கச்செய்துப்பின் அவள் சரீரத்தையும் விகாரப்படுத்தியிருக்கையில் இதை வேறு யாரிடம் முறையிடக்கூடும்? யாரிடம் முறையிட்டால்தான் பலன் ஏது.?

எப்படியாவது சேகரனை விவாகத்திற்குமுன்பு ஒருமுறைபார்த்துப் பாதங்களில் வணங்கித் தன் ப்ரேமையைத்

தெரிவிக்கவேண்டும் என்று அவள் உள்ளம் துடிதுடித்தது. தானிருக்கும் விகாரமான நிலைமையுடன் அவன் கண்களில் படுவதற்கும் லஜ்ஜை மிகவும் பாதித்தது. மறைந்திருந்தாவது தான் அவன் அழகைப்பார்த்து உள்ளம் பூரிக்க வேண்டும் என்று தடுக்க முடியாத ஒரு ஆசை இவளைப்பிடித்து உலுக்கியதால், இதை எப்படி நிறைவேற்றிக்கொள்வது என்று யோசித்தாள். ''சீ! கற்பிற்கரசியான பெண்ணினத்தில் பிறந்த நான் அல்ப மனத்தைக்கடைசிவரையில் அடக்கி மனக் கண்களாலேயே அந்த ஆனந்த பிம்பத்தைக்கண்டு களித்து இன்புறுவதைவிட்டு நேரில் செல்வதும், பார்ப்பதும் அதைக் கண்டு பிறர் பரிகஸித்து வித்யாஸமாகப்பேசி ஏசிப்பழிப்ப தற்கு எதற்காக இடங்கொடுக்கவேண்டும்? என்னுடைய நிலைமையில் என்னை அவன் முகமெடுத்தும் பார்க்கிறானோ இல்லையோ! அதை எண்ணி வேறு ஏன் துக்கப்படவேண்டும்? இப்போதுள்ள மனச்சாந்தியையும் குலைத்துக்கொண்டு ஏன் பாழாகவேணும்? என்னுள்ளத்தில் அன்பு விதையை விதைத்தார் பகவான்; என் விதியின்பயனால் அவ்விதை முள்ளுகளாக முளைக்கவே கத்தரித்துவிட்டார்; இனி அதைப்பற்றி எதற்காக நினைக்கவேண்டும்? கடவுளே! இந்த அல்பஆசை எண்ணத்தை அடியோடு அறுத்தெறிந்து இதயத்தைப் பரிசுத்தமாக்கி அதில் உன்னுடைய நினைவைப் பதியச்செய்துக் காப்பாற்று'' என்று வேண்டிக்கொண்டு மனத்தை முறித்துவிட்டாள். அவளுடைய இதய பாதாளத்தில் ப்ரேமையைப் புதைத்து வைராக்யத்தை மேலே எழும்பச்செய்தாள்.

விதியின் விளையாட்டுதான் ப்ரமாதமான ஆட்சி செலுத்துவதால் பாரதியின் பெற்றோர்களும் கடவுள் பதம் சேர்ந்துவிட்டார்கள், பாரதியின்கதி நிர்க்கதியாயிற்று.

சேகரனுக்கு உயர்தரப்படிப்பும், அதன்மூலம் உயர்ந்த இடத்தில் அழகிய நங்கையை மணம் செய்துகொண்டு இல்வாழ்க்கைநடத்தும்பாக்கியமும்அதிர்ஷ்டவசத்தால்பெரிய உத்யோகமும், சகலமும் அடுத்தடுத்து உண்டாகிவிட்டன.

சேகரனின் உயர்வைப்போல் பாரதியின் தாழ்வும் கூடவே போட்டியிட்டது. பாரதியின் பெற்றோர் மறைவுக்குப் பிறகு அவளை அவளுடைய மாமன் அழைத்தார். தான் ஆதியில் மாமனின் அழைப்பிற்குச் சென்றதனால்தான் தனக்கு இத்தகைய தீராத விதி அமைந்துவிட்டது என்ற மனக்கொதிப்பே அதிகமாகிவிட்டதால் அதற்கு மறுத்துவிட்டாள். நாளடைவில் சிரங்குகள் பூர்ணமாகக் குணமாகியதோடு தலைமயிரும் முளைக்கவாரம்பித்தது. எனினும் ஆதியிலிருந்த அத்புதமான அழகுமட்டும் சிதறியது மாறவில்லை.

வயதாகிய பெண்ணை திக்கும் இல்லாது தனிமையில் விடுவதற்கு மனமின்றி அவளை மணக்க யார் சம்மதப்படுகிறார்களோ அவர்களுக்குக் கட்டிக்கொடுத்துவிடுவதற்காகவே

மாமா முதலில் ப்ரயத்தனப்பட்டார். அதற்கு அனுகூலமாக மாமியும் இரண்டாந்தாரம்முதல் 5-ந் தாரக் கிழவன் வரையிலும், பரிசாரகன்முதல் மூட்டைத்தூக்கும் ஆள்பரியந்தமும் வெகு சுறுசுறுப்பாகத்தான் தேடினாள். சில இடங்களில் தானே நிச்சயம் செய்துவிடுவதாயும் முடிவு கட்டிக்கொண்டாள். அதன்மூலம் தாங்கள் லாபமடையவும் பார்த்தாள். ஆனால் விதி அவர்கள் அதிர்ஷ்டத்திரையைக் கிழித்தெறிந்துவிட்டுத் தானே தாண்டவமாட முன்வந்துவிட்டது.

மாமிக்கு திடீரென்று பாரிசவாய்வுவந்து கைகால்கள் ஸ்வாதீனமற்றுப்போய் விழுந்துவிட்டாள். அச்சமயம் அவர்களுக்கு உதவிபுரிவதற்கு பாரதியைத் தவிர வேறு யாரும் இல்லையாதலால் சமயத்தையும் ஆபத்தையும் உத்தேசித்துச் சென்று அவர்களுக்கு உழைத்து வந்தாள்.

இப்படி ஒரு வருஷகாலம் உருண்டோடியது. பாரதியின் உழைப்பிற்கு நடுவில் வீணைவாசிப்பதைமட்டும் அவள் விடவில்லை. காலதேவன் செய்யும் லீலையில் பாரதியின் வாழ்வில் ஒரு பூகம்பம் திடீரென்று ஏற்பட்டது. அதாவது: பாரதியின் மாமிக்கு நிரந்தரமாகப் பணிவிடை செய்வதற்கும் தன்சுயநல ம்ருகாவேசஇச்சைக்கும் நிரந்தரமான ஒருஅடிமையாக்க பாரதியையே மாமன் மணந்துகொள்ளத்துணிந்தான்.

இந்தப் பேரிடிபோன்ற விஷயத்தைக்கேள்விப்பட்ட பாரதியின் உள்ளம் உடனே தற்கொலைக்குத் துணிந்ததேயல்லாது வாழப்பிரியப்படவேஇல்லை. தாய்மாமனாக இருந்துத் தன்னை த்ரோகம் செய்யத் துணிந்த வயிற்றெரிச்சலை அவளால் பொறுக்கவே முடியாது திடீரென்று மனது முறிந்துபோயிற்று. அவளுக்குள்ள ஆத்திரத்தில் என்னசெய்வதென்று புரியாது அதீதமான முறையில் பாய்ந்துவிட்டதால் இவ்விடத்தைவிட்டுச்சொல்லாமல் ஓடிப்போய் எங்காவது கிணத்தில் குளத்தில் விழுந்து சாகவே துணிந்துவிட்டாள். தன்னுயிருக்குயிராக உள்ள வீணையை என்ன செய்வது? இந்த சண்டாளர்களிடம் அதைக் கொடுத்துச் செல்ல மனமில்லாததால் யாராவதொரு சங்கீத அபிமானியிடம் அதைக்கொடுத்துவிட்டுத்தான் சாகவேண்டும்... என்று முடிவுகட்டி, யாரிடம் இதை ஒப்புவிக்கலாம் என்று எண்ணலானாள்.

இன்னொரு எண்ணமும் தோன்றியது. தான் எப்பாடுபட்டாவது இந்த வீணையைத் தன்னிதயக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் சேகரனிடம் சேர்த்துவிட்டால் என்ன? இத்தனை நாளைக்குள் அவனுக்குக் குழந்தையும் பிறந்திருக்குமல்லவா!...... அல்லது அந்தப் புண்யவானை மணந்துள்ள பாக்யசாலியானபுனிதவதியாவது வாசிக்கட்டுமே... இதை எப்படி அவர்களிடம் சேர்ப்பிக்கமுடியும்? அவர்களுடைய விலாசமோ, விவரமோ உத்யோக சம்பந்தமான விஷயமோ, எதுவுமே தெரியாதே! இன்னிலைமையில் நாம் கொம்புத்தேனுக்கு முட

வன் ஆசைப்பட்டதுபோல் ஆசைப்பட்டால் என்ன கிடைக்கும்? ப்ரேமை என்கிற பாலத்தை விதி என்கிற புயல்காற்று உடைத்தெறிந்துவிட்டபிறகு இனி பழய எண்ணமும் ஆசையும் கனவில்கூட நினைக்க யோக்யதை உண்டா? ஆகா! இப்படியும் ஒரு காலம் வரும் என்று கனவுகூடக் காணவில்லையே. உம். சேகரன் எங்காவது சந்தோஷமாக நன்றாயிருந்தால் போதும். துர்ப்பாக்கியம் பிடித்த என்னிடமிருந்து இந்த வீணை சென்றாலும் அவர் ஆனந்தத்திற்கு ஹானி விளைவிக்குமோ என்னவோ! வீண் எண்ணம் எதற்கு?... என்று சாந்தியடைந்தாள்.

இதற்குள் மாமனின் மூர்க்கத்தனமும் உடனே விவாகத்தைச் செய்துவிடவேண்டும் என்கிற தீவிர எண்ணமும் அதிகரித்துவிட்டதால் இரண்டாம்பேர்களறியாமல் க்ராமத்திற்குச் சென்று விவாகத்தை நடத்திவிடச் சகல ஏற்பாடுகளையும் செய்ததையறிந்த பாரதி இனி க்ஷணங்கூட இங்கிருக்கக் கூடாதென்கிற தீர்மானத்துடன் புலம்பினாள்.

ப்ரதிதினமும் "ஹரே ஸ்ரீகிருஷ்ணாய நம:" என்று கிருஷ்ண நாமத்தைச் சொல்லிக்கொண்டு ஒரு வயதான அம்மாள் பிக்ஷைக்கு வருவது வழக்கம். அன்று பாரதி புலம்பிப்புலம்பி கண்களும் முகமும் வீங்கி இருப்பதைக்கண்டு "ஏம்மா! உனக்கென்ன உடம்பு?" என்று அன்பொழுகக்கேட்டாள்.

இந்த பிச்சைக்குவரும் கிழவியிடம் பாரதி ப்ரதிதினமும் சற்றுநேரம் பேசிவிட்டுத்தான் ஒரு பிடி அரிசியைப்போட்டு அனுப்புவாள். கிழவி பிச்சைக்காரியாயிருப்பினும் அவளைப் பார்க்கும்போது பாரதிக்கு எதனாலோ ஒரு அன்பு, நம்பிக்கை. "பாவம்! விதியினால் பிச்சை எடுக்கிறாளேயன்றி பெருந்தன்மையான களை தாண்டவமாடுகிறது...உம். விதி யாரை விட்டது? என்னுடைய நிலைமை இப்படியாகும் என்று எண்ண முடிந்ததா! அப்படித்தானிருக்கவேண்டும் இந்தம்மாளின் கதியும்" என்று தனக்குத்தானே எண்ணிக்கொண்டு "பாட்டி! நேற்று வேண்டிய அளவு கிடைத்ததா?"... என்று கேட்பாள். கிழவியும் இப்பெண்ணுக்குச் சரியாக பதில்சொல்லி மகிழ்வாள். பிச்சைக்காரர்களைக் கண்டால் சிள்ளுபுள்ளென்று சீறி விழுந்து விரட்டியடிக்கும் வீடுகளில் மனம் நொந்துப் புண்ணாகிய ரணத்தை இத்தகைய அன்பு மொழிகளாகிய ஔடதத்தின்மூலம் சற்று ஆற்றி இன்பமடைவாள்.

பாரதியின் மனத்திற்கும் ஏதோ சற்று சாந்தியிருப்பதாகவே தோன்றுவதால் பேசிப்பழகினாள். அம்மாதிரி ஏற்கெனவே பழகியிருப்பதால் பாரதிக்குக் கிழவி கேட்டதும் எங்குமில்லாத துக்கம் பிச்சிக்கொண்டு வந்துவிட்டது. இச்சமயம் இப்பேராபத்திலிருந்து தப்புவதற்கு இப்பிச்சைக்காரக் கிழவியைக்கூட துணைகொள்ளவே மனம் துணிந்துவிட்டது. குளத்தில் விழுந்துவிட்டவர்களுக்கு ஒரு சிறு துரும்

பாவது கிடைக்காதா? அதைப் பற்றிக்கொண்டு கரையேறி விடமாட்டோமா? என்று ஆத்மா அலேவதுபோல் பாரதியின் நிலேமையும் ஆய்விட்டது. துடிதுடிக்கும் உள்ளத்துடன் தாங்கமுடியாத ஆவேசத்தில், நடந்த சகல வ்ருத்தாந்தங்களேயும் ஒன்றுவிடாமல் கூறிவிட்டு அந்தம்மாளின் காலில்விழுந்து வணங்கி "பாட்டீ! எனக்கு இச்சமயம் ஒரு உதவிபுரிய வேண்டும். இந்த வீணையை யாருக்காவது ஏழை மாணவிக்குக் கொடுத்துவிடுங்கள். நான் இனி அரைக்ஷணங்கூடத் தாள மாட்டேன். நான் செய்த விதி ஒருபுறமும் மனிதர்கள் ஒருபுறமும் என்னேச் சதிசெய்துவிட்டதால் இனி வேறு வழி இல்லே. பாட்டி! நீங்கள் சற்று இருட்டியபிறகு தயவுசெய்து வந்தால் இந்த வீணையை ஒருவரும் அறியாமல் கொடுக்கிறேன். இதை வைத்துவாசித்துப் பயனடையக்கூடிய ஏழைப்பெண்ணிடம் தானமாகக் கொடுத்துவிடுங்கள். இதை விற்றுத் தின்றுவிடக்கூடிய பாவிகளுக்குக் கொடுக்காதீர்கள். என் மீது இரக்கங்கொண்டு இந்த மகோபகாரத்தைச் செய்து என்னே ரக்ஷிக்கவேண்டும்." என்று கண்ணீர்வழியக் கூறும்போது அவளுக்கே தாங்காமல் கேவிக்கேவி அழுதாள்.

4

ஆறுதலும் அமைதியும்

பாரிசவாயுவுடன் படுத்துள்ள மாமிக்கு இந்த அழுகுரல் காதுகேட்கிறதேயன்றி எழுந்து வரவோ இவளேச் சமாதானம் செய்யவோ முடியாது அவளேயும் அறியாமல் மனது உருகியது. "எனது வயதென்ன! என் கணவனின் வயதென்ன நானும் ஈவிரக்கமற்று இவள் விஷயத்தில் மகத்தான த்ரோகத்தைச் செய்துவிட்டதன் பலன்தான் இப்படி அனுபவிக்கிறேன். இவளுடைய பணத்தையும் மோசம் செய்து கரைத்ததுபோதாமல் இவள் வாழ்வையும் பாழாக்கத் துணிந்த முறையில் கொலேப்பாதகமுமல்லவா வந்துபூராவும்சேர்ந்தது! இன்னும் என்னென்ன அனுபவங்கள் பாக்கி இருக்கிறதோ தெரியவில்லேயே!" என்று எண்ணித்துடிக்கிறுள். சரியானபடி பேச வாயில்லாததால் ஊளேயிட்டமாதிரிக் கூச்சலிட்டாள்.

இதைக்கேட்ட பாரதி பயந்து நடுங்கிப்போய் "பாட்டீ! சற்று இருங்கள். இதோ வந்துவிட்டேன்" என்று கூறியவாறு உள்ளே ஓடிவந்து எட்டிப்பார்த்தாள்.

மாமியின் கண்களில் நீர் பெருகுகிறது. இவளேப்பார்த்ததும் "வா! வா!" என்று குளறியவாறு அழைத்தாள். ஒரு கை மட்டும் சற்று அசைக்க ஸ்வாதீனம் இருந்ததால் "பாரதீ! என்கண்மணீ! உன்னே நான் செய்த பாதகத்திற்கு இதோ நான் முற்றும் அனுபவிக்கின்றேன். நீ இனி சற்றும் தாக்ஷண்யப்படவேண்டாம். உன் வீணையுடன் அதே பிச்சைக்

காரப்பாட்டியுடன் நீ இப்போதே வெளியேறிவிடு, நான் உனக்குப்பூரண உரிமை கொடுக்கிறேன். உன் மாமா இன்று ஊரிலிருந்து வந்துவிடுவார். அதற்குள் நீ இந்த எமலோகத்திலிருந்து மறைந்துவிடு. என் விதிபோல் சகலமும் நடக்கட்டும். அதோ அந்தப் பெட்டியில் ஒரே ஒரு தங்கச் சங்கிலி இருக்கிறது அதை நீ எடுத்துக்கொண்டுபோய் விற்று உன்னை ரக்ஷித்துக்கொள்ளு. உன் மாமா வந்தால் திண்டாடட்டும்'' என்று குளறிக் குளறி இழுத்துப் பேசித் தன் ஆத்திரத்தைப் பூராவும் தெரிவித்தாள்.

பாரதிக்கு இவளிடம் பேசிப் பழகியிருப்பதால் இவள் சொல்லியது பூராவும் நன்ருகப்புரிந்துவிட்டது. அத்தனை கொடுமை செய்த மாமியின் மனதுகூட இவ்வளவு விசித்ரமாக இத்தனை சடுதியில் மாறிவிட்டதா! என்று நினைத்துப் பிரமித்தாள். இது நிஜமாக இருக்குமா! என்றும் சிறிது சந்தேகப்பட்டாள். மாமி இவளுடைய குழப்பத்தைக்கண்டு மறுபடியும் வற்புறுத்திக்கூறி பிச்சைக்காரக்கிழவியைக் கூப்பிடச்சொல்லி, தானே இவளையனுப்புவதாயும் எத்தகைய விஷயமும் பிறர் அறியாதபடிக் காப்பதாயும் உறுதியாகக்கூறி சத்யம்செய்தும் கொடுத்தாள்.

அந்த நிலைமையில் மாமியை விட்டுப்போவது சரியல்ல என்றுதோன்றினும், தான் இந்த பேராபத்திலிருந்து தப்பித்துக்கொள்வதற்காக மாமியின் உத்திரவு பெற்று இந்த ஜெயிலைவிட்டுக்கிளம்பிவிடுவதே சரி என்று நிச்சயம் செய்துகொண்டு, அந்தக் கிழவியின் முகத்தைப் பார்த்தாள்.

நாதியற்ற அனாதைக்கிழவியான பிச்சைக்காரியை நம்பி தான் போகலாமா! என்று சந்தேகத்துடன் பார்ப்பதை அறிந்த பிச்சைக்காரி ''அம்மா! நீ தைரியமாய் நம்பிக்கையுடன் வா. நான் நாலு வீடு பிச்சை எடுத்து உனக்குப் போட்டு உன்னையும் காப்பாற்றி நானும் பிழைக்கிறேன். என்கதியை உங்களிடம் கூறினால் நம்பமாட்டீர்கள். கோடீச்வரன் வீட்டில் பிறந்து குபேரன் வீட்டில் புகுந்து கடைசியில் ஆனைபடுக்கும் இடத்தில் பூனைபடுக்க இடமில்லாது போய்விட்டது! சகல அழிவிற்கும் காரணம் குடி, சூதாட்டம், குதிரைப்பந்தயம், தாசி முதலிய படாடோபப் பரிபவத்தின் அக்னியில் எரிந்துவிட்டதே. மூலைக்கொருவராகச் சிதறி, குடும்பத்தின் கண்ணியம் பாழாகி சிலர் விபசாரத்திலிறங்கி வயிறுவளர்க்கிருர்கள். சிலர் சினிமாவில் சேர்ந்து வயிறு வளர்க்கிருர்கள். மானமாக வாழ்வதற்கு வேறு வழியின்றி இம்மாதிரி பிச்சைக்கு நான் கிளம்பினேன் தாயே! எனக்கும் பொழுதுபோக்காக இருக்கும்! உனக்கும் இந்த சமயம் ஆதரவாகும். என்னை நம்பு'' என்று உறுதியாகக்கூறினுள்.

கிழவியை அன்று அங்கேயே இருக்கச்சொல்லி நிறுத்திக்கொண்டு தன் வீணையையும் துணிமணிகளையும் வெகு பரபரப்

புடன் எடுத்துவைத்தாள். பொழுது ஏறஏற பாரதியின் உள்ளத்தில் அவளையறியாத பெரும் போர் நடந்து, அபார மான குழப்பத்தை உண்டாக்கிவிட்டது. தன் சரீரம் தனக்கு ஸ்வாதீனமின்றி படுத்துள்ள மாமியைப் பார்க்கப்பார்க்க அவளால் தடுக்கமுடியாத பரிதாபமும் துக்கமும் உண்டாகி "சீ! இத்தகைய நிலைமையிலுள்ளவளை விட்டுவிட்டா நான் தப்பி ஓடிவிடுவது? நான் செய்யவிருக்கும் காரியம் நியாய மானதா? இது கடவுளுக்குப் பொறுக்குமா! ஒருவாய்த் தண்ணீர் வேண்டும் என்றாலும் பிறர் கையை எதிர்பார்த்து நாக்கைக் காட்டிக்காட்டிக் கேட்டு சாந்திபெறும் பரிதாபகா மான நோயாளியை விட்டுச்செல்வது எந்த தருமத்திற்கு அடுக்கும்? மனது இடந்தராது தவிக்கின்றதே! நாமும் இந்த நிர்க்கதியான நிலைமையில் விட்டுச்சென்றுவிட்டால் ஒரு வேளை இவள் உயிரே போய்விடுமாயின் அந்த கொலைப்பாதகம் என்னையல்லவா சேரும்? இத்தனை தூரம் என்னை ஆட்டி வைக்கும் விதியின் வலிமையை என்னால் ஜெயித்துவிட முடி யுமா! அது ஆட்டுகிறவிதம் ஆட்டித் தன் ஆத்திரத்தை தீர்த்துக்கொள்ளட்டும். மிகவும பரிதாபகரமான இந்நிலை யில் மாமியைவிட்டுப்போக நினைத்த முட்டாள்தனத்தை இப் போதுதான் அறிகிறேன். 'எமனறியாது உயிர் போய்விடாது' என்பதுபோல் என்னையறியாது என் மாமா என்னை எப்படி மணந்துவிட முடியும்? என்னதான் நடக்கிறதோ ஒருகை பார்த்துவிடுவதே சரி!" என்று தனக்குள் தீர்மானம்செய்து, மாமியிடம் வந்து எட்டிப்பார்த்தாள்.

மாமியின் கண்களில் நீர் ஆறாகப் பெருகுகிறது. அதைத் துடைத்துக்கொள்ளக்கூட ஸ்வாதீனமற்ற நிலைமையில் தேம் பித்தேம்பிப் புலம்பிக்கொண்டே "கடவுளே! என் கதியை என்னவிதம் முடிக்கப்போகிறாய்? உன்னடியில் சேர்த்துக் கொள்ளக்கூடாதா! இனியாவது அந்தப் பரதேசிப்பெண் ணைத் துன்பமின்றிக் காக்கமாட்டாயா" என்று குளறிக் கொண்டே வேண்டுவதைக்கண்ட பாரதி அன்பு துள்ளிக்குதிக் கும் உள்ளத்துடன் ஓடிவந்து மாமியின் கண்ணீரைத் துடைத்து அவள் முகத்தையும்தலையையும் தடவிக்கொடுத்து "மாமீ! மாமீ! அழாதீர்கள். நான் ஏதோ முட்டாள்தன மாகச் சொல்லிவிட்டேன். உங்களைவிட்டு நான் போகமாட் டேன். என்னுடைய ஆத்திரத்திற்கும் அசட்டுத்தனத்திற் கும் நான் மிகவும் வருத்தப்படுகிறேன். என்னை மன்னித்து விடுங்கள். என்னுடைய தாயார் இந்நிலைமையில் இருந்தால் நான் விட்டுப்போவேனா! மாமீ! என்விதி என்னை என்னவேண் டுமாயினும் செய்யட்டும். நான் போகப்போவதில்லை. மாமா வந்து என்ன ஆட்டம் வேண்டுமாயினும் ஆடட்டும் நீங்கள் கண்ணீர் விடவேண்டாம். அந்தக் கிழவியை அனுப்பி

விடுகிறேன்'' என்றுகூறித் தன் இதயத்தின் தாபத்தைக் காட்டிப் பேசினுள்.

தன்னுடைய அனுதைத்தன்மையை எண்ணிக் கண்ணீர் விட்டுக்கலங்கும் மாமிக்கு இந்தவார்த்தையும், அவள் காட்டும் அன்பும் வெகுவெகு ஆச்சரியத்தை உண்டாக்கிவிட்டன. சற்று ஸ்வாதீனமுள்ள கரத்தினுல் பாரதியைத் தடவுகிருள். ஏதேதோ பேச வாயெடுக்கிருள். முடியாமல் திணறிவிட்டது. 'கண்ணு! நீ முதலில் நினைத்தபடியே போய்விடு' என்று சொல்லிப்பார்த்தாள். ஆனுல் பாரதி கேட்கவில்லை. ''மாமி! உங்கள் உயிர்போகும்வரையில் நான் உங்களைப் பிரியமாட்டேன். மாமாவையும் மணக்கமாட்டேன். இதற்கிடையில் என்னவந்தாலும் அனுபவிக்கத் தயாராயிருக்கிறேன். கடவுள்விட்ட வழியாகட்டும்'' என்று உறுதியாகக்கூறிப் பின் அன்புடன் பரிந்து ஆகாரத்தை ஊட்டினுள்.

அதன்பிறகு கிழவியிடம் ஓடிவந்து ''பாட்டி! மன்னிக்க வேண்டும். நான் என் மாமியைவிட்டு வரப்போவதில்லை. ஏதோ பெண்புத்தி பின்புத்தி என்கிறபடி ஆத்திரத்தினுல் புலம்பிச்சொல்லிவிட்டேன். தயைக்கும் க்ஷமைக்குமே இருப்பிடமாகிய பெண்களின் உள்ளம் வரண்டு சூன்யமான பாலைவனம்போலாகிவிடுமாயின் பெண்தருமத்திற்கே பங்கமும் ஹானியும் விளைந்துவிடும். பாட்டி! என் செய்கையினுல் உலகம் என்னை எப்படித் தூற்றும்? எவ்விதம் காரி உமிழும் என்பதை நான் அப்போது உணரவில்லை. இப்போது அதை நான் கண்ணுடிபோல் காண்கிறேன். பாட்டி! அன்று என் தலையில் எழுதியதை இனி அழித்து எழுதப்போவதில்லை. விதியின் ஆட்சி எத்தகைய கோரத் தாண்டவத்தைப் புரிகிறதோ புரியட்டும். நான் துணிந்துவிட்டேன். நீங்கள் அடிக்கடி இங்குவந்து என்னைப்பார்த்துக்கொண்டு போங்கள். இன்று சிரமம் கொடுத்ததற்கு மன்னிக்கவும்'' என்று கண்ணீர் பெருகக் கூறினுள்.

இதைக் கேட்ட கிழவி பாரதியின் தயாளகுணத்தைக் கண்டு சந்தோஷத்துடன் ''குழந்தாய்! உன் தருமமே உன்னைத் தலைகாக்கும். நான் வருகிறேன். என்னுடைய உதவி உனக்கு எப்போது வேண்டுமோ அப்போது அம்பாள் சன்னிதி வாசலில் வந்து பார்த்தால் நான் இருப்பேன்; உடனே ஓடிவந்துவிடுவேன். ஆபத்திலுள்ளவர்களைக்காப்பது தர்மமேயன்றி கைவிடுவது கடமையல்ல. நான் வருகிறேன்'' என்று கூறி விடைபெற்றுச்சென்ருள். அதன் பிறகே பாரதியின் உள்ளத்தில் சிறிது அமைதி நிலவியது.

5

கவலையின் நிவாரணம்—கலையின் உத்தாரணம்

மறுதினம் காலையில் பாரதியின் மாமா ஊரிலிருந்து வெகு உத்ஸாகத்துடன் வந்தார். பாரதி எத்தகைய மாறுதலையும் காட்டிக்கொள்ளாமல் வெகு சாதாரணமான நிலைமையிலேயே காணப்பட்டாள். அன்றிரவு சாப்பாட்டிற்குப்பிறகு மாமா மிகுந்த சந்தோஷத்துடன் ''பாரதீ! இப்படி வாம்மா! இதோ! இந்த மூட்டையில் உள்ள புடவைகளில் எத்தனை புடவைகள் உனக்கு வேண்டுமோ அவைகளை எடுத்துக் கொள்ளு. விஷயம் உனக்கே தெரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். புதன்கிழமையன்று நம்முடைய பழய கிராமத்துக் கோயிலில் நமது விவாகத்தை முடித்துக்கொண்டு அன்றிரவே திரும்பிவிடலாம் என்று தீர்மானித்துச் சகலகாரியங்களையும் செய்துவிட்டு வந்தேன். எனக்குள்ள ஆஸ்திக்கு நீ தான் இனி அதிகாரி. அந்தப் படுபாவி சேகரன் உன்னை மோசம் செய்துவிட்டதால் உன் கதியே அதோ கதியாகிவிட்டது. உனக்கும் ஒரு ஆதரவு. எனக்கும் ஒரு திருப்தி. மாமிக்கும் ஒரு நல்ல துணை......

என்றுகூறி முடிக்குமுன் பாரதி கடகடவென்று சிரித்தாள். ''மாமா! பேஷ்; விஷயம் வெகு அழகாயிருக்கிறது. உமக்கு நான் துணை. எனக்கு நீர் துணை. நாம் இருவரும் மாமிக்குத் துணை. அவ்வளவுதானே! நம்மெல்லோருக்கும் மேல் உலகத்தை எல்லாம் ரட்சித்துப் பக்கத்துணை இருந்து ஒருவன் காப்பாற்றுகிறன் என்கிற எண்ணமே உங்களுக்கு மறந்துவிட்டதல்லவா! துணையாம் துணை. மாமா! வீணை அனியாய மார்க்கத்தில் பிரவேசிக்கவேண்டாம். ''காடு வாவா வீடு போபோ'' என்கிற 50 வயதுடைய உமக்கு கல்யாணமாம். கர்மாதியாம். உமது ஆஸ்தியும் இதோ இந்த தூசியும் எனக்கு ஒன்றுதான். உமது சுகத்திற்கும் துக்கத்திற்கும் சமபங்குதாரியாயுள்ள மனைவி இப்படிப் படுத்து இம்சைப்படுகிருளே என்கிற அனுதாபமும் அங்கலாய்ப்பும் லவலேசமும் இல்லாமல் அவளைக் கண்ணீர்விட்டுக் கதறவைத்துவிட்டுச் சாகப்போகும் கிழமாகிய உமக்குக் கல்யாணம்வேறு வேண்டிக்கிடக்கிறதா?

இதே நிலையில் நீர் படுத்திருந்தால், மாமி மறுவிவாகம் செய்துகொள்ள நினைப்பாளா! நினைக்க மனம்தான் வருமா! நினைத்தாலும் நீர் அதைப் பொறுப்பீரா! சற்று யோசித்துப் பாரும். பெண்களின் உறுதி இந்த அல்ப ஆண்களுக்கு ஒருபோதும் வராது என்பதை இனியாவது உணரும். இந்த பாரதி ஆண்டவனின் அடிமையேயல்லாது உம்முடைய அடிமையல்ல என்பது நினைவிருக்கட்டும். சேகரனைப்பற்றி நீர் பேசுவது அனுவச்யம். சேகரனின் கால் தூசிக்கும் நீர்

இணையாகமாட்டீர். இனி இத்தகைய அசம்பாவிதமான வார்த்தையை நீர் எடுப்பதாயின் நான் தற்கொலைபுரிந்து கொண்டு அந்தக் கொலைப்பாதகத்தை நீர் அனுபவிக்கும்படிக் குச் செய்துவிடுவேன் ஜாக்ரதை. ஏதோ மரியாதை, அன்பு, இவைகளுடன்நடக்கும்பரியந்தந்தான் எதையும் பொறுக்க முடியும். அத்துமீறினல் அகர்த்தம் நிச்சயம். ஜாக்ரதை" என்று படபடத்து உரத்துக்கூறி கேவலமாக அவமதித்துப் பேசினள்

இந்த அவமானகரமானதும் துடுக்கானதுமான வார்த் தையைக்கேட்ட மாமாவின் ஆத்திரம் குபீரென்று மண் ணெண்ணெயைவார்த்துத் தீவைத்ததுபோல்மூண்டுவிட்டது. "அல்ப நாயே! என்ன சொன்னய்? என்னைக் கொலைப்பாதக னுக்கிவிடுவாயா! என்னையா! அனுதைப் பிணமே...கூலிக் காரக்கழுதையே! என்ன சொன்னய்? என்ன சொன்னய்?" ...என்று மிருகாவேசத்துடன் எதிரிலிருந்த உலக்கையை எடுத்து அடிக்க ஓடினன்.

இதற்குள் படுக்கையில் படுத்தபடி இந்த கோரத்தாண்ட வத்தைக்கண்டு நடுங்கிய மாமி கூகூவென்று குளறியவாறு பெரியதாகக் கத்திவிட்டாள். அதே சமயம் உலக்கையின் அடி பலமாக பாரதியின்மீது விழுந்ததும் "ஹா!" என்று அலறிவிட்டாள். இதற்குள்அக்கம்பக்கம்ஒன்றுசேர்ந்துபெரிய அமளியாகிவிட்டது. அதற்குமேல் கேட்கவேண்டுமா! ஏற் கெனவே இவன் செய்கை ஊர் பூராவும் தெரிந்து இவனை வெறுத்தும், பரிகஸித்தும் பேசினவர்களுக்கு இப்போது இவனிடம் சரியான ஆத்திரம்உண்டாகி போலீஸுக்கே தகவல் தெரிவித்து விஷயங்கள் பூராவும் கூறிவிட்டார்கள்.

உலக்கையினல் அடிபட்ட பாரதி மூர்ச்சையாகி விழுந்த வள், பிறகு சரியானபடி நினைவுவந்து கண்திறந்துபார்க்கும் போது அவள் பக்கத்தில் அன்றுவந்த பிச்சைக்காரப்பாட்டி தான் உட்கார்ந்திருந்தாள். தலையில் பலமான அடிபட்டு கட்டுகட்டியிருப்பதும், அன்று நடந்த பயங்கரமான அதிர்ச்சிமிகுந்த சம்பவத்தின் நினைவும் சற்று கனவு காண் பதுபோல் தோன்றியது...பாட்டீ!...நாம் எங்கிருக்கிறோம்... மாமி எங்கே....இது யார் வீடு?...என்றாள் அடுக்கடுக்காய்.

"அன்று நடந்த பயங்கர சம்பவத்தின் பலன், உன்னைப் பலாத்கரித்து,இம்ஸித்துக் கொலை செய்வதற்காக எத்த னித்து மண்டையை உடைத்த குற்றத்திற்காக மாமன்மீது வழக்கு தொடர்ந்து அவனைக் கைதுசெய்தார்கள். நீ இப்போது ஆஸ்பத்ரியிலிருக்கிறாய்" என்றாள் விவரமாக.

பாரதியின் உள்ளம் துடித்தது. உண்மையில் அவ ளுடைய அந்தராத்மா சொல்லியது "துஷ்டர்களை சிட்சிக்க எம்பெருமானெருவனில்லையா!"என்று. வழக்கில் 7 வருஷங் கடுங்காவல் தண்டனை மாமனுக்கு விதிக்கப்பட்டது.

அந்த ஊரில் அவளுக்கு இருக்கப்பிடிக்கவில்லை. அதோடு மாமனின் பணத்தில் வயிறுவளர்க்க மனம் சற்றும் இடந்தரவில்லையாதலால் முன்பு யோசித்தபடி கிழவியின் துணையுடன் மாமியையும் அழைத்துக்கொண்டு வெளியூர் வந்து ஒரு சிறிய தனி வீட்டில் குடியேறினாள். இங்கு வந்தபிறகு மாமிக்கு மின்ஸாரவைத்தியம் செய்ததில் வாய் சற்று நன்றாகப் பேசவந்தது.

நாளடைவில் "கானகலா" என்கிற ஸ்தாபனத்தை ஏற்படுத்தி பாரதி மானமாயும் கண்ணியமாயும் ஜீவனம் செய்ய மார்க்கத்தை வகுத்துக்கொண்டாள். அதன்பிறகே சாந்தி உண்டாகியது. எனினும் சேகரனைமட்டும் அவளால் அரை க்ஷணங்கூட மறக்கமுடியாது நினைத்துநினைத்து ஏங்கினாள். எல்லாரும் சேர்ந்து வீணாநாதத்தைக் கிளப்பி மெய்மறந்து வாசிக்கும்போது தன்னை மறந்து தற்செயலாக எதிர்ச்சுவரில் மாட்டியிருந்த காலெண்டரைப்பார்த்தாள். அவளையறியாது, ஒரு அதிர்ச்சி சரீரத்தையே ஆட்டியது. அதேமாதம் அதே தேதியன்றுதான் தன்மாமனுக்குத் தண்டனைவிதித்த நாள் தாங்கள் மனம் புண்பட்டுத்தவித்த நாள், அவ்வூரை விட்டு அன்றிரவே கிளம்பிய நாள் என்பதை பளிச்சென்று நினைப்பூட்டியதால், தான் மாணவிகளின்மத்தியிலிருக்கும் தன்மை கூட மறந்து, கையில் வீணையைத்தாங்கியபடியே தம்பித்து தன்னையே தான் மறந்தாள் என்றால் மிகையாகாது.

6

அகப்பட்டுக்கொண்டார் தும்மட்டிபட்டர்

"டீச்சர்! மேலே என்ன வாசிப்பது?" என்று மாணவிகள் கேட்டதும் அவள்காதில் விழவில்லை. "அம்மா! பாரதீ பாரதீ! குழந்தைகள் கேட்கிறார்களே?"... என்றுமாமிகூடத்து உள்ளிலிருந்து உரத்துக் கூப்பிட்டபிறகே பாரதி சடக்கென்று தெளியவாரம்பித்தாள். தன்னையறியாது கண்களில்நீர்தேங்கி இருந்ததையும் உணர்ந்தாள். வருஷங்களைக்கணக்கெண்ணியதில் சரியாக 7 வருஷங்களாகிவிட்டதை யறிந்ததும் மீண்டும் தூக்கிவாரிப்போட்டது.

தன் மாமன் விடுதலையாகி மறுபடியும் எங்கே வந்துவிடுவானோ! தனக்கு நேர்ந்த ஆத்திரத்தினால் இன்னும் என்ன வெஞ்சம் தீர்ப்பானோ! எப்படியோ நாட்கள் ஓடி உருண்டுவிட்டதே! என்று எண்ணியபடி எழுந்து சென்று கண்ணை யலம்பிக்கொண்டு மறுபடியும் வந்து உட்கார்ந்து, "குழந்தைகளே! ஏதோ திடீரென்று தலைசுற்றியது. அதனால் அப்படி பேசாமலிருந்துவிட்டேன்... சரி... கர்னடா ராகத்தையே வாசியுங்கள்" என்றாள்.

உடனே அந்த வீணையரங்கத்தினின்று ஜம்மென கானடா ராகத்தில் பாரதியாரின் அமரகவிகளில் ஒன்றாகிய ''காணி நிலம் வேண்டும்'' என்கிற பாட்டு கம்பீரமாய் ஆனந்த அலை யோசைபோல் எழுந்தது.

அந்த இன்ப நாதத்தைக்கலைப்பதுபோல் வாசலில் நாய் பலமாகக்குலைத்தது. இதிலிருந்து வாசலில் யாரோ வந்திருப் பதையறிந்த கிழவி வெளியே சென்று பார்த்தாள். வாசலில் ஒருப்ரம்மாண்டமான கார் வந்து நின்றது. அதிலிருந்து மிகவும் ரூபவதியாயும் ப்ரமாதமான நாகரீகத்தில் மூழ்கிய வளாயும்காணப்படும் அம்மாள் இறங்கினாள். கூடவே இரண்டு நாகரீக ஆடவர்களும்இறங்கினார்கள்.

கிழவி நாயை அடக்கி அமர்த்திவிட்டு வந்தவர்களை வாச வாரண்டாவிலேயே அமர்த்தி 'யாரம்மா! என்னசமாச்சாரம்?' என்றுகேட்டாள். வந்த நாகரீகநங்கை ''இந்த நிலையத்தின் சொந்தக்காரரைப் பார்க்கவேண்டும். வீணைகற்றுக்கொடுக்கும் அந்தம்மாள் எங்கே? பெண்களின் அறியாமைஇருளைப்போக்கி அறிவும் ஆற்றலும் பெருகி பெண்கள் சகல விதத்திலும் ஆண்களுடன் சரிநிகர்ச்சமானமாய் வாழ்வதற்காக ஒரு தனிப் ப்ரசார இலாகாவை நாங்கள் ஆரம்பித்திருக்கிறோம். அதில் அனேக விஷயங்களை நாடகம் மூலமாயும் சினிமாப்படம் எடுத்து அதன் மூலமாயும் உலக மக்களைத் திருத்திவரு கிறோம். அதற்காக இந்த ''கானகலா'' ஸாதனத்திலிருந்து அந்தம்மாளின் உதவியைக்கோரி நாங்கள் வந்திருக்கிறோம். இதில் உள்ள மாணவிகள் யாராவது நடிப்பதற்கும் பாடுவ தற்கும் வருவார்களா? அந்தம்மாள் பின்னணிகீதம் வாசிக்க வருவார்களா? சரியான முறையில் நடத்தி பணம் ஏராள மாகக் கொடுப்போம். தயவு செய்து அந்தம்மாளைக் கூப் பிடுங்கள். நாங்கள் நேரில் பேசுகிறோம்'' என்று ஆங்கிலமும் தமிழும் கலந்து பொறித்துக் கொட்டினாள்.

இவர்கள் பக்கா சினிமாக்காரர்கள்; இத்தகையவர்களை பாரதி கண்ணெடுத்தும் பார்க்கமாட்டாள் என்பது கிழவிக்கு நன்றாகத்தெரியும்: இவள் சற்றுயோசிப்பதற்குள், வந்தமனுஷி கலகலவென்று சிரித்துவிட்டு ''பாட்டீ! சினிமாப்படம் என்ற உடனே நீங்கள் ப்ரமாதமாய் பயந்துவிட்டீர்களல்லவா? அப்படிப்பட்ட பயம் எதுவும் வேண்டாம்.

சில சினிமாக் கம்பெனிகளின்மூலம் எத்தனையோ அநர்த்தம் விளைந்திருப்பது உண்மைதான். அந்த சினிமாவின் மூலம் பல குடும்பங்கள் சிதறிப்போனதும் வாஸ்தவந்தான். சிலர் கணவன்மீதும் தாய்தகப்பனார்மீதும் அசம்பாவிதமான வழக்குகளைத்துடர்ந்து சந்திசிரிக்கும் கண்ராவியைப்பார்த்து பொதுமக்கள் சினிமாவைப் பலமாகத்தாக்கி வெறுக்கிறார்கள். அதை நானும் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் எங்கள்

கம்பெனி இப்போதுதான் ஆரம்பித்திருக்கிறது. இதன் முதலாளிசாமன்யமானவரல்ல. அவர் மகாபெரியவர் விவேகி உத்தமத்யாகி. இந்த உலகத்தையே வெறுத்து ஆத்மரக்ஷணத்திற்காக இமாலயத்தில் தவம்செய்த யோகி. இந்த உலகத்து ஜனங்களைத் திருத்தி நல்வழிபடச் செய்வதற்காக அவரைப் பணிபுரியும்படியாக பகவான் உத்திரவிட்டிருப்பதால் தற்காலத்தில் மக்களின் கவனத்தைக் கவர்வதற்கு சினிமா ட்ராமா நாட்டியம் முதலியவைகளைப்போன்ற சிறந்த மார்க்கம் வேறு இல்லை என்று அவர் திட்டமாகத் தெரிந்த ஞானியாதலால் இதை ஆரம்பித்திருக்கிறார். அவருடைய த்யாகத்தைக்கேட்டால் நீங்கள் ப்ரமிப்பீர்கள்...அதோ காரில் காஷாய உடையுடன் உட்கார்ந்திருப்பவர்தான் ஸ்வாமிஜி.'' என்று அறிமுகப் படலத்தை முடித்துவிட்டு ஸ்வாமிஜியைக் கூப்பிட்டாள்.

மகா பெரியயோகியான அவரும் இறங்கிவந்தார். அவரையும்கூட அழைத்துக்கொண்டு அந்தம்மாள் முந்திக்கொண்டு உள்ளே வந்துவிட்டாள். அப்போது அத்தனை மாணவிகளின் வீணாநாதம் வெகு ரமணீயமாய் ஆரபிராகக் கடலில் திளைந்துக் கொந்தளித்து வெகுவெகு அத்புத சுகானுபவ ரஸத்தை அள்ளிவீசும் அபூர்வ இசையைக் கேட்டவாறு மூவரும் உள்ளே வந்தார்கள்.

காஷாயதாரியான ஸ்வாமிகளைக் கண்டதும் பாரதி சடக்கென்று எழுந்துநின்றாள். நமஸ்கரிக்கவும் கையை எடுத்தாள். அடுத்த க்ஷணமே அந்த சாமியார் தனது மாமா என்பதை அறிந்து...முகத்தை வெறுப்புடன் திருப்பிக்கொண்டாள். அதே க்ஷணம் வந்த சாமியாரும் தன்னையறியாது வாய்விட்டு...''ஹா...பாரதியா...உண்மையாக பாரதியா...என் கண்கள்...என்று முடிப்பதற்குள் பாரதி...'' ஆம் உம் கண்கள் சரியாகத்தானிருக்கின்றன...மாமீ! அதோ மாமா வந்துவிட்டார்...எப்போது மாமா சிறைச்சாலையிலிருந்து விடுதலையாகி வந்தீர்கள்?...இப்போதுதான் நான் இன்றய தேதியைப்பார்த்ததும், ஏழு வருஷங்களுக்கு முன்பு தாங்கள் தண்டனையடைந்ததும் அந்த சமயம் இருந்த அலங்கோலமும் நினைவுக்கு வந்தது......''

என்று இவள் விடாமல் மெஷின்போல் சொல்லும்போது கூட வந்த நாகரீக நங்கைக்கு முகத்தில் இன்னதென்று விவரிக்க இயலாத ஏதோதோ மாறுதல்கள் உண்டாகி வியப்பும் திகைப்பும் கொண்டு அவனையே பார்க்கிறாள்...''என்ன! சிறைச்சாலையா?'' என்று அழுத்தமாகக்கேட்டாள்.

கிழவிக்கு இந்த சாமியார்தான் பாரதியின் மாமா என்பது தெரியவில்லை; பிறகு நன்றாகப் புரிந்துகொண்டு அவளும் ஆச்சரியமடைந்து...'' அம்மா! ஏதோ ''இந்திரன் சந்திரன் த்யாகி மகாத்மாவுக்குச் சமமானவர் என்றெல்லாம்

என்னிடம் கூறி இன்னும் இரண்டு நிமிஷமாகவில்லையே! இத் தக் கொலைப்பாதகனையா அப்படிச் சொன்னீர்கள்?'' என்று முடிப்பதற்குள் படுக்கையில் படுத்திருக்கும் மாமி இந்த மனி தனைப்பார்த்து வயிறெரிந்துபோய்......''அம்மா! இப்படி வாருங்கள், நான் சொல்லுகிறேன். தன்னைத்தான் சீர்திருத் தம் செய்யத்தெரியாது குடும்பத்தை மிருகாவேசத்தினால் நாச மாக்கிய இந்த மனிதனா தியாகி?...ஐயோ! இந்த மனிதனை அக்கினி சாட்சியாக மணந்த பாவி நான் சீக்காக விழுந்து விட்டதால் இவர் தியாகத்தினுடைய பெருமையினால் தன் பெண்ணுக்குச் சமானமான இக்குழந்தையை மணக்கத் துணிந்து துடிதுடித்து, அது நிறைவேறாது போனதால் இவ ளைக்கொலைசெய்ய எத்தனித்தார். ஆனால் இவர் நினைத்தது ஒன்று; கடவுள் நினைத்தது ஒன்றாக ஆகிவிட்டது. 7 வருஷ காலம் ஜெயிலில் தண்டனையை அனுபவித்து வெளிவந்துள்ள பரமபுருஷன் த்யாகியாம். த்யாகி...கட்டிய மனைவியின் பரி தாபத்தைஉணராத மிருகத்தனம்நிறைந்த மனிதனா த்யாகி? ...என்னுள்ளம் கொதிக்கிறது. என் கண்மணி என்னைக் காப்பதுபோல் எவரும் காக்கமாட்டார்கள். இந்த மகாபாவி யுடன் சேர்ந்துகொண்டு நான் இந்தக் குழந்தைக்கும் ஆதி யில் த்ரோகம் செய்தேன். அத்தகைய எனக்கு மின்ஸார வைத்தியத்தினால் பேச்சு நன்றாக வரும்படியாகச் செய்து விட்டாள். அதனால் என்வயிற்றெரிச்சல் தீரச்சொல்கிறேன்.

என்று முடுக்கிவிட்ட மெஷின்போல் இவள் கூச்சலிட்டுப் பேசுவதைக்கேட்ட மாணவிகள் நடுங்கிப் பயந்துவிட்டார்கள். ஆனால் அடுத்தக்ஷணம் சாமியார் அங்கில்லை: எப்படியோ நழுவிவிட்டார். அவரைக் காணவில்லையே என்று தேடிக் கொண்டு அந்தச் சினிமா கம்பெனிக்காரியும் துடர்ந்து வீதிக்கு வந்தாள்.

வீதியில் காரில் பீடி பிடித்தவாறு ஸ்வாரஸ்மாய் புகை யை விட்டுக்கொண்டு கண்களைமூடித் தவம் செய்கிறவர்கள் போல் உட்கார்ந்திருக்கும் மைனர்களைக்கண்டு, வந்த சுந்த ராங்கி ''ஏன் ஸார், சாமியார் இப்போது இங்கு வந்தாரே எங்கே?......அவரைக் காணவில்லையே. அவர் ஒரு கொலை செயயத்துணிந்து சிறைதண்டனையடைந்த கேடியாம்...அவ ருடைய மனைவியும் மற்றயோருமல்லவா இந்த ''கானகலா'' வின் சொந்தக்காரர்களாம். அவர்கள் விட்ட சுடுசரத்தைக் கேட்டு திடுக்கிட்டு நழுவிவிட்டாரே. கம்பெனியின் பணம் பத்தாயிரம் ரூபாய் யாரிடமிருக்கிறது?'' என்று பதறப் பதறக் கேட்டாள்.

இரு மைனர்களும் ''என்ன! என்ன! சிறைச்சாலையி லிருந்து வந்த கைதியா!...ஐயயோ! பத்தாயிரம் மட்டுமா... இன்று செட்டியார் கொடுத்த 15 ஆயிரமும் சாமியாரிடமல் லவா இருக்கிறது. அவர் இப்படி வரவில்லையே? எங்கு

போயிருப்பார்?"...என்று கதிகலங்கினர்கள். காரை ஓட்டுவ தற்குக்கூட முடியாது கைகள் நடுங்கி தேகம் படபடத்தது. காரும் வேகமாய்ச்சென்று மறைந்தது.

7

அகம்பாவமும் அகத்துடிப்பும்.

வீணைவாசிப்பதை நிறுத்திப் பயத்துடன் மாணவிகள் தம்பித்துவிட்டார்கள். கிழவி மிக்கஆச்சர்யத்துடன்"பாரதி! ஒரே நிமிடத்திற்குள் இங்கே ஒரு சினிமா நடந்துவிட்டது பார்த்தாயா? 25,000 ரூபாய் இவனிடம் அகப்பட்டுக்கொண்டு விட்டதென்று மூவரும் அலறிப்புடைத்துக்கொண்டு ஓடுகிறூர் களே. என்ன அக்ரமஉலகம்?" என்ருள்.

இதற்குள் பாரதி மாணவிகளைப் பார்த்து "குழந்தை களே! நீங்கள் இன்று இதோடு போய்வாருங்கள். நாளைய தினம் இன்னும் அதிகநேரம் சொல்லித்தருகிறேன். இங்கு நடந்த எந்த விஷயத்தையும் வெளியில் சொல்லாதீர்கள்" என்று எச்சரித்து அனுப்பினுள்.

இதற்குள் மிகவும் அழகாய் அலங்காரவதியாயுள்ள ஒரு பெண் "டீச்சர்! நான் வீட்டிற்குப்போனதும் விவரமாக எங்கம்மா எனக்கு விஷயம் சொல்லுவாள். எங்க வீட்டில் தான் இந்த சாமியார்தாதா ஒருமாதமாய் தங்கியிருக்கிறூர்... என்றதைக்கேட்டதும் பாரதி திடுக்கிட்டு "என்ன என்ன! இப்போது வந்தவள் உன் தாயாரா...அவர்களும் சினிமா...

என்று முடிப்பதற்குள், "என் தாயார் ஸினிமா நடிகை இல்லை டீச்சர்! எங்கம்மா பெரிய படிப்பாளி. சமூகசீர் திருத்தச் சங்கத்தின் தலைவி. சினிமாக் கம்பெனிகளின் ஐக்யக்கழகத்தின் காரியதரிசி. மேல்நாடுகளுக்கெல்லாம் போய் வந்திருக்கிருள். அதனுல் அவளிடம் சினிமாக் காரர்களுக்கு அதிகமதிப்பு......

பாரதி இடைமறுத்து, "ஓ! நீ உன் தாயாரின் ப்ரபா வத்தையே சொல்கிருயேயன்றி உன் தந்தையின்பேச்சே வர வில்லையே! உன் தந்தைக்கு என்ன உத்யோகம்? அவர் சினி மாக்கம்பெனிகளில் சம்மந்தப்படவில்லையா? அவரும் மேல் நாடு சென்றிருக்கிறூரா?" என்ருள்.

சுதர்மா:— ஊம்... மகிமை பூராவும் எங்கம்மாவுக்குத்தான்! அப்பா பெரிய ஆபீஸர் உத்யோகந்தான் செய்தார். ஆனுல் சில வருஷமா அவருக்கு உடம்பு சரியில்லை. இதோ படுத் திருக்கிற மாமியைப்போலத்தான் படுக்கையாய்க்கிடக்கிறூர்.

பாரதி:— அடாடா! அவருக்கு சற்று குணமாகவில்லை! என்ன வைத்யம்செய்தீர்கள்? அதைத் தெரிவித்தால் நானும் கூற

183161

மாமிக்குச் செய்வேன். ஐயோ பாவம்! எந்த உத்யோகத்திலிருந்தார்?

சுதர்மா:—அவரா...ஐ. ஸி. எஸ். பாஸ்செய்துட்டுப் பெரிய வேலையில்தான் இருந்தார். ஐ. ஸி. எஸ். சந்திரசேகரன் என்ருல் எல்லோருக்கும் தெரியுமே. பல தங்கமெடல்கள் பெற்றவர்...

பாரதி:...(பதறியவாறு) யாரு யாரு! சந்திரசேகரனு... எந்த ஊரு... அவருடைய மனைவியா இப்போது வந்தது?

சுதர்:...ஏன் டீச்சர்! அவரை உங்களுக்குத் தெரியுமா!... மாங்குடி என்ற ஊர்பெயரின் முதலெழுத்தும், தன் பெயரின் முதலெழுத்தும் சேர்த்து M. C. சேகர் என்றுதான் சந்திரசேகரன் என்ற பெயரைக் குறுக்கி, வைத்துக்கொண்டார்.

இதற்குமேல் பாரதியின்சந்தேகம் சடக்கென்று நிவர்த்தியாகிவிட்டது. ஆதியிலேயே, தான் பெரிய படிப்புக்குச் சென்றதும் இப்படித்தான் M. C. சேகர் என்று பெயர் வைத்துக் கொள்ளப்போவதாக அடிக்கடி தன்னிடம் சொல்லியதும் நினைவுக்கு வந்துவிட்டது. எந்த ஒரு புனித பிம்பம் தன்னிதயக்கோயிலில் ஆவாகனம்செய்து பூஜிக்கப்பட்டு வருகிறதோ அதே தெய்வந்தான் இந்தப் பெண் சொல்லும் மனிதன் என்பதை நன்ருகத் தெரிந்துகொண்டாள். அதை இன்னும் ஊர்ஜிதப்படுத்துவதற்கான சில கேள்விகளைக் கேட்டுத் தெரிந்துகொண்டதும், ஏதோ ஒருவித புதிய உலகத்தில் தன்னைக் கொண்டுசேர்த்துவிட்டதுபோன்ற ஒரு தனித்த இன்பமடைந்தாள். எந்த ஒரு ப்ரதிமையைத் தான் சதா எண்ணி ஏங்குகிருளோ, அந்த மனிதனின் செல்வ மகளுக்குத் தான் சங்கீதமாவது சொல்லிக்கொடுக்கும் ஒரு பெரும் பாக்யம் கிடைத்ததே என்று ஒரு இன்ப ஊற்று உள்ளத்தில் சுரந்தது. எனினும் "அவருக்குமா இத்தகைய பாரிச வாயுவு?... சிறிய பெண்ணுகையால் சொல்லத் தெரியாமல் உளறுகிருளா... நமக்கும் அவருக்கும் தெரியும் என்கிற விஷயத்தையே வெளியிடக்கூடாது. இன்னும் விஷயத்தை விசாரித்தறிவோம்" என்று எண்ணியவளாய்... "சுதர்மா! நீ வீணைவாசித்து உங்கப்பா கேட்டு மகிழ்கிருரா! எப்படி இருக்கிறது என்று சொல்கிருர்? இந்த மாமியைப் போல் உடம்பு என்ருல் பாரிசவாய்வா! பேசுகிருரா...யார் வைத்தியம்செய்கிருர்கள்?" என்று அடுக்கடுக்காகக்கேட்டாள்.

சுதர்:—எங்கப்பாவைப் பார்த்தே எத்தனையோ வருஷமாகிவிட்டது. அவர் இப்போது க்ராமத்தில்தானிருக்கிருர். எங்கம்மாவுக்குப் பலபேர் ஸிநேகம். சதா பெரிய மனிதர்கள் வந்துகொண்டே இருக்கும் இடத்தில் அஸிங்கம் பிடித்தது போல் இவர் படுக்கையில் படுத்திருப்பதைக்கண்டால் எங்கம்மாவுக்குப் பிடிக்கவில்லை. வெட்கமாயும் விகாரமாயும் இருந்தது. இந்த நோய் என்னவோ தீராது என்று டாக்டர் சொல்லிவிட்டார். எதற்கும் உபயோகமற்ற அவ

ருடைய தொணப்பு மட்டும் சகிக்கவேமுடியாது உபத்திரவம் செய்வார். அதனுல் எங்கம்மா அவரை கிராமத்தில்கொண்டு விட்டுவிட்டு உடனே ஒரு உல்லாஸயாத்திரைவெளிநாட்டிற்கு ப்ரயாணமானுள். அதன்மேல்தான் அம்மாவின் புகழ் அதிகரித்ததாம்...

பாரதி:—உங்கப்பாவுக்கு யார் எல்லாம் செய்கிருர்கள்? க்ராமத்திலிருக்க அவர் ப்ரியப்படுகிருரா...அவரைப் பார்க்க வேண்டும் என்று உங்களுக்கு ஆசை இல்லையா? அவருக்கும் உங்களைப் பார்க்க ஆசை இல்லையா?......உனக்கு எத்தனை பேர்கள் கூடப்பிறந்தவர்கள்?

சுதர்:—எனக்கு இரண்டு தம்பிகள் இரட்டைப்பிறவிகள். அவர்களை அம்மா, உயர்தரப்படிப்பை இப்போதே படித்துத் தேற ஆசைப்பட்டு வெளிநாட்டு ஹாஸ்டலிலேயே விட்டிருக்கிருர்கள். அவர்களுக்கு மாதாமாதம் பணமனுப்புகிருர்கள். என்னையும் அனுப்பத்தான் எங்கம்மா ஆசைப்பட்டாள். நான்தான் போகமாட்டேன் என்று மறுத்துவிட்டேன்.... எங்கப்பாவைப்பற்றி நாங்கள் நினைப்பதே இல்லை. அவருக்கு வேலைக்காரர்கள் இருந்து கவனிக்கிருர்கள். நோயாளியாய்ப் படுக்கையில் கிடப்பவருக்கு ஆசை என்னவாம்? அந்தப் பக்கமே நான் போனதில்லை. எங்கம்மா எடுக்கப்போகும் படத்தில் நான் நடிக்கவேணுமாம். அதில் ஒரு கட்டத்தில் நான் வீணைவாசிக்கும்படி வருகிறதாம். அதற்காகத்தான் இங்கு என்னை அனுப்பினுர்கள்.

பாரதிக்கு இவ்விஷயத்தைக்கேட்கக்கேட்க "இப்படியா உலகம் இருக்கிறது? இதுவா நியாயம்! ஐயையோ! ஒரு சின்னஞ்சிறு சிறுமியின் வாயில் இத்தகைய அலக்ஷியத்துடனும் விவகாரம் இன்னதென்று உணராத மவுட்டீக அகம்பாவத்துடனும்கூடிய வார்த்தைகள் வருகின்றன என்ருல் இவளுடைய தாயின்நிலைமை எப்படி இருக்கும்? அடாடா! தருமம் பிறந்த இந்நாட்டில்...கற்பும்பொற்பும் சிறந்து விளங்கும் இந்நாட்டில்,...சத்தியத்திற்கு நிலைஇடமான இந்நாட்டிலா இத்தகைய விபரீதத்தாண்டவம் நடப்பது?

தன் பவிஷு தனக்குத்தெரியாமல் சீர்திருத்தமாம். கண்ராவியாம். ஏதேதோ அந்தம்மாள் உளறுகிருளாமே... என்னுருயிர் சேகரனுக்கா இக் கதி? அவனு அனுதையைப்போல் கிடக்கிருன். அவனையா இந்த மகாபாவி அலக்ஷியம் செய்து, தான் இத்தகைய பொம்மலாட்டமாடுகிருள். ஐயோ! என்னுள்ளம் வெடித்துவிடும்போலிருக்கிறதே! என்று சிலவினுடிகள் அப்படியே குழம்பிக்கலங்கினுள்.

அவளுடைய தடுமாற்ற நிலைமையில் சுதர்மாவையும் மறந்தாள் என்ருல் மிகையாகாது. இவள் ப்ரமைபிடித்து உட்கார்ந்திருப்பதைக் கண்ட சுதர்மா "டீச்சர்! ஏன் ஏதோ மாதிரி இருக்கிறீர்கள்? நான் போகட்டுமா?" என்று கேட்ட

பிறகு தான் தனது கலக்கமும் மவுனமும் நன்ருகத்தெரிந்தது. உடனே சற்று தன்னைச்சமாதானப்படுத்திக்கொண்டு "ஒன்றுமில்லை சுதர்மா! இம்மாதிரி பாரிசவாயுவு உலகத்தில் எல்லோருக்கும் வருகிறதே! எனக்கும் வராதிருக்க வேண்டுமே! என்று நினைத்துப்பயந்தேன்... ஆமாம் உன் பிதாவின் மக்கள் மனிதர்கள் யாருமில்லையா! தாதா! பாட்டி...

என்று முடிப்பதற்குள் "அய்யய்ய... தாதாவும் பாட்டியும் எப்போதோ செத்துப்போய்விட்டார்களாம். எங்கப்பாவுக்கு அத்தையாம் ஒரு கிழட்டுப் பிணம் இருக்கிறதாம். நாங்கள் லக்ஷியமே செய்வதில்லை. அவள் எங்கம்மாவைத் திட்டுகிருளாம். கஜவாயாடியாம். நான் இன்றுவரும் போதுகூட அவள் இந்த எதித்த வீட்டுவாசலில் நின்றிருந்தாள். நான் பார்க்காததுபோல் வந்துவிட்டேன்" என்ருள்.

பாரதி:—ஏம்மா! எதிர் வீட்டில் புதிதாகக்குடிவந்திருப்பவளா சேகரனின் அத்தை?

சுதர்:—எதிர் வீட்டில் குடிவரப்போவதற்கு முன்பே எங்கம்மா "அவளைப் பார்த்து பேசாதே. அவள் வீட்டுப்பக்கம் போகாதே" என்று கூறினுள். இன்று வரும்போது கூடபார்த்தேன். டீச்சர்! நேரமாகிவிட்டது நான் வருகிறேன்" என்று கூறிக்கொண்டே எழுந்து போய்விட்டாள்.

பாரதியின் உள்ளத்தை அவளைப் படைத்த பகவான் தான் அறியவேண்டுமேயன்றி மனிதரால் அறியமுடியுமா? உலகத்தில் மனிதவர்க்கத்தின் நிலைமைஇப்படியாஇருக்கிறது? சதிபதி என்கிற ஒப்புயர்வு அற்ற மாசிலாத ப்ரேமையின் பந்தத்தில்கூடவா பிளவு, பஞ்சம்! ஐயோ! சேகர்! சந்திரசேகர்! உனக்கா இந்தகதி? நீயா ஒரு க்ராமத்தில் திக்கு திவாணமின்றி பரதேசிபோல் கிடப்பது! ராஜபோகத்தில் அதிகார தேவதையைப்போல் ஆட்சிபுரியவேண்டிய உனக்கா வேலைக்காரர்களின் தயவை எதிர்பார்த்துக்கொண்டு அவர்களுடைய முகத்தைப் பார்த்துப்பார்த்துப் பல்லைக்காட்டித் தண்ணீர் கேட்கும் நிலைமை வந்திருக்கிறது?" என்று உள்ளுக்குள் விம்மி வெடித்து உருகுகிருள். "எதிர் வீட்டில் குடிவந்துள்ள குமுதாப்பாட்டியா சேகரனின் அத்தை! அடாடா! தெய்வச்செயல் எப்படி எல்லாம் நடக்கிறது?" என்று தனக்குள் எண்ணுததும் எண்ணித்தவித்தாள். அவள் கண்முன்பு சேகரனின் அழகிய பிம்பமே காட்சியளித்தது.

8

அன்பின் ஆட்சி—ஆணவத்தின் வீழ்ச்சி

"செல்வீ! என் கண்மணீ! அழாதேம்மா! அப்பழுக்கற்ற தூயபிம்பமாகிய உன்னை எந்த நாய்களும் அபாண்டமாகப் பேசாது. உன்னுள்ளத்தின் பரிசுத்தம் எனக்குத்தெரியாதா!

நெருப்பை எங்காவது ஈ மொய்க்குமா! என்ன உலகம், என்ன அநியாயம்! உலகத்தில் ப்ரத்யக்ஷமாக இரண்டு காட்சிகளை நாம் கண்ணாரக்காண்கிறோம்.

'எந்த சமயத்திலும் எந்தவிதத்திலும் எப்போதும் இவளைநான் என்னுயிராக மதித்து காப்பாற்றுகிறேன், என்று ஆணும்' ''நான் சகல அம்சங்களிலும் இவருடைய நிழல் போல்இருந்து என்கடமையைச் செய்வேன்'' என்றுபெண்ணும் அக்கினி சாக்ஷியாக ப்ரமாணம் செய்து பலரறிய மணந்தவர் களில் என்னை உன் மாமாவும், சேகரனை அந்தப் படுபாவியும் கைவிட்டுக் கதறவைத்தக் கண்ராவியை ப்ரத்யக்ஷமாகப் பார்த்துவிட்டோம். சேகரனின் விஷயத்தைக் கேட்டு என் வயிறுகொதிக்கிறது. நான் தற்போது நல்லநிலைமையில் ஸ்வாதீனத்துடன் இருந்தால் உன்னை சேகரனிடம் நேராக அழைத்துச்சென்று ''அப்பா! அழகாயில்லை, பணமில்லை, பாரதிக்கு ஏதோ துர்விபாதி வந்துவிட்டது என்றெல்லாம் கூறி நிர்த்தாக்ஷிண்யமாய் இரும்பு உள்ளத்துடன் ஆதி பிரேமையையும் மறந்து, கொடுத்த வாக்கையும் துறந்து பாரதியைக் கைவிட்டுப் புது வெள்ளத்தில் வாழ்க்கைப் படகை விசையாகச் செலுத்தினயே! அந்த வெள்ளம் உன்னை என்னபாடுபடுத்தி எந்தக் கரையில் ஒதுக்கிவிட்டது பார்த்தாயா?'' என்று இடித்துஇடித்துக் காட்டி என் ஆத்திரத்தைத் தீர்த்துக்கொள்வேன்.

கண்மணீ! உன் மனமறிய அவனையே நீ தெய்வமாக நம்பி மானஸீக விவாகத்தைச்செய்துகொண்ட உத்தமியாகையால் உன்னை பகவான் தனது சட்டபுத்தகத்தில் சரியானபடிதான் குறித்து வைத்திருப்பான். ஆகையால் நீ உடனே அங்குசென்று அவனை இங்கு அழைத்து வந்து சரியானபடி வைத்தியம் செய்தால் எனக்கு நன்ருகப் பேச வந்ததுபோல் வாயாவது வரட்டும். தடி ஊன்றியாவது நடக்கவரட்டும். தான் அலக்ஷியம் செய்துப் புறக்கணித்த மனுஷியாலேயே அவனுக்கு நன்மை உண்டாகட்டும். நீ யோசனை செய்யாது முதலில் கிளம்பு'' என்று கண்ணீர் பெருகக் கூறி பாரதியை அணைத்துக் கொண்டாள்.

காலைக்கதிரவன் ப்ரகாசமாய் ஏழைகளையும் பணக்காரர் களையும் பாவிகளையும் புனிதாத்மாக்களையும் சமமாகப் பார்க்கும் சமதர்சினியாய்க் கிளம்பிவிட்டான். க்ராமத்து ஜனங்கள் தம்தம் வேலைகளை நோக்கி வயலுக்குச் செல் கிருர்கள். சிறிய மாட்டு வண்டியில் பாரதியும் பாட்டியும் சேகரன் வஸிக்கும் சிறிய வீட்டில் வந்து இறங்கினர்கள்.

மிகவும் பழமையான கூரைவீட்டு நடையிலே ஒரு கயிற்றுக்கட்டிலில் ஒருவிகாரஸ்வரூபம் பார்க்கச்சகியாதவிதம் உருமாறிய நிலைமையில் படுத்திருக்கிறது. ஐயோ! பல்லைத் தேய்க்க ஜலம்...ஜலம்...பசி உசிர்போகிறதே, முருகா...

பிச்சூ!'' என்று வாய்க் குழறியபடியே சேகரன் கத்தும் குரல் ஒலிமட்டும் பழையசாயலுடன் கேட்டது. தன் மாமியிடம் பேசிப்பேசி பாரதிக்கு இந்த அரைகுறைவார்த்தைகள் புரிந்துவிட்டன.

சேகரனின் கண்ராவிப் படுக்கையையும், அவன் பல் தேய்க்க ஜலம் கேட்டுப் பசியுடன் தவித்துப் புலம்புவதையும் கண்ட பாரதியின் இதயத்தில் செம்மட்டியாலடிப்பது போன்ற அதிர்ச்சியும் தாங்கமுடியாத துக்கமும் வந்துவிட்டது. இவன் கத்துவதைக்கேட்ட வேலைக்காரன் ''தே! ஏன் சும்மா கத்துறே? மணி இன்னும் 8 அடிக்கலே. இதுக்குள்ளே கத்றத்தே பாரு''...என்று முரட்டுத்தனமாக சொன்னதைக் கேட்டு பாரதியை அப்படியே தீயில் தூக்கிப் போட்டதுபோலாகிவிட்டது. வெகுப்ரயாஸையுடன் அழுகையைப்பொறுத்துக்கொண்டு...சற்று அருகில் வந்து ''சேகர்!'' என்று கம்மிய குரலில் கூப்பிட்டாள்...

படுக்கையுடன் ஒட்டியவன்போல் படுத்துள்ள சேகர், அம்ருதமயமான இனிய குரலில் தன்பெயரைச் சொல்லிக் கூப்பிடுவதைக் கேட்டுத் திடுக்கிட்டு 'யாரு?...எனக்குப்புரியவில்லையே! இப்படி வாருங்களேன். என்பெயரை இத்தனை அருமையாகக்கூப்பிடுகிறவர்கள்கூட இருக்கிறார்களா?''..என்று அந்த ஆனந்த ஆவேசத்தில் பின்னும் உளறிக்கொட்டினான்.

எத்தனை தடைசெய்தும் கட்டுக்கடங்காது ப்ரவாகம் போல் பெருகும் கண்ணீர் அருவியைத்துடைத்துக் கொண்டு பாரதி அருகில் வந்து ''சேகர்! அபாக்யப்பிண்டமான, கோரஸ்வரூபியான பாரதி வந்திருக்கிறேன். உன்னுடன் ஆதியில் விளையாடிய உன் சகோதரி இதோபாரு...

என்று முடிப்பதற்குள்...''ஹா!...ஹா!...பாரதியா!... பாரதியா!...ஐயோ! பாரதீ! உனக்கு நான் செய்த த்ரோகத்தின் பலனை அனுபவித்துவிட்டேன். ஐயோ! பாரதீ! பாரதீ!....என்னை மன்னிப்பாயா...... என்னை மன்னிப்பாயா?''...என்று குளறிக்குளறிப்பேசமாட்டாது பெரிதாகப் புலம்பிக்கதறிவிட்டான்.

இந்தக் கூச்சலைக் கேட்டு உள்ளிருந்த ஆள்—எதையோ சமர்த்தியாகத்தின்றுகொண்டிருந்தவன் –அப்படியே ஓடி வந்தான். கிழவி இந்த பரிதாபத்தைக்கண்டு தாங்காது கண்ணீர்விட்டுத் தேற்றினாள். பெருந்தன்மையாக 'உன் சகோதரி'' என்று சொல்லிய மரியாதையைக் கிழவியின் உள்ளம் அபாரமாகப் போற்றியது.

உடனே பாரதி தானே ஜலங்கொண்டு கொடுத்துப் பல் தேய்க்கச்செய்துத் தானே ஆகாரத்தைக் கொடுத்துத் தேற்றினாள். பிரிந்தவர் கூடினால் பேசவும் கூடுமோ! என்கிறபடி இவர்களுடைய நிலைமையும் ஆகியது. ''சேகர்! வீணாக உடம்பை அலட்டிக்கொள்ளாதே! விதியை வெல்ல யாராலும்

முடியாது என்பதை நான் மறக்கவில்லை. உன் விஷயத்தைக் கேள்விப்பட்டதுமுதல் என்னுள்ளம் துடிக்கிறது; உன்னை அழைத்துப்போகவே வந்தேன். அண்ணு! இந்த தங்கையின் ஆவலை இனியாவது பூர்த்திசெய்'' என்று வேண்டினுள்

அங்குள்ள அத்தனை பேரும் பாரதி உண்மையாகவே சகோதரி என்று நம்பியதோடு அவன் மனைவி செய்து வரும் கொடுமைகளை வயிறெரிந்துக் கூறினுர்கள். அன்றே சேகரனுடன் பாரதி கிளம்பிவிட்டாள். தான் எடுத்த ஜன்மத்தின் சார்த்தகம் இப்போதுதான் பூர்த்தியாகியதாக அவளுக்கு ஒருத்ருப்தியும் ஆனந்தமும் உண்டாகிச் சாந்தியளித்தது.

''என்னைக்கூப்பிட்டாயாமே, எதற்கம்மா!'' என்றுகேட்டுக் கொண்டே வந்த குமுதாப்பாட்டி அங்கு கட்டிலில் எலும்புக் கூடாகப் படுத்துள்ள சேகரனைப் பார்த்ததும் சற்று நிதானித்து உற்றுநோக்கி...''ஹா...சந்துருவா! என்னப்பனே! நீயா இப்படி படுத்திருக்கிருய்''...எனுன் அங்கலாய்ப்புடன் கண்ணீர் பெருகக் கேட்டாள்?

இதற்குள் பாரதியின் மாமி சகல வ்ருத்தாந்தங்களையும் கூறிப்பின் ''பாட்டி! கடவுளின் செயலையாராலும் மாற்றவே முடியாது. உங்கள் மருமகனுக்கு நீங்களே அருகிலிருந்து கவனித்துச் செய்யுங்கள். அதற்காகத்தான் கூப்பிட்டோம்.'' என்று முடிப்பதற்குள்...குமுதம்மாள் பதைப்புடன்

''அந்த பாரதியாடியம்மா நீ!......என்ன ஆச்சரியம்! என்னப்பனே சேகரா! நான் ஆதியிலேயே சொல்லவில்லையா! அழகையும்தளுக்கையும் பார்க்காதேடா! பாரதி தங்கமான குழந்தையடா! கைவிடாதேன்னுசொன்னதைக்கேட்டையா... உம்...விதி செய்யும் கூத்து''...என்று முடிவுவைத்தாள்.

''அத்தை! நான் செய்த சதிக்கு நான் அனுபவித்து விட்டேன்...இனிப்பேசி என்ன லாபம்...சகலமும் தெய்வச் செயல்'' என்ருன்.

9

மங்காத இன்பத்தின் மங்கள தீபம்

கானகலா வித்யாலயம் பாரதியின் ஜீவனத்திற்கு மார்க்க தரிசியாக உதவியது. அவளுடைய அண்ணனுக்குச் சரியான படி வைத்தியம்செய்யத் துடங்கினுள்.

அடுத்தவாரம் வந்த பத்ரிகையில் ஒரு பெரிய தலையங்கத்தைப் பார்த்த பாரதி திடுக்கிட்டாள். அதை சேகரன் பாராதவாறு தனித்த இடத்தில் போய் படித்தாள்.

மிஸஸ். M. C. சேகரனின் தற்கொலை.

......நாகரீகத்தின் நாசவிளைவு. 25 ஆயிரம் ரூபாயுடன் மறைந்த சாமியார் அகப்படவில்லை. போலிஸார் தேடி வருகிருர்கள். கூடவிருந்த மைனர்களும் கம்பி நீட்டிவிட்

டார்கள். மிஸஸ் சேகரன் கடன் கடலில் மூழ்கியவிபத்தில் மாட்டிக்கொண்டதையறிந்ததும் உடனே விஷத்தைத் தின்று மாண்டுவிட்டார். மிஸஸ் சேகரன் வீட்டைப் போலீஸார் ஸீல் வைத்துவிட்டார்கள். ப்ரேதவிசாரணை நடக்கிறது. சொந்தக்காரர்களோ, சினேகிதர்களோ யாரும் வரவில்லை. யாராவது வந்து நமோதாக சுதர் மாவை அழைத்துச் செல்லும்வரையில் அவள் போலீஸ் பந்தோபஸ்திலிருக்கிறுள்......

என்கிறதைப் படித்து உள்ளம் உடைந்துத் தவிக்கும் பாரதி உடனே ஓடித் தன்மாணவி சுதர்மாவை என்றும் தான் காப்பாற்றுவதாகச் சொல்லியழைத்து வந்து, சேகரனின் முன்பு நிறுத்தினுள். தன் மகளைக் கண்டதும் எங்குமில்லாத ஆத்திரம் விபரீதமாக வந்துவிட்டது. ஏதேதோ திட்டவா யெடுப்பதற்குள், பாரதி, "அண்ணு! குழந்தையைத் திட்டாதே. அவள் தாயற்றப்பரதேசியாகிவிட்டாள். (நடந்ததைச் சுருக்கமாகக் கூறி) நான் மனந்தாங்காது அழைத்து வந்தேன். உங்கள் பிள்ளைக் குழந்தைகளையும் அழைத்து வர ஏற்பாடு செய்துவிட்டேன். சாக்ஷாத் கலைவாணியின் அருள்ப்ரஸாதமாகிய "கானகலா" வித்யாலயம் நம்மைக் காப்பாற்றும்: கைவிடாது, பயப்படாதே. வீணுநாதமே நமக்கு ஜீவநாடி! இசை விருந்தே நமக்குப் பேரின்ப உணவு.

என்று முடிப்பதற்குள் இந்த நற்செய்தியைக் கேட்டு மனம் பூரித்த சேகரன் மகளைத் தழுவிக்கொண்டு கண்ணீர் உதிர்த்தான். அப்போதுதான் பிதாவை அறிந்து சிறுமி கட்டிக் கதறினுள். மாமியும் பாரதியும் அன்ருெருநாள் சுதர்மா பேசியதைக் குத்திக் காட்டிப் புத்திசொன்னுர்கள்.

சரியானபடி வைத்தியம் செய்ததில் மேலும் ஆறுமாதத்திற்குள் நன்ருகப்பேசவும், தடி ஊன்றிநடக்கவும்வந்த சேகரனுக்கு பெரும்புதையல் கிடைத்தது போன்ற அபாரமான சந்தோஷம் உண்டாகியது.

ஒருவகையில் சிதறவடித்த அன்பர்களை மறுபடியும் சேர்த்துவைத்து ஆனந்தமழையைப் பொழிந்து கடாக்ஷித்து விட்டபிறகு இதைவிட நித்யகல்யாண மங்கள வைபவ சுகம் வேறுஎன்னவேண்டும்? கானகலா வித்யாலயம் ப்ரமாதமாகப் பெருகி ஒரு விளக்கைக்கொண்டு ஓராயிரம் விளக்கேற்றுவதுபோல் ஒரு கானகலா மந்திரத்திலிருந்து பல மாணவிகள் உபாத்தியாயினிகளாய் பல ஊர்களில் ப்ரகாசிக்கிறுர்கள். இந்தப் பேரானந்த நற்செய்தியே பாரதியின் வாழ்க்கைச் சக்கரத்தைப் பேரின்பப்பாதையில் உல்லாசமாகச் செலுத்திக்கொண்டு போகிறது; அதையே அவள் உள்ளம் அம்ருதபானம் செய்வதுபோல் பொங்கிப் பூரித்து மகிழ்கிறது. சுபம். மங்களம்.

வீராங்கனை

வை.மு.கோ. 88-வது *நாவல்*

17

உத்தம பதிவ்ரதையான விலாஸினிக்கு, தன் கணவனை இப்படி ஒரு பெண்பிள்ளையின் முன்பு மந்திரி அவமானம் செய்ததைத் தாங்காமல் அபாரமான ஆக்ரோஷம் உண்டாகிவிட்டது. எனினும் மந்திரியின் எதிரில் வருவதற்கு அச்சமுற்று மறைவிடத்தி லிருந்தபடியே தன் கணவனை நோக்கி "ஸ்வாமீ! மிகவும் கேவல மான தூசிக்குச் சமானமாயுள்ள இந்த வேலையை இப்போதே ராஜிநாமா செய்துவிட்டு வாருங்கள்! நமக்கு இந்த உத்யோகம்தான் சாச்வதம் என்று யாரும் நினைக்கவேண்டாம். பரந்த இத்தகைய பூவுலகை எல்லாம் தன் குட்சியில் வைத்துக்காக்கும் ஆண்ட வனின் துணை இருக்கையில் இந்த அல்ப உத்தியோகத்தினால் அவ மானப்படவேண்டாம். கிளம்புங்கள்" என்று ஒரு க்ஷத்ரிய வீராங்கனையின் ஆவேசத்துடன் கூறினாள்.

அடுத்த க்ஷணமே திவான் சகலவிருதுகளையும் களைந்து வைத்துவிட்டு ராஜீனாமாச்சீட்டையும் எழுதிவைத்துவிட்டு விலாஸினி யுடன் கிளம்பிவிட்டார்.

தம்பதிகள் போகும்போது மகாராணியைப் பார்த்து "தாயே! சத்யமாகிய பாலத்தின்மீது தங்களுடைய தருமச் செங்கோலின் ஆட்சிரதம் செல்லட்டும். உங்கள் உள்ளம் உத்தம நியாய தேவாலயமாய்த் திகழட்டும். உங்கள் ப்ரஜைகளுக்கு நீங்கள் தேவியாய், தாயாய் விளங்கட்டும். உங்கள் ஆட்சிப்பயிரைச் செழிக்க நியாய மழை பொழியட்டும். நாங்கள் வருகிறோம்... ஆண்டவனே! நியாயத்திற்கு உன் கருணை துணைபுரியட்டும். எங்கள் மகாராணியைக் காப்பாற்று. கஜேந்திரபுரியின் வீரத்வஜம் என்றென்றும் ப்ரகா சித்துப் பறக்கட்டும். தருமமே ஜயம்தரும் நிச்சயம்" என்று கூறி விட்டுத் தடதடவென்று நடந்தார்கள்.

ஒன்றுமே புரியாத வீரலட்சுமி "திவான் சாகேப்!... திவான் சாகேப்!..." என்று கண்ணீர் வழியக் கத்தியவாறு அவர் பின்னே ஓடுவதற்கு ப்ரயத்தனம் செய்தாள். வள்ளி அவளை விடாது இறுகப் பிடித்துக்கொண்டு "பேசாமலிரும்மா.... கண்ணு! உலகம் உனக் குத்தெரியாது... வீணாக அழாதே"... என்று சமாதானம் செய்கிறதை வீரலட்சுமி காதில் வாங்கவே இல்லை. அவளுடைய கதறல்தான் அந்தக் கட்டிடம் பூராவும் எதிரொலி செய்தது.

கஜேந்திரபுரியின் மூலை முடுக்களிலும்கூட இதே பேச்சுதான். "என்ன ஆச்சரியம் திவான் சாஹேபும் அவர் மனைவியும் இந்த பதவியையும் பணத்தையும் த்ருணமாக மதித்து உதறித்தள்ளி

விட்டுப்போய்விட்டார்களாமே. இப்படிப்பட்ட உத்தமர்கள் இக் காலத்தில் கிடைப்பார்களா? இத்தகைய சத்யசீலரையா மந்திரியும் மகாராணியின் தாயும் தள்ளிவிட்டார்கள்? மற்ற தேசங்களில் திவானுக்கு அடங்கிய உத்யோகஸ்தர்களாய் மந்திரிமார்கள் நடத்தப்படுகிறார்கள். இந்த கஜேந்திரபுரியின் சட்டமே ஒரு தனித்த தாய் மந்திரிக்கு திவான் அடங்கிய முறையில் நடக்கும்படி விதித் திருக்கிறார்கள். அதற்குக்காரணம் ராஜவம்சத்தினர்களே மந்திரி யாய் வருவதால் இருக்குமோ என்னவோ?...என்று ஒருவருக் கொருவர் பேசிப்பேசி வியப்புக்கடலாடினார்கள்.

இதன் உண்மைமட்டும் ஒருவருக்கும் புரியவில்லை. தம்தம் மனம்போனபடி எல்லாம் காரணத்தைப் பேசிக்கொண்டார்கள். சிலர்"மகாராணியின்பிதாவே திவானாகவந்துவிடலாம்"என்றார்கள். சிலர் "மந்திரியின் இஷ்டப்படியே நடத்தலாம்" என்றார்கள். "பாவம்! சிறிய குழந்தையாகிய ராணிக்கு என்னதெரியும்? எப் படிச் சொன்னால் அப்படிக் கேட்கும் சிறுமிதானே" என்றார்கள் சிலர். இம்மாதிரி புகார் வார்த்தைகள் ஓய்வதற்குள்ளேயே மந்திரி ப்ரபாகரனின் மைத்துனனாகிய பாஸ்கரனே திவானாக நிய மிக்கப்பட்டுவிட்டார் என்கிற ப்ரகடனத்தைக் கேட்டு அரசாங் கத்திலுள்ள சில பழைய அதிகாரிகள், உத்யோகஸ்தர்கள் முதல் குடிஜனங்கள் வரையில் ஆச்சரியப்பட்டார்கள்.

பாஸ்கரன் வெறும் சாதாரண மனிதனேயன்றி அதிகப் படிப்பாளியுமில்லை. அதிக புத்திசாலித்தனமும் அனுபவமும் வாய்ந்த மேதாவியுமில்லை. இத்தகைய மனிதனையா அரசாங்கப் பொறுப்புகள் சகலத்தையும் கவனிக்கும் திவானாகப் போடுவது! இதென்ன அநியாயம்! இதென்ன அஸம்பாவிதமான செய்கை! இதைவிட மகாராணியின் பிதாவையே நியமித்திருந்தாலும் ஒரு சிறிது ஒப்புக்கொள்ளலாமே. சின்னஞ்சிறு குழந்தையாகிய மகாராணிக்கு இந்த விபரீத மாறுதல்களின் போக்கு எப்படித்தெரி யப்போகிறது? பெற்றதாயுமா இத்தகைய வேலைகளை மனந் துணிந்து செய்கிறாள்!" என்று தம்தம் மனம்போனவாறு பேச வாரம்பித்தார்கள்.

பொதுமக்களின் கவனத்தையும் அரசாங்க உத்யோகஸ்தர் களின் உள்ளங்களையும் எல்லாவற்றையும்விட உலுப்பச் செய்தது திவானின் த்யாகமும் தீரச் செயல்களுமேயாகும். தாம் போட்ட திட்டத்தை, மகாராணியின் ஆவலைப் பூர்த்திசெய்ய முன்வந்த லக்ஷ்யத்தை அரசாங்கம் அடியோடு நிராகரித்து அத்திட்டத்தையே மாற்றிவிட்ட அதிர்ச்சி திவானின் மனத்தைத் தாக்கியது. திவா னுக்குச் சகலவிதத்திலும் சந்தோஷமும செல்வாக்கும் இருந்தும் குழந்தையில்லாத ஒரு குறையைமட்டும் பகவான் தீர்க்காது வருத் தத்திற்குள்ளாக்கிவிட்டார்.

மகாராணியின் முகத்தைக் கண்டதும் திவான் உள்ளுக்குள் பூரித்து தன் பாக்யமென்று அகமகிழ்ந்திருந்தார். எதிர்பாராத

பூகம்பத்தின் அதிர்ச்சியினால் சகல பிருதுக்களையும் உதறித்தள்ளிவிட்டுச் சென்றவர் சில தினங்கள்வரையில் அதிர்ச்சியினால் தாக்கப்பட்டு எழுந்திருக்கவே இல்லை.

திவான், சொந்த ஊராகிய விஜயபுரிக்குப்போய்விட்டார். அவருக்குத் தான் ஏற்படுத்திய லக்ஷ்யம் ஈடேறாதுபோய்விடுமோ! என்கிற துக்கம் மனத்தை வாட்டிக்கொண்டிருந்தது. அதைப் பின்னும் கிளறிவிடுவதுபோல் கஜேந்திரபுரியின் ப்ரகடனத்தின் வாசகங்களைப் பத்ரிகையில் படித்ததும் அவருக்குண்டாகிய விசனத்திற்கு எல்லையே இல்லை. அரசம்பட்டி க்ராமத்திற்காக ஏற்படுத்தியிருந்த திட்டத்தை அடியோடு நிறுத்திவிட்டதையறிந்ததும் மனம் கொதித்துச் சீறி எழுந்தார். தானே நேரில் அரசம்பட்டி க்ராமத்திற்குச் சென்று தன்னுடைய சொந்த செலவில் தான்போட்ட சகலமான திட்டங்களையும் தானே செய்துமுடிப்பதாக வாக்குறுதியளித்து அந்த ஊர் ஜனங்களால் மகாராணிக்கு எத்தகைய த்வேஷமும் விரோதமும் நேராதிருக்கவேண்டுமே என்கிற பயமே திவானை முதலில் பாதித்தது. மகாராணி பிறந்த க்ராமத்து ஜனங்கள் ஏற்கெனவே வள்ளியம்மாளின் செய்கையினால் அளவற்ற கோபமடைந்து கலகத்தை விளைவிக்க இருந்ததை எதிர் வீட்டுக் கிழவியினால் சமரஸப்படுத்திப் பிறகு உத்ஸாகமூட்டப்பட்டதும் திவான் மறக்கவில்லை. எதிரிகளுடன் அவர்கள் போய்ச் சேர்ந்துவிட்டால் கட்டாயம் கஜேந்திரபுரியின் த்வஜம் ஆடி விழுந்து சிதறி அடிமைத் தலையில் புதைந்துபோய்விடும் என்பது அவருக்கு மிகவும் நன்றாகத் தெரியுமாதலால், தான் அந்த அரசாங்கத்தில் வைத்திருந்த பக்திக்கும் மரியாதைக்கும் பங்கம் உண்டாகாமல் ராஜ விச்வாஸத்தைக் காட்டவும் மகாராணி இடத்தில் தான் வைத்துள்ள அன்பின் ஆழத்தைக் காட்டவும் திவான் இத்தகைய சிறந்த ஸேவையைப் புரியத்துணிந்தாரேயன்றி தான் ஒரு தனித்த ப்ரக்யாதியை அடைவதற்காக அல்ல என்பது அவருள்ளந்தான் அறியும். சதா சர்வகாலமும் மகாராணியின்மீதே நினைவாய் அவளுக்கு எத்தகைய விபத்தும் நேராமல் காக்கும்படி கடவுளை ப்ரார்த்தனை செய்துகொண்டே இருக்கிறார். அதேபோல் அவருடைய தர்மபத்தினி விலாஸினி தேவியும் பகவானை வேண்டினாள்.

திவானை விரட்டியபிறகு அரண்மனைக்கு அழைத்துச்செல்லப்பட்ட வீரலக்ஷ்மியோ இன்னதென்றுபுரியாத மனோவேதனையுடன் ஒரே ப்ரமைபிடித்தவள்போல் படுத்துவிட்டாள். எனினும் இவ்வளவு நல்லவரான திவானை ஏன் இப்படி விரட்டினார்கள்? அவர் மிகவும் அன்பாகநடந்தவராயிற்றே; அவர்மீது என்ன குறை இருக்கும்? ஒரு குற்றமும் செய்யவில்லையே. ஏன் இந்த மந்திரியும் அம்மாவும் அவரைக்கடிந்துகொண்டு அவமானப்படுத்தித்துரத்தினார்கள்? ...என்கிற ஒரு பெரியகேள்வி அவள் இதயத்தில் பெரும்போர் நடத்தியது; சரியானபடி சாப்பிடாமலும் தூங்காமலும் ஏக்கம் பிடித்துள்ளதைக்கண்ட வள்ளியம்மாள் எத்தனைவிதத்தில் சமா

தானம் செய்தும் வீரலக்ஷ்மியின் மனத்தைச் சமாதானப்படுத்த முடியவில்லை.

மந்திரியும் வள்ளியம்மாளும் யோசனைசெய்து ஒரு முடிவுக்கு வந்தார்கள். ராஜ தந்திரமென்றால் சாமான்யமானதா? வீரலக்ஷ்மி தூங்குவதுபோல் படுத்திருக்கையில் இருவரும் வெகுமுக்யமான விஷயத்தை ரகஸியமாய்ப்பேசுவதுபோல்பாவனைகாட்டி "அம்மணீ! ஏன் கவலையாயிருக்கிறீர்கள்?" என்று மந்திரி ஆரம்பித்தார்.

வள்ளி:—கவலைக்குக்காரணம் தங்களுக்குத்தெரியாதா? அந்தப் பாவி திவானால் நமது சாம்ராஜ்யத்தின் கண்ணியத்திற்கே பங்கம் வந்துவிட்டதோடு கஜானாவே காலியாகிவிட்டதாகக் கேள்விப் பட்டதுமுதல் என்னுயிர் என்வசமில்லை. ஒரு அரசாங்கத்திற்கு க்ஷாமம் வந்துவிட்டால் எப்படித்தலைக் கட்டுவது? குழந்தையின் மனத்தை மாற்றி அதன் உள்ளத்தையே கெடுத்த பாவி அவன் தொலைந்தும் குழந்தையின் மனம் இன்னும் தெளியவில்லையே! அரசாங்கத்தின் நடவடிக்கைகளைப்பற்றி அதென்ன அறியும் பாவம்!

மந்திரி:—தாயே; வருந்தவேண்டாம். கஜானாவில் பணம் காலியானது உண்மைதான். நான் எனது ஆஸ்திபூராவையும் கஜானாவில் சேர்த்து என்னுடைய மகாராணியின் அன்பும் கீர்த்தியும் குலையாதபடிச் செய்துவிட்டேன்! இனி பயமேஇல்லை. அந்தப் பாவி திவானை நாம் துரத்திவிட்டதற்காகக் கோபங்கொண்டு எதிரிகளுடன் சேர்ந்து நம்மீது படையெடுக்கப்போவதாக ஒரு செய்தி கேள்விப் படுகிறேன். கோபம் பாபம் சண்டாளமல்லவா?...

என்று பேசுவதைக் கேட்டுக்கொண்டே தூங்குவதுபோல் படுத்திருந்த வீரலக்ஷ்மி திடுக்கிட்டுத் துடித்தெழுந்து... "என்ன! திவான் சாஹேப் எதிரிகளிடம் சேர்ந்து நம்மீது படைஎடுப்பதாக இருக்கிறாரா? இது நிஜமான வதந்தியா?...இது உண்மையாக இருக்குமா? வீண் அபவாதம். வீணான பொய்ப்ரசாரம். திவான் ஒருபோதும் அப்படிச் செய்யவேமாட்டார். அது ஒருகால் உண்மையாக இருப்பின் நான் உடனே சண்டைக்குக்கிளம்பிப் பழிக்குப் பழிதீர்த்து வெற்றியடைவேன்"...என்று கர்ஜித்தாள்.

இதையே ஒரு ஆதாரமாகக்கொண்ட வள்ளியம்மாள் மகளைப் பலவிதத்திலும் சமாதானம்செய்து அவள் மனத்தை திவானிடமிருந்து பிரிக்கும் திருப்பணியிலீடுபட்டாள். மந்திரியும் இப்படியே தாளம்போடவாரம்பித்தார். சதா குற்றங்களையே உருவாக்கிப் பேசிவந்தால் எத்தகைய மனமும் மாறுவது இயற்கையல்லவா? அதிலும் இளந்தளிர்போன்ற சின்னஞ்சிறு உள்ளத்தில் களங்கத்தையும் குழப்பத்தையும் சதா உண்டாக்கிக்கொண்டிருந்தால் ஒரு சிறிதுமாறாமல் உறுதியுடன் எப்படி இருக்கமுடியும்? எனினும் திவானிடம் வைத்த நம்பிக்கைமட்டும் அப்படி இலேசில் மறையவில்லை. அத்தனை நல்லவரா என்னை த்வேஷிப்பார்? அவரா இப்படிச்செய்வார்?...என்கிற எண்ணங்களாகிய அலைமட்டும் சதா மோதிமோதிக் கரைகாணாது உடைந்துகொண்டே இருந்தது.

சில மாதங்களாகிவிட்டன. தான் பிறந்த க்ராம புனருத்தாரண திட்டத்தைப்பற்றி எத்தனை கேட்டும் மந்திரியோ, வள்ளியம்மாளோ சரியானபடித் தகவலே கொடுக்காது ஏதேதோமழுப்பியதோடு நில்லாமல் அதற்காக திட்டம்போட்ட பணத்தைஎல்லாம் திவான் தானே கையாண்டுவிட்டதாயும் மகாராணியின் அன்புக்காக அவரை சிறைப்படுத்தாது விட்டுவிட்டதாயும் திவான்மீதே பெரும்பழியை வேறு சுமத்தி அந்தக்ராமத்து விஷயத்தையே மறைத்துவிட்டார்கள்.

நாள் ஏறஏற வீரலக்ஷ்மியின் சரீரம் வளருவதைவிட அவளுடைய பரந்த ஞானமும் சிறந்த சீலமும் அறிவும் ப்ரம்மாண்டமாக வளர்ந்துவந்தன. அரண்மனை வாழ்க்கையை அரசாங்கத்து தடபுடலை அவள் சிறைவாஸத்திற்கு ஒப்பாகவே எண்ணினாள். சுதந்திரத்துடன் உலாவக்கூட ஆசையற்ற நிலைமை ஒரு உயர்ந்த நிலைமையா?...இதுவா மகாராணியின் விதி!...என்றுகூட அவள் உள்ளம் எண்ணி ஏங்கியது.

மாதங்கள் பல பல உருண்டோடி வருஷங்களையும் உருட்டித் தள்ளின. திவானின் செய்கையோ! அரசம்பட்டிக்ராமத்து விஷயமோ, தன் ராஜ்யத்து விவகாரமோ! புதிய திவானின் ஆட்சியோ எதுவுமே அவளுக்கு விளங்காதபடி பொன்கூட்டில் அடைக்கப்பட்ட கிளியைப்போல் ப்ரம்மாண்டமான அகழிகள் சூழ்ந்த அத்புதக்கோட்டைக்குள் சுதந்திரக் கைதி போலவே அடைத்துவைத்துவிட்டார்கள்.

அரண்மனைக்குள்ளேயிருக்கும் கோயிலுக்குச் செல்வதற்குக் கூட அவளுக்கு அதிகாரம் இல்லை என்றதையறிந்து அவள் உள்ளம் பின்னும்உருகியது. பழையதிவான் இப்படி தன்னைமறந்து விட்டாரே! அவர் என்னவானாரோ? எங்கிருக்கிறாரோ?...என்கிற நினைவுமட்டும் சதா பாதித்துக்கொண்டே இருந்தது. தான் பிறந்த க்ராமத்தை நகரமாக்கும் விஷயத்தில் என்ன நடந்தது, எத்தனை தூரம் வேலையாகியது, அவர்கள் ஏன் ஒருவராவது இங்கு வரவில்லை, ஒருவேளை அம்மாவின் சூழ்ச்சி ஏதாவதிருக்குமோ? ...என்று பலவிதமாக எண்ணி ஏங்கவாரம்பித்தாள்.

இது விஷயமாக தன் தாயாரை எத்தனை கேட்டும் சரியான விடை வரவில்லை. தானாக அரசம்பட்டிக்குக் கடிதம் எழுதிப் பார்த்தாள். அதையனுப்பாமல் அப்படியே மறைத்து கசக்கி விடும் மர்மமறியாத வீரலக்ஷ்மி ஏன் பதில் வரவில்லையோ தெரியவில்லையே? என்று குழம்பித்தவித்தாளேயன்றி விவரம் புரியவில்லை. இதேவிசாரத்தில் நாளடைவில்ஏக்கமேகுடிபுகுந்தது. தானோ சிறுமி. சுதந்திரமற்ற பேதை. இந்நிலைமையில் அவள் வேறு என்ன செய்ய முடியும் பாவம்! இந்த மகாராணி என்கிற பந்தம் நிறைந்த பதவியையே அவள் உள்ளம் வெறுத்தது.

18

எந்த ஒரு விஷயமும் அதற்குச் சம்மந்தப்பட்டவர்களைவிட சம்மந்தப்படாதவர்களுக்கே அதிகம்பாதித்து சதா அதைப்பற்றியே பேசிப் பொழுதையோட்டுவது சிலருடைய வழக்கம். வள்ளியம்மாளின் தர்பார்த்தனத்தைக்கண்டு பொதுமக்கள் விமர்சனம் செய்வதோடு நிறுத்தாமல் அவள் கணவனைப்பற்றியும் பேசவாரம்பித்தார்கள். அந்த மனிதன் இந்த அரண்மனையிலிருக்கிறாரா, இல்லையா! என்பது கூடத் தெரியவில்லையே. அவர் என்ன செய்கிறார்!" என்கிற பரிகாஸம் சொல்லும் வள்ளியைப்பற்றிய வம்புச் சொல்லும் உள்ளே கைதிபோல் அடைபட்டுக்கிடக்கும் வீரலக்ஷ்மிக்கு எப்படித் தெரியப்போகிறது?

ஆனால், இந்த அரசபதவி வந்தவுடனே அடியோடு புதிய ஜென்மம் எடுத்துவிட்டதாக வள்ளி முற்றிலும் மாறிவிட்டதுபோல் வேலன் சற்றும் மாறவில்லை. வள்ளியின் செய்கை சற்றும் பிடிக்காது. கண்டித்துப்பார்த்தும் பயனில்லாதுபோய்விட்டதால் தான் என்ன செய்வது என்கிற கவலையும் ஏக்கமும்உண்டாயிற்று.

அடிக்கடி வீரலக்ஷ்மியைப் பார்ப்பதற்கும் வேலனுக்கு உத்திரவும் உரிமையும் இல்லாதுபோன விபரீதமும் வீரலக்ஷ்மிக்குத் தெரியாது. எனினும் தன் பிதாவின் மனது சரியாயில்லை என்பதை மட்டும் எப்படியோ கண்டுகொண்டாள். இதைப் பற்றித் தன் தாயாரையே கேட்பது என்று முடிவுகட்டினாள்.

வழக்கம்போல் வள்ளியம்மாள் அன்று வரும்போது ப்ரமாதமாகச் சிரித்து மகிழ்ந்தவாறு வந்ததைக் கண்டு வீரலக்ஷ்மிப்ரமிக்கவில்லை, பாராட்டி வரவேற்கவும் இல்லை. வள்ளியம்மாள் மிகுந்த உத்ஸாகத்துடன் "கண்மணீ! இன்னும் 15 தினங்களில் உன் பிறந்தினக் கொண்டாட்டம் வரப்போகிறது. அதை இம்முறை மிகச்சிறந்தவகையில் ப்ரமாதமாய்க் கொண்டாடுவதற்காக நம் மந்திரி ப்ரபாகரும் திவான் பாஸ்கரும் பெரியதிட்டம் வகுத்திருக்கிறார்கள். அன்று ப்ரம்மாண்டமான ஊர்வலம் நடக்கப்போகிறதாம். உன் நாட்டின் ப்ரஜைகள் அபாரமான சந்தோஷத்துடன் கொண்டாடத் தயாராகக் காத்திருக்கிறார்களாம். இதைக்கேட்க என் சந்தோஷம் எல்லைகடந்து பொங்குகிறது. அதைத் தெரிவிக்கவே இங்கு வந்தேன்... கடவுள் கிருபையில் பிறந்தநாள் வைபவம் முடிந்ததும் உனக்கு விவாக மஹோத்ஸவத்தையும் செய்துவிடுவதென்று அரசாங்கம் தீர்மானித்துவிட்டது. அதுவே எனக்குப் பரமத்ருப்தி...என்று முடிப்பதற்குள், வீரலக்ஷ்மி தன்பெயருக்குத் தகுந்தவாறு ஒரு வீரமுடுக்குடன் விரைத்து எழுந்துநின்று "என்ன சொன்னாய்? விவாகமா! எனக்கா! இப்போதா! போதும் நிறுத்து. இதுகூட வெறும் விளையாட்டல்ல, என் விவாகத்தைப் பற்றி யாரும் யோசிக்கவேண்டியதில்லை. இன்னொருதரம் அந்த பேச்சை என் முன் எடுக்கவேண்டாம். அனாவச்யமான ஆடம்பரம் எதையும் நான் விரும்பவில்லை, பிறந்தநாள் கொண்டாட்டமும் வேண்டாம்,

எதுவும் வேண்டாம். என்னிஷ்டத்தைக் கேளாமல் எத்தகைய காரியத்தையும் செய்யவேண்டாம்...

அம்மா! இன்னும்கூட நான் சின்னஞ்சிறு பாப்பாவல்ல. இதுவிஷயத்தில் என் அபிப்ராயத்தை மீறி எதுவும் யாரும் செய்ய வேண்டாம்" என்று படபடவென்று பேசுவதைக்கேட்டு முதலில் திடுக்கிட்ட வள்ளி சற்று சமாளித்துக்கொண்டு கண்ணு! 'ஏன் இப்

படி கோபிக்கிறாய்? உன்னை என்ன சாமான்ய மனிதனுக்குக் கொடுத்துவிடுவேன் என்று நினைத்துவிட்டாய்...உம்,..உன் க்ஷேமத்திலேயே தன்னுயிரை வைத்துள்ள நம்முடைய மந்திரி ப்ரபாகரரின் புதல்வர் முரளீ கண்ணனுக்கல்லவா உன்னைக்கொடுக்கத் தீர்மானித்திருக்கிறேன்....

"போதும்...நிறுத்துங்கள். இது வேறு சூழ்ச்சி நடக்கிறதா? உங்களுடைய புதிய ஆட்சிமுறைதர்பாரில் பழையதிவானை மாற்றிய ஒரு அழகே போதும்! அதைத்தவிர விவாகத்தைப்பற்றியும் பேச்சு நடத்த உங்கள் யாருக்கும் உரிமையில்லை என்பது நினைவிருக்கட்டும். இந்தப் பேச்சை இனி இதோடு நிறுத்துங்கள்....

அம்மா!....அப்பா எங்கேயோ ஊருக்குப் போயிருப்பதாகச் சொன்னீர்களே! இன்னுமா வரவில்லை? எத்தனையோ மாதங்களாகிவிட்டதே. எந்த ஊருக்குப் போயிருக்கிறார்? கடிதங்கள் வருகின்றதா? எனக்கு விவரம் இப்போது தெரியவேண்டும்." என்று கடுமையான குரலில் கேட்டாள்.

இம்மாதிரியொரு கேள்வியை வீரலக்ஷ்மி கேட்பாள் என்று வள்ளி நினைக்கவே இல்லை. திடீரென்று கேட்டதும் வள்ளி உண்மையில் திடுக்கிட்டு நடுங்கினாள். முகத்தில் அசட்டுக்களை ஒவ்வொருரேகையிலும் படர்ந்து விகாரத்தை ப்ரகாசமாக எடுத்துக் காட்டியது. சில வினாடிகள் பதில் சொல்லமாட்டாது தம்பித்துப்போய் பிறகு சமாளித்துக்கொண்டு "கண்மணீ! பதறாதே. உன் பிதா அடிக்கடி கடிதம் எழுதிக்கொண்டுதானிருக்கிறார். உன்னுடைய பிறந்ததின வைபத்திற்கு வந்துவிடுவார். அவர் தன் சொந்த க்ராமத்தில் சில மாதங்கள் இருக்க ஆசைப்பட்டார். அது இப்போது உயர்ந்த நகரமாகிவிட்டதால் அங்கிருப்பதற்காகப் போயிருக்கிறார். நீ எத்தகைய கவலையும்படவேண்டாம். நான் உன் க்ஷேமத்தைக் கோரித்தான் பாடுபடுவேன் என்பது நினைவு வைத்துக்கொள்" என்று ஏதோ சொல்லிக்கொண்டிருக்கையில் வீரலக்ஷ்மி குறுக்கே மறித்து "அம்மா! மன்னிக்கவேண்டும். என் க்ஷேமத்தை என்னைப் படைத்த பகவான் கோரிச்செய்தால் போதும். மனிதர்கள் எத்தகைய ச்ரமமும் எடுத்துக்கொள்ள வேண்டாம். அதோடு என் விவாக விஷயத்தைப்பற்றிக் கண்டிப்பாய் சுற்றிவளைத்துப் பேசவேண்டாம். உடனே அப்பாவை வரச்சொல்லிக் கடிதம் போடுங்கள். அவரை முதலில் நான் பார்க்க வேண்டும்" என்று ஒரு பெரிய சட்டம் போட்டுத் திட்டம் செய்வதுபோல் கூறிவிட்டுத் தடதடவென்று அவ்விடத்தைவிட்டு வெளியேபோய்விட்டாள்.

ஏற்கனவே வெகு தீவிரமாக வேலைசெய்யும் உள்ளத்திற்கு இப்போதுதான் பிதா விஷயத்தில் அவளையறியாத பெரும் குழப்பமும் அவளாலறியமுடியாதபடி ஒருவிதமான திகிலும்கூட உண்டாகிவிட்டதால், நேரே தன் பிதா இருக்கும் விடுதிக்குப்போகக் கிளம்பினாள். தகப்பனார் ஊரிலில்லை என்றதால் இதுவரையில் அங்கு

போகவில்லை. இரண்டுமூன்று பெரிய கட்டிடங்களைத்தாண்டி அங்கு போகும்வழியில் இருக்கும் காவல்காரன் ராணிக்குச் செய்ய வேண்டிய மரியாதையைச் செய்துவிட்டுப் பின் பணிவாக... "மகாராணீ! பெரியம்மாள் உத்திரவு இல்லாமல் யாரையும் இப் பக்கம் விடக்கூடாதென்று உத்திரவு...என்று முடிப்பதற்குள் மகாராணி வெகுகோபத்துடன் "என்ன! என்ன! ஒருவரையும் விடக்கூடாதென்று உத்திரவா? பெரியம்மாளின் உத்திரவா?... பேஷ்! எனக்கு எவருடைய உத்திரவும் அவச்யமில்லை. வழியை விடு" என்று அதிகாரத்துடன் கூறினாள்.

"தாயே! மன்னிக்கவேண்டும். தங்களுடைய பிதா ஒருதரம் தங்களைப் பார்க்கவேண்டும் என்று வந்தார். அப்போது காவலாயிருந்தவன், மகாராணியின் பிதா மகாராணியைத்தானே பார்க்கப் போகிறார்! என்கிற எண்ணத்துடன் விட்டுவிட்டானாம். இதற்குள் இங்குள்ள சிலரால் உடனே பெரியம்மாள் தெரிந்துகொண்டு ஓடி வந்து உங்கள் பிதாவைத் தடுத்து, உங்களுக்கு உடம்பு சரியில்லை பார்க்கக்கூடாதென்று டாக்டர் சொல்வதாகச் சொல்லி அனுப்பி விட்டதோடு, அந்தவேலையாளை உத்திரவை மீறியதற்காக தண்டித்துச் சிறையிலிட்டிருக்கிறார்களே! இதுதாங்களறியாததா? ஆகையால் நான் பெரியம்மாள் உத்திரவின்றி விடமுடியாது தாயே!" என்று தன்கடமையில் கண்ணாய் வெகு அழுத்தமாகக்கூறினான்.

இந்த விஷயம் எதுவுமே தெரியாத வீரலக்ஷ்மிக்கு எல்லாம் புதியதாகத் தோன்றியதுடன் அஸாத்யமான கோபத்தையும் உண்டாக்கியது. தன்னை எதற்காக தன் பிதா பார்க்கக்கூடாதென்று தடுத்தார்கள்? தனக்கு ஒரு உடம்பும் இல்லாதிருக்கையில் எதற்காக டாக்டர் பார்க்கக்கூடாதென்று சொல்லியதாகச் சொல்லியிருப்பார்கள்? என்கிற சந்தேகம் பலமாக உண்டாகிவிட்டதால் மறு பேச்சுபேசாமல் சடக்கென்று தன்னறைக்குத் திரும்பினாள். ஜன்னலால் வெளிப்ரதேசத்தை ஒருமுறை பார்த்தாள்.

வெகு தூரத்திற்கப்பால் பரந்தவயலும், வயலில் பந்தமற்று சுதந்தரச்சிறகடித்துப் பறக்கும் பறவைகள்போல் ஆணும் பெண்ணும் விவசாயவேலைகளைச் செய்வதும், தம்தம் மக்களை வைத்துக் குலாவிமகிழ்வதும், இயற்கையன்னையின் செல்வமடியில் உட்கார்ந்தும் படுத்தும் ஓடியும் ஆடியும் களித்துஇன்புறுவதும் பார்த்ததும் அவளுடைய பாலிய வயதில் காட்டில் மாடுமேய்த்ததும் தன் பிதாவுக்குக் கலயத்தில் சாப்பாடு கொண்டுபோனதும், பரந்த காட்டு வெளியில் தாவித் தாவி ஓடித் தன் சகாக்களுடன் விளையாடிப்பேரானந்தமடைந்ததும், கூத்துமுதலியன போட்டு சந்தோஷப்பட்டதும், தங்குத்தடையின்றிகாட்டாற்று வெள்ளம்போல்பொங்கிப்பெருகும் ஆனந்தத்துடன் இருந்ததும் பளிச்சென்று நினைவுக்கு வந்தன.

அப்படியே அசைவற்றுப் பதுமைபோல் நின்றுவிட்டாள். நினைவு பூராவும் அரசம்பட்டிக்ராமத்தையே தாவிச்சென்று லயித்

தது. உண்மையில் அரசம்பட்டிக்ராமம் இப்போது பூர்ணப் பொலிவுடன் ப்ரகாசிக்கும் சிறிய ஸௌந்தர்ய நகரமாகக் காட்சியளிக்குமல்லவா! அப்பா அங்கேயா போயிருப்பார்? அவராவது இந்த பந்தமுற்று கட்டுப்பட்டுள்ள வாழ்க்கையில் அகப்பட்டுத் தவிக்காமல் தாராளமாக உலாவட்டும். அந்த ஆனந்தக்காட்சியைக் கண்டுகளிக்கட்டும். அவருடைய இதயமாவது உண்மையான இன்பத்தை அடையட்டும். என் தாயார்தான் கொடுத்துவைக்காத ஜென்மமாக இருக்கிருள். அவராவது தான் பிறந்த புனித க்ராமத்தின் பெருமையை அறிந்து கண்டு அனுபவிக்கட்டும். என்னைப் போல் இத்தகைய பதவியை, சுகமற்ற வாழ்க்கையை அனுபவித்து பந்தத்தில் தவிக்கவேண்டாம்'' என்று வெகு தீவிரமாக எண்ணியவாறு அப்படியே நின்றுவிட்டாள். தான் ஆதியில் வள்ளிகல்யாணம் போட்டதும் அப்போது ஆனைவந்து தன்னைத் தூக்கிவந்ததும் சுப்ரமண்யவேஷம்போட்ட பையன்முதல் சகல சிநேகிதர்களும் தன்னைக் கெஞ்சிக்கேட்டதும் திரைப்படத்தில் வருவதுபோல் ஒன்றின்பின் ஒன்ருக வந்து அவளுடைய கண்முன்பு தாண்டவமாடி நினைவையே கவர்ந்துவிட்டன. ஏற்கனவே இந்த வாழ்க்கையில் வெறுப்புற்றிருந்த உள்ளத்தில் பின்னும் தீவிரமான வெறுப்புதான் ப்ரதானமாய்த் தோன்றி உலுக்கியது.

19

"மகாராணி! தாங்கள் இங்கேயா நிற்கிறீர்கள்? சங்கீத உபாத்தியாயர் வந்து அரைமணியாகக் காத்திருக்கிருரே. வரவில்லையா?" என்று மஞ்சுளா கேட்டபிறகுதான் வீரலக்ஷ்மிக்குத் தான் இத்தனை நேரம் அங்கு நின்றதும் தன்னை மறந்து பழைய நினைவுகளில் மெய்மறந்து தோய்ந்திருந்ததும் நினைவுக்கு வந்தது. மஞ்சுளாவிடம் பதில் பேசாமல் நேரே தன் விடுதிக்குவந்தாள். அப்போதிருந்த அவளுடைய நிலைமையில் சங்கீதம் பாடுவதற்கு மனம் இசையவில்லை. உபாத்தியாயரைப் போகச்சொல்லிவிடுவது என்றே தீர்மானித்துக்கொண்டாள்.

இதற்குள் உபாத்தியாயர் மகாராணிக்கு மரியாதையைச் செய்துபின் அவளுடைய சோர்வையும் தளர்வையும் கண்டு சற்று கலங்கியவராய், "மகாராணீ! தேக அசுகம் ஏதாவது உண்டாகியிருக்கிறதா! தங்களைப்பார்த்தால்...என்றுமுடிப்பதற்குள் "ஆம்.என்னைப்பார்த்தால் நோயாளியைப் போலத்தான் தோன்றும். உபாத்தியாயரே! இன்று நான் பாடப்போவதில்லை; தாங்களே சற்று நேரம் பாடுங்கள். நான் கேட்கப்போகிறேன்''என்ருள் கம்பீரமாக.

உடனே பாட்டு உபாத்யாயர் அந்த நேரத்திற்குத் தகுந்த ராகத்தைப்பாடி ஒருபாட்டை ஆரம்பித்தார். அந்தப் பாட்டைக் கேட்டவுடனே வீரலக்ஷ்மியின் சின்னஞ்சிறு உள்ளத்தில் பழைய திவானின் நினைவுதான் பளிச்சென்று உண்டாகியது. இதே பாட்டை திவான் அடிக்கடி பாடி அர்த்தம் சொல்வார். அதாவது:—

"பகவானையே நம்பு. சத்தியத்தின்மீதே நட. ஆத்திரத்தை அடக்கு. பாபச் செய்கைக்கு உன்னுள்ளத்தைப் பறி கொடுக்காதே. நீ பிறக்கும்போது உன்னுடன் கூட எதுவும் வரவில்லை. நீ இறக்கும் பொழுது உன்னுடன்கூட எதுவும் போகப்போவதில்லை. நீ செய்யும்புண்ணியமும் பாவமும்தான் உன்னைப் பின்தொடரும். உன்னுள்ளத்தைப் புனித தேவாலயமாகச் செய்துகொள்ளு. அதில் அசுத்தங்களை நிரப்பாதே"...

என்றதுபோன்ற உயர்ந்த அர்த்தங்கள் அமைந்த பாட்டாகும்.

அதைக் கேட்டதும் திவானின் நினைவு வந்ததால் மகாராணியை சில நிமிஷங்கள் ஏதோ செய்துவிட்டது. பிறகு சற்று சமாளித்துக் கொண்டு, "வாத்யாரே! இந்த பாட்டு பழைய திவானுக்கு மிகவும் ப்ரியமல்லவா... அந்த மகானுபாவன் இப்போது எங்கிருக்கிறார் தெரியுமா!" என்றாள்.

உபாத்தியாயரின் முகம் பயத்தினாலும் அதிர்ச்சியினாலும் மாறி நடுங்குவதை ஒருக்ஷணத்திலறிந்த வீரலக்ஷ்மி அவரை உற்று நோக்கினாள். அவர் பயப்படுவதை யூகித்தறிந்ததோடு ஏதோ ரகஸியமான விஷயம் இருக்கவேண்டும், அதனால்தான் இப்படிப் பார்க்கிறார் என்று புரிந்துகொண்டு "உபாத்யாயரே; பயப்படவேண்டாம். விஷயம் எதுவாயினும் சொல்லுங்கள். உமக்கு யாதொரு தீங்கும்இன்றி நான் பார்த்துக்கொள்கிறேன். கட்டாயம் உமக்கு அது விஷயமான தகவல் தெரியுமென்றே தோன்றுகிறது. சொல்லும் சொல்லும்" என்றாள் ஆவலுடன்.

அருகிலிருந்த தாதி மஞ்சுளா இந்த வார்த்தையைக்கேட்டதும் திடுக்கிட்டு நடுங்கினாள்! உபாத்தியாயரைப் பார்த்து ஏதோ ஜாடைசெய்கிறாள். வீரலக்ஷ்மியின் அழுத்தமான கேள்வியின் த்வனி மஞ்சுளாவைக் கலக்கியதால், ஒரே ஓட்டமாக வள்ளியம் மாளிடம் சென்று விஷயத்தைத் தெரிவித்து அடுத்தக்ஷணமே அவளுடன் இங்கு வந்தாள். சற்றும் எதிர்பாராத திடும் ப்ரவேசமாய் தாயைக்கண்டு வீரலக்ஷ்மி கடுகளவுகூடப் பயப்பட வில்லை. ஆனால், உபாத்யாயரின் உள்ளம் துடிக்குற்று நடுங்கியது.

இங்கு வந்த வள்ளியம்மாளைப் பார்த்த உபாத்தியாயர் எழுந்து மரியாதைசெய்து வணங்கிப்பின் "தாயே!" என்று அழைத்து ஏதோ சொல்வதற்குள், அவளே முந்திக்கொண்டு "குழந்தைக்கு உடம்பு சரியில்லை, இன்று பாட்டு வேண்டாம். நீர்போய் வரலாம்" என்று உத்திரவிட்டதோடு மிடுக்காக அவரைப்பார்த்தபார்வையில் அவர் பயந்து நடுங்கி ஒரேக்ஷணத்தில் அவ்விடத்தை விட்டு மறைந்துவிட்டார்.

வீரலக்ஷ்மிக்கு அன்று திவான் சென்ற காக்ஷியே மனக்கண் முன் தோன்றியது. "சரி! நாம் வயது நிரம்பப்பெறாத சிறுமி என்பதால் இவர்கள் தம்தம் இஷ்டம்போல் ஏதேதோ ஆட்சியை நடத்துகிறார்கள் என்பது நன்றாகத் தெரிகிறது. இருக்கட்டும்.

எப்படித்தான் இதன் எல்லை முடிகிறது என்பதைப் பார்த்துவிட லாம். இப்போது எதுவும் பதில் பேசவேண்டாம். என் வயது நிதானமாக வளர்கிறதுபோலவே என்னறிவும் உணர்ச்சிகளும்கூட நிதானமாக வளர்வதாக எண்ணுகிறார்கள். அவ்வெண்ணம் அப் படியே இருக்கட்டும். அதற்கேற்றமாதிரியே நான் நடக்கிறேன்" என்று தனக்குள் எண்ணியவளாய் பதில் பேசாமல் மவுனமாகவே சோபாவில் சாய்ந்திருந்தாள்.

அதே சமயம் மந்திரி ப்ரபாகர் அங்குவந்தார். அவரைத் தொடர்ந்து இரண்டு பெரிய பெட்டிகளைத் தூக்கிக்கொண்டு இரண்டு ஆட்கள் வந்தார்கள். ப்ரபாகர் மகாராணிக்கு மரியாதைசெய்து பின் "மகாராணீ! இதோ! இந்த இரண்டு பெட்டிகளிலும் புடவை களும் வைர நகைகளும் புதியபுதிய மாதிரியில் கொண்டுவந்திருக் கிறேன். இதில் தங்களுக்கு எது பிடிக்கிறதோ அதை எடுத்துக் கொள்ளுங்கள்" என்று பிரித்துவைத்தார்.

கண்களைக் கவரும் ஆடைகளையும் ஆபரணங்களையும் பார்த்த வுடனே மகாராணியின் முகத்தில் அபரிமிதமான ஆர்வமும் களை யும் உண்டாகும் என்று மந்திரியும் வள்ளியும் எதிர்பார்த்ததற்கு நேர்விரோதமாக எத்தகைய மாறுதல்களும் உண்டாகாமல் சாதா ரணமாகவே காணப்பட்டது கண்டு ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு ப்ரமித்தார்கள். இதையும் வீரலக்ஷ்மி கவனிக்காம லில்லை. ஆனால், அதை வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல் "அடாடா!...பிறந்தநாள் கொண்டாட்டத்திற்காக இந்த ஆடை ஆபரணங்கள் கொண்டுவந்தீர்களா! பேஷ்! மிகவும் நன்றாக இருக் கிறது. இரண்டு பெட்டிகளில் உள்ளதையும் அப்படியே எடுத் துக்கொள்ளுங்கள். நான் விதவிதமான உடைகளையும் நவநவ மான ஆபரணங்களையும் நிமிஷத்திற்கு நிமிஷம் அணிந்து இன்புறு கிறேன். இங்கேயே வைத்துவிட்டுப்போங்கள்" என்று கூறிய வாறு ஒரு சேலையை எடுத்து உடுத்திப் பார்த்தாள்.

இதைக்கண்டு சந்தோஷப்பட்ட வள்ளியம்மாள் "கண்மணீ! இதைவிட உயர்ந்த ஆடையாபரணங்களை மந்திரியார் அவர்கள் உனக்கு நிச்சயதார்த்தத்தன்று கொடுக்க வாங்கிவைத்திருக்கிறார். அதுவும்இதுவும் அவருடைய சொந்தசெல்வத்திலிருந்து உனக்குப் பரிசாக வாங்கியிருக்கிறார். உன்னிடம் அவருக்குள்ள அன்பின் அளவைக் கூறவேமுடியாது. அத்தனை உச்சத்திலிருப்பதால் உன்னை அரைக்ஷணங்கூடப் பிரியக்கூடாதென்கிற ப்ரீதியால் தன் மகனுக்கே விவாகத்தைச் செய்துகொள்கிறார்"...என்று தனக்குச் சமயம் வாய்த்தபோது தனது அபிப்ராயத்தைச் சொல்லிவிட வேண்டும் என்ற பேராவலுடன் கூறினாள்.

ஆனால், வீரலக்ஷ்மி முன்போல் எதிர்க்கவும் இல்லை. பதில் பேசவுமில்லை. சகலத்தையும் கேட்டுக்கொண்டு ஒரு சிரிப்பு சிரித்த படியே மவுனம் சாதித்தாள். இவளுடைய கோபம் சிறிது சாந்தி யடைந்ததோடு தன் தகப்பனைப்பற்றிய நினைவையும் முற்றது

விட்டதாக வள்ளியம்மாள் திட்டமாய் நினைத்துக்கொண்டாள். இதற்குள் ப்ரபாகர் வீரலக்ஷ்மியைப் பார்த்து "மகாராணி! இதில் உள்ள உயர்தரப் புடவைகளில் ஒன்றைப் பொறுக்கி அதை அன்று ஊர்வலத்திற்குக் கட்டிக்கொள்ளவேண்டும்" என்று முடிப்பதற்குள், வீரலக்ஷ்மி "மந்திரியாரே! ஊர்வலத்திற்குச் சகல ஏற்பாடுகளும் முடிந்துவிட்டதா? என்முன்னோர்களில் இம்மாதிரி ஊர்வலத்திற்கு எப்படி உடையணிந்தார்கள், எப்படி அலங்காரம் செய்துகொண்டார்கள் என்பதற்கு ஏதாவது ஆதாரம் இருக்கிறதா? என் முன்னோர்களின் புகைப்படப் புத்தகங்களை முன் பொருதாம்பார்த்தேன். அவைகளைக் கொண்டு வரச்சொல்லுங்கள்" என்றதைக்கேட்டு த்ருப்தியடைந்த வள்ளியம்மாள் அப்படியே அனுப்புவதாகச் சொல்லிவிட்டுப் போய்விட்டாள்.

வீரலக்ஷ்மி வழக்கம்போல் மாலை நேரத்தில் தோட்டத்திற்கு உலாவச் சென்றாள். கூடவரும் தாதிகளும் தோழிகளும் பின் தொடர்ந்தார்கள். சில தினங்களாகவே வீரலக்ஷ்மி ஓடியாடி விளையாடுவதில்லை, பாடி மகிழ்வதுமில்லை, தன்னந்தனியே சுற்றுவதும் பளிங்காஸனத்தில் வீற்றிருந்து ஏதாவதொரு உயர்ந்த புத்தகத்தைப் படிப்பதும் எழுந்துபோவதுமே வழக்கமாகிவிட்டது.

அன்று அதேபோல் தன் முன்னோர்களின் புகைப்படங்களைப் பார்த்தபடியே தனிமையில் வீற்றிருந்தாள். சேடிகளும் தாதிகளும் தூரச்சென்று ஏதோ ரகஸியமாகப் பேசிக்கொண்டிருந்ததை ஜாடையாக அறிந்த வீரலக்ஷ்மி மெல்ல எழுந்து ஓசைசெய்யாமல் மறைந்து மறைந்து ஒரு மரத்தின் மறைவில் நின்று என்ன பேசுகிறார்கள் என்பதை வெகு கூர்மையான பாம்புச் செவியுடன் கவனித்தாள்.

தாதி:—சுகுணு! இன்றைய நாடகங்களை நீங்கள் கவனித்தீர்களா! முதலில் பாட்டு வாத்தியாருக்குச் சனியன்பிடித்து அவரை விரட்டியாயிற்று. இனி அவர் வரமாட்டார். க்ரகணம் எப்போது தனக்கும் பிடிக்குமோ என்று அவர் பயந்துகொண்டுதான் இருந்தார். அது பலித்துவிட்டது.

சுகுணு:—கோகிலா! மகாராணியின் போக்கைப்பார்த்தயா? எனக்கு ஏதோ சந்தேகமாகவே இருக்கிறது. அவர்களுடைய தாயாரின்நடத்தையும் செய்கையும் இவர்களுக்கும் வெறுப்பாகவே இருக்கிறது.

மதுரம்:—உண்மைதான். இந்த சாதாரண விஷயத்திற்கே இப்படி இருக்கிறார்களே! அவர்களுடைய தகப்பனரின் விஷயம் தெரிந்துவிட்டால் இன்னும் என்னமாய்ப் பொறுப்பார்களோ?

கோகிலா.—இன்று தன் தகப்பனரைப்பற்றிக் கேட்டதற்குத் தாயார் தகுந்தபதிலே சொல்லவில்லை. நானும் தூரவிருந்து பார்த்துக்கொண்டுதானிருந்தேன். அதை எப்படித்தான் மறைத்து அரசம்பட்டிக்ராமத்திற்குப் போயிருப்பதாகவே சொன்னர்கள் தெரியுமா?

சுகுணா:—என்ன அநியாயம்! எத்தனை நாளைக்குத்தான் இந்த விஷயத்தை மறைக்க முடியும்? என்றைக்குஇருந்தாலும் இதுவெளியாகவேண்டியதுதானே: கட்டிய கணவனைக்கூட அலக்ஷியம் செய்து அவமதித்து விலக்கும்படியான புத்தி இம்மாதிரிபட்டமும்பணமும் பதவியும் உண்டாகிவிட்டால் ஏற்பட்டுவிடும்போலிருக்கிறது!

கோகிலா:—பட்டம்பதவிபெறப் பாடவில்லை. தங்கப் பதக்கத்தை என்றும் நாடவில்லை—என்று ஒரு கவியோகி எப்படியோ பாடிவிட்டார். பட்டமும் பதவியும் வந்த மறுக்ஷணமே பதித்ரோகம் செய்ய இத்தகைய பாவிகள் காத்திருக்கையில் உலகத்தில் நியாயமாவது நன்மையாவது எப்படிக்கிடைக்கும்? பெற்ற பெண்ணையே பார்க்கவிடாது எத்தனையோ நாட்களாகத்தடுத்துவிட்டதுமன்னியில் அவருக்குப் பயித்தியம்பிடித்துவிட்டதாக பொதுமக்களறியும் படிக்குச்செய்து பயித்தியக்கார ஆஸ்பத்திரியிலல்லவா போட்டுவிட்டாள்! இந்த அக்ரமத்தைத் தெய்வம் பொறுக்குமா?

சுகுணா:—இதோ பாருங்கள்! நம்ம தொழிலுக்கும் சீட்டு கிழிந்துவிடப்போகிறது. எது எப்படிப்போனால் நமக்கென்ன? இதைப்பற்றிப் பேச்சே எடுக்கக்கூடாது. பேசுகிறவர்களைஎல்லாம் வேலையைவிட்டுத் தள்ளப்படும் என்று உத்திரவிட்டிருக்கிறார்கள். வீணாக ஏன் பேசவேண்டும்? மகாராணியின் காதில் பட்டால் கட்டாயம் நம் தலை கீழேஉருண்டுவிடும்படி அந்தவள்ளியம்மாள் செய்துவிடுவாள். நமக்கேன் இந்தவம்புகள்? நீயாவது கல்யாணமாகாதவள். எனக்கு வேலைபோனால் என் கணவனுக்கும் சேர்ந்து போய்விடும்...

மதுரம்:—ஆமாம்! இந்த இடம்விட்டால் இன்னொரு இடம் பகவான் வழிகாட்டாமலாபோவான்?...அது கிடக்கட்டும். மகாராணியின் பிறந்தினத்திற்கு ஊர்ஜனங்கள் உத்யோகஸ்தர்கள் முதலிய சகலமானபேர்களும் கட்டாயத்தின்பேரில் ஆளுக்கு இத்தனை ரூபாய் கட்டி மரியாதை செய்யவேண்டும்; செய்யாதவர்களுக்கு அபராதம் விதிக்கப்படும்!...என்று வேறு ரகஸியமாய்க் கட்டளை போயிருக்கிறதாம். பாவம்! ஏழைஜனங்கள் என்னசெய்வதென்று தெரியாமல்தவிக்கிறார்கள்! சில ஏழைகள் இக்கட்டாய வற்புத்தலுக்காக தம்தம் பாத்திரம் பண்டங்களைக்கூட விற்று திவானின் கீழே உள்ள அதிகாரிகளிடம் செலுத்துகிறார்கள். இதென்ன அக்ரமம்?...

சுகுணா:—இந்த ஆட்சியில் சகலமும் நியாயமாக நடக்கிறதே. இதொன்றுதான் அக்ரமமா? மஞ்சுளா இருக்கிறாள் பாரு! வள்ளியம்மாளின் சகல ஆட்சிக்கும் உடந்தை. அவளுடைய கணவன்தான் அந்தம்மாளின் கையாள். அவளுக்கு யாரைப்பிடிக்கவில்லையோ அதை மஞ்சுளா வத்திவைக்கவேண்டியதுதான் பாக்கி. உடனே வெளியேற்றம்தான்...ஆமாம்! மந்திரிபிள்ளைக்கு நம் மகாராணியை கல்யாணம்செய்யப்போகிறார்களாமே, இதென்ன வெட்கக்கேடு? அந்த முரளிகிருஷ்ணன் அழகாகத்தானிருக்கிறான். இருப்பினும் ஒரு கண் பொட்டையாயிற்றே. அதோடு மகா

ராணியை ஒரு மகாராஜன் மணக்கவேண்டுமேயன்றி மந்திரியின் மகனுக்குக் கொடுப்பதானது சரியானமுறையா?

இதற்குமேல் வீரலக்ஷ்மியால் அங்கு நிற்கவேமுடியவில்லை. இதயம் துடிக்கிறது. தலைமேல்பெரும் எரிமலையே விழுந்துவிட்டது போல் ஒரு அதிர்ச்சி உண்டாகி மெல்ல ஓசைசெய்யாமல் தன்னுடைய பளிங்காஸனத்திலேயே வந்தமர்ந்தாள். அவுட்பாணத்திலிருந்து நெருப்புப்பூக்கள் தெறித்துக்கிளம்புவதுபோல் இங்கு கேள்விப்பட்ட விஷயங்கள் அவளை அப்படியே எரிமலையில் தூக்கிப் போட்டதுபோலாக்கிவிட்டன.... என் பிதாவுக்கா பயித்தியம் பிடித்திருக்கிறது! அவரையா பயித்தியக்கார ஆஸ்பத்ரியில் போட்டிருக்கிறது? ஐயையோ! இந்த அக்ரமத்தை மறைத்தா என்தாய் பேசினுள்!...என்ற அதிர்ச்சி தாங்கமுடியாது மனம் தவித்தது.

20

நாட்கள் நெருங்க நெருங்க கஜேந்திரபுரியின் வீதிகளில் பந்தலும் அலங்காரமும் ஆங்காங்கே மகாதோரணங்களும் தீபாலங்காரஜோதியும் தடபுடல்பட்டு ஒரே ப்ரகாசத்தில் மூழ்கிக்கிடக்கின்றது. ஆனல் வீரலக்ஷ்மியின் உள்ளத்தில் அந்தகாரமும் அதையொட்டிய அபாரமான ஏக்கமும் குடிகொண்டிருக்கும் ரகஸியம் அவளைப்படைத்த பரமனுக்குத்தான் தெரியும். அவள் தன்னுடைய விசனத்தை வெளியிடவே இல்லை. நாளைக்கு மறுதினம் அவளுடைய பிறந்த நாள்.

அன்று நந்தவனத்தில் தான் அதிர்ச்சிகரமான விஷயம் எதையும் அறிந்துகொண்டதாகவே அணுவளவும் காட்டிக்கொள்ளவில்லை. இப்பொழுது ஏதாவது கலாட்டா செய்தால் காரியங்கள் கெட்டுவிடுமோ என்கிற யோசனையும் தோன்றியதால் பொறுத்தார் பூமியாள்வார் என்கிற தத்துவவாக்யத்தை மறக்காமல் எண்ணிவந்தாள். அன்று பாட்டுவாத்தியார் நிறுத்தப்பட்டபிறகு, மறுநாளே வேறொரு பாட்டு வாத்தியார் வந்துவிட்டதைப்பார்த்ததுமே வீரலக்ஷ்மிக்கு தாதிகள் பேசிக்கொண்டது உண்மை என்று தெரிந்துவிட்டது. புதிதாக வந்த வாத்தியாரிடம் இவளுக்குச் சற்றும் பிடிக்கவில்லை. எனினும் தனது மாறுதலை வெளியிடக் கூடாதென்கிற எண்ணத்தினல் மவுனம் சர்வார்த்த ஸாதகம் என்றபடி மவுனமே அனுஷ்டித்தாள்.

வள்ளியம்மாளின் ஆனந்தம் எல்லை மீறிக் கொந்தளிக்கின்றது. தானே வீரலக்ஷ்மிக்கு ஜடைபோட்டு அலங்காரம் செய்துவிடுவதற்காக வந்தாள். வீரலக்ஷ்மி ஆழ்ந்த யோசனையிலிருப்பதைக் கண்டு "கண்மணி! என்னம்மா வெகு கவனத்துடன் யோசிக்கிறாய்! எங்கெங்கிருந்தோ ராஜாக்களெல்லாம் ஏராளமான பரிசுகளை உனக்கு ராஜதூதர்கள்மூலம் அனுப்பியிருக்கிறார்கள். சில

அரசர்கள் நேரிலேயே வந்திருக்கிறார்கள். அந்த வைபவத்தைக் காணக்கான உன்னைப் பெற்ற மகாபாக்யத்தையும் என்பெருமை யையும் நினைத்துப் பூரிக்கின்றேன்" என்றாள்.

வீர:—எம்மா! அப்பா வந்துவிட்டாரா! இந்தவைபவத்தை அவரல்லவா பார்த்து மகிழவேண்டும்! எப்பொழுது வருவார்?

வள்ளி:—நாளைக்கு வந்துவிடுவார் என்று நினைக்கிறேன் கண்ணு! நீ இந்த சமஸ்தானத்திற்கு வந்து இத்தனை வருஷமாகியும் உன் பிறந்த தினத்தை இத்தனை சிறப்புடன் இதுபரியந்தம் நடத்தவே இல்லை. இதுதான் உனக்கு 15—வது பிறந்த நாளாகையால் நீ இனி முடிசூட்டிக்கொண்டு செங்கோல் செலுத்தப்போகும்... கல்யாணம் செய்துகொள்ளும் வருஷமாகையால் மந்திரியார் தடபுடலாகச் செய்யவேண்டுமென்று திட்டம்வகுத்தார்.

இடை மறித்து "எம்மா எனக்கு 15 வயது முடிந்து நாளை மறுநாள் பதினாறுவது வயது ஆரம்பிக்கப்போகிறதா!

வள்ளி:—ஆம் கண்ணே! இந்த கஜேந்திரபுரியில் அரசவம் சத்தில் வம்சவாரிசாக வரும் வழக்கமில்லை பாரு. ஆகையால் உன்னைப்போல் அதிர்ஷ்டதேவதைகளாக வருகிறவர்களுக்கும் சரி. உனக்குப் பிள்ளை பிறந்து வாரிசுக்கு வந்தாலும் சரி. 16-வது வயதில் விவாகத்தைச் செய்வது இந்த நாட்டின் சட்டம். ஆகை யால்தான் இந்த பிறந்ததினத்தைச் சிறப்பாகச் செய்துப் பிறகு கல்யாணம் சகலமும் நடத்திவிடத் தீர்மானித்திருக்கிறார்...

இதற்கு வீரலக்ஷ்மி பதிலே பேசவில்லை. சற்று நிதானித்த பிறகு "எம்மா! நமது அரசம்பட்டிக்ராமத்துமக்களை வரச்சொல்லி அழைப்பு அனுப்பினீர்களா?" என்றாள், "ஆகா!" என்றவார்த்தை யுடன் தலையைஆட்டிய வள்ளியம்மாள், தானே ஜடை போட்டு விட்டுப் போய்விட்டாள். வீரலக்ஷ்மியின் உள்ளத்தில் பலபல யோசனைகள் அலைமோதுவதுபோல் மோதி உருவடைகின்றன. "என் பிதாவின் கதி இப்படியா ஆகியிருக்கிறது. ஏன் அவருக்குப் பயித் தியம் பிடிக்கவேண்டும்? அப்படிப் பிடித்திருப்பினும் அதை ஏன் அம்மா என்னிடம் மறைத்துவைத்துப் பேசவேண்டும்? இதில் என்ன மர்மமிருக்கிறது?" என்ற எண்ணமே அன்றுமுதல் மேல் நோக்கிச் சதா வேலை செய்துகொண்டிருந்தது.

எதனாலோ அன்றிரவு அவளுக்குத் தூக்கமென்பதே பிடிக்காமல் புரண்டுகொண்டிருந்தாள். மணிக்கூண்டில் மணி சரியாக இரண்டடித்தது. உடனே பாராக்காரர்கள் தம்தம் கடமைப்படி "பாராஉஷார்! பாராஉஷார்!!" என்று சத்தமிட்டார்கள். மகாராணி யின் சயனஅறைப்பக்கம் காவல்புரியும் கிழவன் மணிக்குமணி எட் டிப் பார்த்துவிட்டுக் கூச்சலிட்டால் எங்கே மகாராணி விழித்து விடுவார்களோ என்கிறதால் ஓசைசெய்யாமல் போய்விடுவது வழக்கம். அதேபோல் எட்டிப்பார்க்கும்போது மகாராணி கதவருகில் நின்று வாசற்படியில் சாய்ந்தபடியே வெளியில் ஆகாயத்தைப் பார்த்தவாறு இருப்பதைக்கண்டு திடுக்கிட்டான்.

18341

பிரிய சகோதரிகளே!

நான் ஓர் நர்ஸ் அல்ல, டாக்டரும் அல்ல. எனக்கும் வைத்தியமும் தெரியாது. நானோ உங்களைப்போல் ஓர் குடித்தனப் பெண். எனது கல்யாணமான ஒரு வருடத்திற்குப் பின் துர்ப்பாக்யத்தினால் லிகோரியாவும் (வெட்டை) சூதக வியாதியும் ஏற்பட்டுவிட்டது. மாதவிடாய் நின்றுவிட்டது. அவ்வாறு ஏற்பட்டாலும் மிகுந்த வேதனையுடன் சொற்பமாகவே வெளி வந்தது. வெள்ளை நீர் (ஸ்வேதப்ரதர்) அதிகம் வெளிவருவதால் தினம் தினம் மிகவும் பலவீனமும் அதிகரித்துக் கொண்டு வந்தது. முகம் வெளுத்துவிட்டது. வீட்டு வேலை செய்யவும் முடியவில்லை. எப்பொழுதும் தலை கிறுகிறுப்பு இருந்து வந்தது. இடுப்பு வலியும் ஏற்பட்டு என் சரீரமே கெட்டுவிட்டது. என் கணவர் நூற்றுக் கணக்கான ரூபாய் செலவு செய்து மருந்து வாங்கிக் கொடுத்தும் பலன் இல்லை. இரண்டு ஆண்டுகள் மிகுந்த துக்கத்துடன் ஓடி மறைந்தன. நல்ல காலமாக ஒரு நாள் ஓர் சந்நியாசி பிச்சைக்காக என் வீட்டு வாசலில் நின்றுகொண்டிருந்தார். நான் பிச்சை போட வெளியில் வந்ததும் அவர் என் முகத்தைப் பார்த்து, "அம்மா, உனக்கு என்ன வியாதி? இந்த வயதிலே உன் முகம் பஞ்சு போன்று இருக்கிறதே?" என்றார். நான் முழு விருத்தாந்தங்களையும் கூறினேன். அவர் என் கணவரைக் கூப்பிட்டு ஓர் மருந்து சொன்னார். அம்மருந்தை 15 தினங்கள் சாப்பிட்டதும் என் முழுவியாதியும் தீர்ந்துவிட்டது. ஆண்டவன் அருளால் இப்பொழுது நான் பல குழந்தைகளுக்குத் தாயாக இருந்து வருகிறேன். இம்மருந்தினால் நூற்றுக்கணக்கான பெண்களுக்கு நன்மை செய்துவருகின்றேன். இந்த அற்புத மருந்தை இக்கொடிய ரோகத்தினால் வாடும் என் சகோதரிகளின் நன்மைக்காகவே அசல் விலைக்குக் கொடுத்து வருகிறேன். ஆண்டவன் எனக்குப் போதிய செல்வம் அளித்திருக்கிறார். அதன் மூலம் நான் லாபம் சம்பாதிக்க விரும்பவில்லை. ஒரு பெண்ணிற்கு 15 தின மருந்தின் அசல் விலை ரூ. 2—14—0. [ரூபாய் இரண்டு அணா பதினான்கு] செலவு தனி.

இத்துஷ்ட ரோகத்தினால் பீடிக்கப்பட்டவர்கள் உடனே எழுதுங்கள். என் கையால் மருந்து தயாரிக்கப்பட்டு வி. பி. பி மூலம் அனுப்புகிறேன். தர்மத்தின் பொருட்டு அசல் விலைக்கே மருந்து கொடுக்கப்படுகிறது. அவசியம் கவனிக்க: இந்த ரோகத்திற்குத்தான் என்னிடம் மருந்து உண்டு. மற்ற வியாதியைப் பற்றிய மருந்திற்கு எழுதற்க.

SHRIMATI CHARAN PIARI
(J. M. M) SANT NAGAR, JULLUNDUR CITY.

உமா

ஆபரணங்களை எல்லா விசேஷ பண்டிகைகளிலும் உபயோகியுங்கள்.

10 வருஷம் உத்திரவாதமுள்ளது.

800 டிசைன்கள் கொண்ட கேட்லாக் இனாம்.

வி. பி. செலவு அணா 15 தனி.

உமா கோல்டு கவரிங் ஒர்க்ஸ்

மசூலிப்பட்டினம்.

JAGANMOHINI, owned and edited by V. M. KOTHAINAYAKI AMMAL is printed and published by V. M. PARTHASARATHY at the Jaganmohini Press, 26. Car St., Triplicane, Madras. 5.

Managing Editor: V. M. SRINIVASAN, M. A. B. L.